விடுதலைப்புலிகள்

03 வரலாற்றின் விளைபொருள்
04 சர்வதேசமயமாக்கப்படும் டார்பர்...
05 தீர்வுத் திணிப்பை...
06 எல்லோரதும் உதாரணமாய்...
08 இன அழிப்பும் ஈழத்தமிழர்...

குரல் – 118 ஆவணி – 2004 அன்பளிப்பு – 12/=

# சமாதானத்திற்கு எதிரான பேரினவாதக் கூச்சல்கள்

**சமாதான முயற்சிகளுக்கு எதிரான சிங்களப் பேரினவாதிகளின் முயற்சிகள் தற்போது வேகம் பெற்று வருகின்றன. சிங்களத்தின் அரசியல்வாதிகள் - படைத் தளபதிகள் - பௌத்த மதத் தலைவர் கள்... என்று சிங்களப் பேரினவாதத்தின் முக்கிய சக்திகள் சமாதானத்திற்கு எதிரான தீவிர நடவடிக்கை களில் இறங்கியுள்ளன. இந்த சமாதான விரோதக் கூச்சல்களுக்கு சிங்களப் பத்திரிகை உலகம் பரப் புரைத்தளம் அமைத்துக் கொடுத்து இனவாதப்பணி செய்துவருகின்றது.**

சமாதான முயற்சிகளின் அடிப் படை விடயமான போர்நிறுத்த உடன் பாட்டை துச்சமென மதிக்கும் வகையில் சந்திரிக்கா அம்மையாரும் - அவரது அரசும் பகிரங்கமாகவே ஈடுபடத் தொட ங்கியுள்ளன.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகு திக்குள் அரசபடைகளை அணிவகுத் துச் செல்லுமாறு பணிப்புரை வழங்கத் தயங்கமாட்டேன் என்று கூறி அம்மை யார் அவர்கள் போர்முரசு கொட்டியுள் ளார். இவரது போர் முழக்கத்திற்கு ஆதரவு தெரிவிப்பதுபோல அரச கட்டுப் பாட்டுப் பகுதிக்குள் புலிகள் அரசியல் பணி செய்ய வருவதை தடுக்கவேண்டி வரும் என்று கிழக்குப் பிராந்திய இராணு வத் தளபதி ஒருவர் எச்சரிக்கை விடுத் துள்ளார்.

எச்சரிக்கைகள் - மிரட்டல்களு க்கு அப்பால் புலிகள் இயக்க உறுப்பி னர்களை படுகொலை செய்து - புலி களைப் போருக்கு இழுக்கும் அளவுக்கு ஆத்திரமூட்டல் சம்பவங்களில் அரச படைகள் மும்முரமாக ஈடுபடுகின்றன.

தற்போதய சமாதானச் சூழலை முன்னெடுத்துச் செல்லும் வாகனமாகச் செயற்படக்கூடிய இடைக்கால தன் னாட்சி அதிகாரசபையை குறிவைத்து சிங்களப் பேரினவாதிகள் கடும் தாக்கு தல் தொடுத்து வருகின்றனர். இது சமா தானத்தின் எதிர்காலத்தையே நாசமாக் கும் அளவுக்கு தீவிரம் பெற்று வருகின் றது. இந்த சமாதான விரோத இனவாதப் பிரச்சாரங்களில் சந்திரிகா - ஜே.வி.பி கூட்டணியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி (ஐ.ம.சு.மு) வெளிப்படை யாகவே ஈடுபட்டு வருகின்றது.

தென்னிலங்கையில் ஜே.வி.பி யினர் கிராமங்கள் தோறும் சமாதான விரோதப் பிரச்சாரங்களை செய்து வரு கின்றனர். அக்கட்சியின் உயர்பீடத் தலைவர்கள் கேள்வி - பதில் பாணியில் புலிகள் இயக்கத்தின் இடைக்கால தன் னாட்சி அதிகார சபைபற்றி நச்சுப் பிரச் சாரங்களில் ஈடுபடுகின்றனர். தமிழி னத்தை இராணுவ ரீதியில் அடக்கி - ஒடுக்கவேண்டும் என்றும், புலிகள் இயக் கத்தை அழித்தொழிக்க வேண்டும் என் றும் இனவெறியூட்டும் நச்சுப் பிரச்சாரங் களை செய்துவருகின்றனர்.

இத்தகைய இனவாதப் பரப்புரை களில் அம்மையாரது சுதந்திரக் கட்சி யின் முக்கிய தலைவர்களும் - கட்சி அமைப்பாளர்களும் ஈடுபட்டுவருகின்றனர்.

அண்மையில், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள படைமுகாம் களுக்கு இரகசியப் பயணம் செய்த ஐ.ம.சு முன்னணியின் தலைவரும் பதில் பாதுகாப்பு அமைச்சருமான ரட்ணசிறி விக்கிரம நாயக்கா படைத் தளபதிகளு டன் மந்திராலோசனை நடாத்திச் சென் றுள்ளார். இது போருக்கு படையினரைத் தயார்படுத்தும் முன்னேற்பாடாகவே கரு தப்படுகின்றது.

சிறிலங்காவின் பாதுகாப்பு அமைச்சரும் போர்நிறுத்த உடன்பாட்டை கொச்சைப்படுத்தும் வகையில் - புலிகள் இயக்கத்திற்கு எச்சரிக்கைகளையும் - மிரட்டல்களையும் விடுத்து வருகின்றார். கண்காணிப்புக்குழுத் தலைவரை அழை த்து இத்தகைய இராணுவத் திமிர் கருத்துக்களை அவர் கூறிவருகின்றார்.

அத்துடன், மணலாற்றுப்பகுதி படைமுகாம்களுக்கு திடீர் விஜயம் மேற் கொண்ட பிரதமர் மகிந்த ராஜபக்ச முன் னரங்க படைநிலைகளைப் பார்வையிட்ட துடன், சிங்கள ஊர்காவற் படையின ரையும் சந்தித்து உரையாடி அவர் களுக்கு (தொடர்ச்சி 15ம் பக்கம்)



தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

# அமைதி முயற்சியும் சர்வதேசத்தின் தார்மீகக் கடமையும்

புலிகளின்குரல்

Liberation Tigers Of TAMIL EELAM

இலங்கைத்தீவின் இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் அரசியல் தீர்வொன்றைத் தேடும் முயற்சியில் சர்வதேச சமூகம் முன்னெப்போதும் காட்டாத தீவிர அக்கறையை இப்போது காட்டிவருகின்றது.

சிங்கள அரசு முன்னர் காட்டிவந்த கடும்போக்கை கண்டும் காணாமலும் இருந்துவந்த சர்வதேச சமூகம், இப்போது, சமாதானப் பேச்சைத் தொடரும்படி சிங்கள அரசுக்கு நிர்ப்பந்தங்கள் கொடுக்கத் தொடங்கியுள்ளது.

சிங்கள அரசுக்கு வழங்கும் நிதி உதவிகளை சமாதானப் பேச்சிற்கான நிபந்தனையாக விதித்து - அதை இன்றுவரை தொடரும் அளவுக்கு நிலைமை முன்னேற்றமடைந்துள்ளது.

சிங்கள அரசின் ஆண்டாண்டுகால கடும்போக்குக் காரணமாக விரக்தியடைந்துள்ள தமிழ் மக்களுக்கு சர்வதேசத்தின் இந்த நிலைப்பாடு சற்று நிம்மதியைத் தந்துள்ளது.

சிங்கள அரசு மீதான சர்வதேச அழுத்தங்கள் காரணமாகவே சமாதானச் சூழல் இன்றுவரை தொடர்கின்றது.

எனினும், இந்த சர்வதேச மனநிலையை மாற்றியமைக்க சந்திரிகா அரசு பல்வேறு அரசியல் தந்திரோபாயங்களைக் கையாண்டு பார்க்கின்றது.

சர்வதேசத்திற்கு ஜே.வி.பி யை பூச்சாண்டி காட்டியும் - தனது தீர்வுத்திட்டத்தை புலிகள் ஏற்காமையினாலேயே பேச்சுவார்த்தைகள் தடைப்பட்டுப் போயுள்ளன என்றவாறாகவும் சர்வதேச சமூகத்தை ஏமாற்ற அம்மையார் முனைகின்றார்.

சந்திரிகா - ஜே.வி.பி அரசு தமிழருக்கு எதிரான இனவெறி அரசியலையே நடாத்த விரும்புகின்றன. இலங்கைத் தீவை இரத்தக் களரியாக்கியுள்ள தமிழ் - சிங்கள இனப்பிரச்சினைக்கு நீதியான அரசியல் தீர்வொன்றைக் காணும் திட சிந்தயுடன் சிங்கள அரசு இயங்கவில்லை. அதேசமயம் தற்போது நிலவும் சமாதானச் சூழலை குழப்பியடித்து மீண்டும் போர்ச் சூழலை ஏற்படுத்தும் சதி அரசியலையே அம்மையார் நடாத்தி வருகின்றார்.

இனமுரண்பாட்டிற்கு ஒரு அரசியல் தீர்வு காணும் ஒரு அமைதிச் சூழல் எழுந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சிங்கள அரசு தனது இனவாதப் பிடிவாதத்தாலும் - படுகொலை நடவடிக்கைகளாலும் தமிழ்மக்கள் மீது போரையே திணித்து வந்துள்ளது. இம்முறையும் சிங்கள அரசு அதையே செய்துவருகின்றது.

கடந்த 25வருட போர் அரசியலால் சிங்கள அரசு எதையும் சாதிக்கவில்லை. போர்மூலம் தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது என்ற கள யதார்த்தத்தையும் சிங்கள அரசு ஏற்றுக்கொள்வதாக இல்லை. தொடர்ந்தும், இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இராணுவ அணுகுமுறையைக் கடைப்பிடிக்கும் நிலைப்பாட்டுடனேயே சிங்கள அரசு உள்ளது. ஆனாலும், தனது இந்த இராணுவவாதக் கொள்கையை வெளிநாட்டு உதவிகள் இல்லாமல் முன்னெடுக்க முடியாது என்ற உண்மையையும் சிங்கள அரசு நன்கு அறியும்.

எனவேதான் சமாதானப் பேச்சுக்கு புலிகள் இயக்கமே முட்டுக்கட்டை போடுகின்றது என்று குற்றம்சாட்டி சர்வதேசத்தைத் தன்பக்கம் இழுக்க அம்மையார் முயல்கின்றார்.

காலங்காலமாக சிங்கள அரசு செய்துவரும் இத்தகைய விசமப் பிரச்சாரங்களுக்கு சர்வதேச சமூகம் இம்முறை இடங்கொடுக்கக் கூடாது என்பதே தமிழ்மக்களின் விருப்பமாகும்.

சர்வதேச சமூகத்தின் இடையறாத முயற்சியால் கடந்த மூன்றாண்டு காலமாக நிலவிவரும் சமாதானச் சூழலை கெடுக்கமுயலும் சந்திரிகா அரசின் இராணுவவாத நிலைப்பாட்டிற்கு சர்வதேச சமூகம் ஆதரவு கொடுக்கக்கூடாது. அதேவேளை, பொருளாதார - இராஜதந்திர அழுத்தங்களை சிங்கள அரசின் மீது மேலும் இறுக்கி அதை சமாதான முயற்சிகளின் பக்கம் திருப்பிவிட முயல்வது சர்வதேச சமூகத்தின் தார்மீகக் கடமையாகும்.

இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காண்பதற்கு ஏதுவாக ஆக்கபூர்வமானதொரு இடைக்கால ஏற்பாட்டை புலிகள் இயக்கம் அரசுக்கு வழங்கியுள்ளது. இதை இருதரப்பும் முன்னெடுப்பதன் மூலம் சமாதானப் பேச்சுக்கள் தொடரவும் - தமிழ், சிங்கள மக்களின் சுபீட்சமான எதிர்காலம் சிறக்கவும் பங்காற்ற முடியும்.

தற்போது நிகழுகின்ற சமாதானத்திற்கான இந்த வரலாற்று வாய்ப்பை சிங்கள அரசு பயன்படுத்திக்கொள்ள சர்வதேச சமூகம் உதவவேண்டும் என்பதே சமாதானத்தை நேசிக்கும் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

---

செந்தோழன்

அலைகள் அமைதியாகும்
ஓய்ந்து கிடக்காது
தேய்வதாய்த் தெரியும்
நிலவுக்கு அது
நடக்காது
வங்கக் கடல்நீர்
வற்றிப் போனதாய்
வரலாறு இல்லை
நதி மாறி
ஓடியதாயும்
புவி மாறிச்
சுற்றியதாயும்
நாமறியோம்
இவைகளெல்லாம்
எங்கள்
முதல்வனுக்கான
உவமைகள்

அறியாமைப் போதும்
அமைதிக் காலத்தை
அறியாமல் இருப்பதாய்
அங்கலாய்க்க வேண்டாம்.
காத்திருப்பதிலும்
ஒரு காத்திரம்
இருக்கிறது

புலி
பதுங்கிக் கிடக்கிறதே
தவிர
பயந்து கிடக்கவில்லை

நல்லைக் கந்தன்
திருவிழா நன்றாய்
நடக்கட்டும்
மாவிட்ட புரத்தானிடம்
"அவைஎளிட்டைக்"

கேட்டுத்தான்
அனுகவேண்டும்
என்னும் விதி
இன்னுமுண்டு என்னும்
நினைவோடு

மதுகுடு மாதாவிற்கு
விழவெடுக்கச்
சென்றோரே
வெலிக்கடையில் உள்ளோர்
வெளியில் வரவேண்டுமென்று
எத்தனைபேர்
நேர்த்தி வைத்தீர்கள்

கண்டி வீதியைக்
காட்சிப் படுத்துங்கள்
வண்ண வண்ணமாய்
வாகனங்கள் ஓட்டும்
எங்கிருந்தும்
எவரும்
வந்து போகட்டும்
ஆனால் எத்தனைபேர்
இதற்காய் வீழ்ந்தார்
எனும்
எண்ணிக்கை தெரியட்டும்

கட்டடங்கள் எழுந்து
"கலாநியாக்" காட்சி
தரட்டும்
அயலவன் வீட்டினில்
இன்னும்
ஆமியுள்ளான்
என்பதும் மனதிருந்து
மறையாதிருக்கட்டும்

வெடிச்சத்தங்கள்
ஓய்ந்து கிடக்கிறது
உங்கள்
முற்றத்தில் ஏறி
விளையாடுங்கள்
மிதிவெடிகளில்
கால்களை வைக்காது

ஊதி ஊதி ஓடிய
உத்தமர்களின்
ஒரு ஊழ்கில்
இயங்கிக் கொள்கிறது
ஓடித்தள்ளுங்கள்
மீண்டும்
ஊதவேண்டும்
எனும்
எண்ணத்தை இழக்காது

மின்சாரம் வருகிறது
நன்றாகப் படியுங்கள்
வந்த படமெல்லாம்
பார்த்து முடியுங்கள்
மின்விளிப் புச்சிக்கே
தட்டுப்பாடு வரும்
கட்டமொன்று வரலாம்
எதிர்கொள்ளும்
திறன்
சரியாதிருக்கட்டும்.

போரின் ரத்தல்
தெரிந்து
சாவின் விளிக்கள்
இருகி
வாழ்வின் வசந்தம்
தொலைத்த - உங்கள்
மனதின் இருக்கும்
குலைக்கும் அமைதி
பொழுதை
அனுபவியுங்கள்

ஆனால்
மன் போர்த்தறங்கும்
உங்கள்
மைந்தர்கள் நினைத்தது
இப்போது நிலவும்
தற்கால அமைதியல்ல
எப்போதும் கிடைக்கின்ற
நிலையான மகிழ்வை
எழும்பென்று எவர்வந்தும்
தட்டாத விடை
அரசாளும் மொழியாக
ஒலிக்கின்ற தமிழை

ஆகவே
ஆரியக் கூத்தாடினாலும்
காரியத்தில்
கண்ணாயிருங்கள்

அமைதி...
அரும்பொட்டில்
நிற்கிறது.



# வரலாற்றின் விளைபொருள்

- க.வே.பாலகுமாரன் -

திரும்பத் திரும்ப எல்லாமே சொல்லியாகிவிட்டது. இவ்வுலகின் அபத்தமும் அருத்தமும் என்னவெனில் எதையுமே எப்பொழுதுமே முதலிருந்தே சொல்லவேண்டியிருப்பதுதான் என்பதற்கமைய முதலிருந்தே எல்லாம் சொல்லியாகிவிட்டது. புதிய இளைய வாசகர்களையும் மறதியுள்ளோரையும் தவிர ஏனையோருக்கு செய்திகள் எல்லாமே ஆறிய பழங்கஞ்சி போலாகிவிட்டன. இது ஏன் இவ்விதம் நிகழ்கின்றது? சிறிலங்காவின் அரசியல் எப்போதுமே ஒரு விபரீதமான குறுகிய வட்டத்திற்குள்ளே திரும்பத் திரும்ப சுழல்கின்றது. அங்கு ஆறுகள் எப்போதுமே பின்நோக்கிப் பாய்கின்றன. கடிகாரங்கள் எப்போதுமே நேற்றைய நேரத்தினையே காட்டுகின்றன. இயங்கியல் விதிக்கு மாறாக சிங்கள அரசியலாளர் எப்போதுமே ஆற்றில் பலதடவை அதே நீரிலே இறங்குவதாக எண்ணிக்கொள்கின்றார்கள்.

இதற்கான காரணமென்ன? இதுவும் திரும்பத் திரும்ப சொல்லியாகிவிட்டது. "சிங்கள மக்களை, விகாரைகளிலிருந்து முகிழ்த்தெழுந்து விசாலித்த மாயக் கருத்தியலொன்று பிடித்தாட்டுகின்றது.... இது பல்லின, பலமத பல சூட்சிப் புயல்கள் என்கிற தன்மையை முற்றாக நிராகரிக்கின்றது. இம்மேலாதிக்க கருத்தியல்போக்கு சிங்களவர்களை எங்கே இட்டுச்செல்கின்றது? இப்போக்கு காலப்போக்கில் ஏனைய இனங்களை ஒடுக்கும் விபரீத போக்குகளை ஏற்படுத்தி தமிழ்மக்களை சொல்லொணா அவலத்திற்குள் தள்ளியது. ஒரு பெரும் போரை நடத்தவைத்து எல்லோரையுமே அழிவின் விளிம்பிற்குள் தள்ளியது. ஐதீகவியலொன்றை அடிப்படையாகக் கொண்டு அரசியல், உளவியல், பண்பாட்டியல் எல்லாமே கலந்த மிகுந்த அபாயகரமான மாயக்கோட்டையை அரசியலாளர்களும் பௌத்த மதபீடங்களும் இணைந்து உருவாக்கினர். இக்கோட்டையை முற்றுகையிடும் எதிரியாக தமிழரை உருவகித்து, ஒரு கற்பனையெதிரியை கண்டுபிடித்து அவர்களை அழிக்க அதிநவீன கொல் கருவிகளைக்கொண்ட பெரும் படையை உருவாக்கி பாரிய போரை சிங்கள மக்களின் நன்மைக்காக நடத்துவதாகக் கூறி நடத்தினர். எல்லாமே நடத்தி முடிக்கப்பட்ட பின் என்ன மிஞ்சியுள்ளது?"(01)

இப்பொழுது மீண்டும் அதே கேள்வி எல்லாமே முடிந்த பின்னரும் எழுகின்றது. போரா? சமாதானமா? எப்போதுமேயுள்ள கேள்வி. எப்போது எழும்பிய கேள்வி? பொதுவில் இக்கேள்வியை ஜே.ஆர் எழுப்பியதாக கூறப்படுகின்றது. அடக்குமுறையின் கொடூரம்

> இப்பொழுது மீண்டும் அதே கேள்வி எல்லாம் முடிந்த பின்னரும் எழுகின்றது.
> போரா? சமாதானமா? எப்போதுமேயுள்ள கேள்வி. எப்போது எழும்பிய கேள்வி?
> பொதுவில் இக்கேள்வியை ஜே.ஆர் எழுப்பியதாகக் கூறப்படுகின்றது.
> அடக்குமுறையின் கொடூரம் தாங்காமல் தமிழ் இளைஞர் கரந்துறை முறையில்
> ஆங்காங்கே சில தாக்குதல்களைத் தொடுத்தபோது
> பெரும் படையைக் கொண்ட அரசு சார்பில் ஜே.ஆர் அன்று வினவினார்.
> எது வேண்டும் உங்களுக்கு? போரா, சமாதானமா?

தாங்காமல் தமிழ் இளைஞர் கரந்துறை முறையில் ஆங்காங்கே சில தாக்குதல்களைத் தொடுத்தபோது பெரும் படையைக்கொண்ட அரசு சார்பில் ஜே.ஆர் வினவினார். எது வேண்டும் உங்களுக்கு? போரா, சமாதானமா? இரண்டிற்குமே நான் தயார். ஆனால் உண்மையிலே எதற்குமே தமிழ்மக்கள் அன்று தயாராக வில்லை. ஆயினும் அவர்கள் அடிமனதில் ஜே.ஆர் கூறிய கூற்றொன்று ஆழமான வடுவை உருவாக்கியது. "அவர்களுடைய உயிர்களைப் பற்றியோ, அவர்கள் என்ன எண்ணுகிறார்களோ என்பதுபற்றி எனக்கென்ன கவலை?" (11.07.1983 இலண்டன் டெய்லி ரெலிகிராப் செவ்வி)

ஆனால் எப்போது உருவாகியது போர்? எவர் மனதிலே போர் வடிவம் பெற்றது? ஒரு காட்சிக் கோலமிது. 1956ஆம் ஆண்டு யூன் 05ஆம் திகதி; சிங்களம் மட்டும் சட்டமாக்கப்படுவதற்காக நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவிருந்த நாள்; தமது எதிர்ப்பினை அமைதி வழியில் காட்டுவதற்கு ஏறத்தாழ 300 தமிழரசுக் கட்சித் தொண்டர்கள் காலிமுகத்திடலின் ஒரு பக்கத்திலிருந்து இரு அணிகளாக வகுத்து நாடாளுமன்று நோக்கி அணியாக புறப்பட இருந்தவேளை; அப்போது போர்ப்பிரகடனம் செய்யப்பட்டது; ஒருதரப்புப் போரின் தொடக்கம்; பேரணி தடுக்கப்பட்டு அணியினர் அமைதியாக இருந்தவேளை எகிறிப் பாய்ந்தனர் சிங்களக் காடையர்; அமைதி காத்தனர் சிங்களப் பொலிசார்; பார்வையாளராகினர் பண்டா உட்பட்ட சிங்கள அரசியல்வாதிகள்; அங்கே நிகழ்ந்தது போரொன்று; பி.ப 2.00மணி நாடாளுமன்றில் சிங்களம் மட்டும் மசோதாவாக முன்வைக்கப்படும் வேளை; காடையரின் கல்லெறியால் குருதி வழிந்த வட்டுக்கோட்டை அமிர்தலிங்கத்தை வவுனியா சுந்தரலிங்கம் நாடாளுமன்றிற்கு அழைத்துச் செல்கின்றார்; அப்போது நிகழ்ந்தது அநாகரீகத்தின் உச்சம்; தமிழர் குருதிகண்டு ஆனந்தப் பெருக்கு; கேலி, கூக்குரல் நடுவே குரலொன்று கேட்கின்றது; குரலில் ஏளனம் கொப்பளிக்கின்றது; போரின் விழுப்புண்கள் (Wounds of war) தாங்கி வருவாரே வருக.(02) யாரின் குரல்? இது காலத்தின் குரல். போரின்றி விழுப்புண் வருமா? போர் தொடங்கமுன்னரே விழுப்புண்களா?"

அன்று இக்கேள்விக்கு, ஏளனத்திற்கு பதில் சொல்ல எம் மக்களால் முடியவில்லை. (வவுனியா சுந்தரலிங்கம் அன்று **தமிழ்ப்புலி பாய்ந்து வரும்போது சிங்கம் காலிடுக்கில் வாலைச் சுருட்டும் காலம் வருமென** கூறியதாக் கூறப்படுகின்றது) அன்று தமிழ்மக்கள் தலை குனிந்தனர்; தாழ்வு மனப்பான்மை கொண்டனர்; ஒன்றுக்கும் வழியில்லாதவர்கள் என எண்ணிக்கொண்டார். ஆனால் இப்போது? பதில் ஒரு தடவையல்ல, பலதடவை சொல்லியாகி விட்டது. இனிமேலும் சொல்வதற்கும் புலிகள் ஆயத்தமாகவேயுள்ளனர். ஜெயசிக்குறு கைவிடப்பட்டபோது (பெப்ரவரி, 1999), ஆனையிறவு மீட்கப்பட்டபோது (ஏப்பிரல், 2000), எல்லாவற்றிற்கும் மேலாக சிறிலங்காப் படைவல்லமையின் முழுமையினையும் திரட்டி மேற்கொள்ளப்பட்ட அக்கினிச் சுவாலை அணைக்கப்பட்டபோது (ஏப்பிரல், 2001) இறுதிப் பதில் இறுத்தாகிவிட்டது. ஆயின் இப்பொழுது மீண்டும் போர் என்றால் போர் என சிங்களத்தில் முணுமுணுப்புக்கள் கேட்பதன் பொருள் என்ன? போரில் கிடைத்த தோல்வி, போரால் ஏற்பட்ட பேரழிவு எல்லாவற்றையும் உடனடியாகவே மறந்துவிடும் மனப்பிறழ்வு கொண்டவர்களோடு எத்தகைய தீர்வினை எதிர்பார்க்க முடியும்? இவர்கள் என்றென்றுமே, எப்போதுமே தமிழரைத் தோற்கடிக்க ஒரு சிறு துரும்பு வாய்ப்புக் கிட்டினாலும் அதனைப் பற்ற ஆயத்தமாகவுள்ளனர் என்பதே பட்டறிவு.

அப்படியானால் நாமென்ன செய்ய வேண்டும்? காத்திருத்தல் என்பதன் கால அளவுதான் என்ன? இக் காலவிடைவெளியில் நாம் செய்யவேண்டியதுதானென்ன? வரலாற்று நாயகன் கியாப் சொல்கின்றார் "தியன் பியன் பூ வீழ்ச்சியடைந்ததும் குடிசார் படைய நிருவாகமொன்றை செயற்படுத்துவதற்கு என்ன படிமுறைகளைக் கைக்கொள்ள வேண்டுமென்று வியட்நாமிய இராணுவமும் நிருவாகமும் விரிவாக திட்டமிட்டிருந்தன. முதலாவதாக குடிசார் நிருவாகமொன்றை ஏற்படுத்தல், இரண்டாவது இராணுவத்தினை ஆயத்த நிலையில் வைத்துக்கொள்ளல், மூன்றாவது தியன் பியன் பூ மக்கள்மீது அவலங்கள் படியாமலிருப்பதை உறுதி செய்தல், இறுதியாக செயற்திறன் வாய்ந்த குடிசார் நிருவாகம் உருவாக்கப்பட்டு கல்விக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும். இவை வாகனமொன்றின் நான்கு சில்லுகளை ஒத்தவை. இவை நான்கும் தட்டுத் தடங்கலின்றிச் செயற்படவேண்டும். கோசிமின் தலைமையிலான வியட்னாமிய மக்கள் அரசு இதனைச் சாதித்திருந்தது".(03)



1956ஆம் ஆண்டு காலிமுகத்திடல் சத்தியாக்கிரகத்தின்போது தாக்குதலுக்குள்ளானவர்கள் தூக்கிச்செல்லப்படுதல்

தமிழீழ விடுதலையின் பால் பற்றுக்கொண்ட அறிஞர் புலம்பெயர் ஆய்வாளர் எல்லோருமே ஒருமித்து புலிகளை நோக்கி இதனையே இன்று கூறுகின்றார்கள். வரலாற்றின் விளைபொருளை இவர்கள் தெளிவாகவே அடையாளம் காட்டுகின்றார்கள். 1985ஆம் ஆண்டே திம்பு பேச்சுவார்த்தைகளின் பொழுது தமிழ்மக்களின் வரலாற்று வழிவந்த தாயகத்தில் தன்னாட்சியுரிமையினடிப்படையிலான தீர்வு / ஆட்சிப்புலம் அமையவேண்டுமென கோரப்பட்டது முதல் நிலை. இப்பொழுதோ அதனடிப்படையில் இடைக்கால தன்னாட்சி நிருவாக அதிகார வரைவு வேண்டுகையாக முன்வைக்கப்பட்டாகிவிட்டது. இது இரண்டாம் நிலை. மூன்றாம் நிலை குடிசார் கட்டமைப்புக்களை பலப்படுத்தல் என்றாகின்றது. இதற்கான அனுமதியை நாம் யாரிடமிருந்தும் பெறத் தேவையில்லை. ஒரு விடுதலை இயக்கம் உலக அரசியல் மரபுகளிற்கேற்ப அமைதிப் பேச்சுக்களில் ஈடுபடும் பொழுது அதனது இறுதி இலக்கினை அடைவதைத் தள்ளிப் போடும் பொழுது அதனைப் புரிந்து எதிர்த்தரப்பு செயற்படமுடியாத பொழுது முயலாத பொழுது இயல்பாகவே இதற்கான அனுமதி கிடைத்துவிடுகின்றது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இப்பொழுது பண்படிப்படையிலான பேரளவிலான தர மாற்றம் நிகழ வேண்டுமென்பதே வரலாற்றின் ஆவல். இவ்விடத்தில் 45வருட கியூப விடுதலையின் அல்லது 45வருட அமெரிக்க முற்றுகையின், தடையின் முறியடிப்பு பாடங்களை பிடல் காஸ்ரோ சொல்வதை நாம் கவனத்தில் கொள்ளமுடியும். 1991ஆம் ஆண்டு சோவியத் சாம்ராச்சியம் வீழ்ச்சி கண்டபொழுது கியூபாவின் கதை முடிந்துவிடுமென எல்லோரும் எண்ணினர். ஆனால் இது இன்றைவரை நடக்கவேயில்லை. இதற்கான காரணமென்ன? பிடல் கூறுகின்றார் "கியூபத்தேசம் தனது புரட்சியை நடத்துவதற்கு எவரினதும் அனுமதியை பெறவுமில்லை. அதற்காக காத்திருக்கவுமில்லை. அல்லது கியூபா எப்பொழுது எவ்வாறு புரட்சியை மேற்கொள்ள வேண்டுமென எவரினதும் ஆலோசனையைப் பெறவுமில்லை."

கியூபாவின் இத்தகைய உறுதிப்பாட்டிற்கு பிரதான காரணம் கியூப மக்களிடையே வேரூன்றி நிறைந்து நிற்கும் அவர்களது கியூபப்புரட்சி தொடர்பிலான மிகத் தெளிவான நிலைப்பாடாகும். அவர்கள் தங்கள் தேசம் அதன் விடுதலை அதன் தலைமைத்துவம் இவைபற்றி பெருமிதம் கொண்டவர்களாகவுள்ளனர். எப்போதும் மனதளவில் போர் ஆயத்த நிலையிலும் ஏறத்தாழ எல்லோருமே போர்ப்பயிற்சி பெற்ற நிலையிலுமுள்ளார்கள். இதுவே அவர்கள் பலம். இதுவே எம் பலமாக வேண்டும். வரலாற்றன்னை தன் இருகரம் நீட்டி தமிழ்மக்களை அரவணைக்க ஆயத்தமாகின்றாள். விடுதலைக் காற்று வீசப்போவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. எனவே இதற்கேற்ப எமக்கான தேசிய மக்கள் மன்று, பிரதேச மேம்பாட்டினை வளர்த்தெடுக்கும். பிரதேச மக்கள் மன்றுகள், இவற்றிற்கு எம்மிலிருந்து நல்லோரை வல்லோரை தெரிவுசெய்யும் பொறிமுறை என எமது குடிசார் கட்டமைப்புக்களை உறுதிப்படுத்தும் காலம் நெருங்குகின்றது. புலம்பெயர் மக்களோ எமது நியாயத்தின் குரலை உலகெங்கும் ஆணித்தரமாக அறிவிக்கும் காலமும் இயங்கத் தொடங்கிவிட்டது. கவிஞர் அம்புலி பாடியதுபோல்,

"சாவை விதையாக்கி
கருவுள் கனல் தாங்கி
நெருப்பு நிருண்டு நிமிர்ந்து
எரிமலைக் குழம்பை எருவாக்கி
அழிவுப் புயலுக்குள் ஆழ வேரோடி
உலகம் பார்க்க உயரட்டும்
தமிழ்த் தேசியம்"

இருந்தும் எம் மக்கள் மனதினை வாட்டும் இவ்வெண்ணத்தையும் திரும்ப சொல்லிவிடுகிறோம். இன்னமும் எம் மக்கள் நம்புகின்றார்கள். விடுதலைப்புலிகளும் அமைதி காக்கிறார்கள். எதற்காக?

"இத்தீவில் வாழும் சகல இன மக்களும் திருப்புமுனையை நிகழ்த்தப்போகும் ஒரு காலகட்டத்தில் வாழ்வதை உணர்வார்கள். சிங்கள மக்களோ பல நூற்றாண்டுகளாக செவிமடுக்கப்படாத எம் குரலைக்கேட்க முன்வருவார்கள். காலம் காலமாக எம் மக்கள்மீது திணிக்கப்பட்ட கொடும் வதையால் வடியும் ஆன்மக் குருதியை ஒற்றியெடுத்து ஒத்தடம் கொடுக்க ஆறுதல்தர முன்வருவார்கள். அவர்கள் மனங்கள் உண்மையைத் தேடும் உண்மை ஆணைக்குழுக்களாக மாறும்".(04) மாறும்; மாறும் என்கிற நம்பிக்கை இன்று மாறுமா? மாறாதா? போரா? சமாதானமா? என்கிற நிலையை வந்தடைந்துவிட்டது. எதுவாயினும்,

"சேற்றாக சிதைந்த வாழ்வில்
சிறு அரும்பாக துளிர்த்த போராட்டம்
நேற்றாகி, இன்றாகி, நெடுகின்ற நாளாகி
ஊற்றாகி...."

என நிற்கும் விடுதலைப் போராட்டம் எதுவரினும் தாங்கி பயணிக்கின்றது. புதிய விடுதலைப் பண்ணை உலகிற்கு இசைந்து காட்ட ஆயத்தமாகின்றது.

●

(01), (04) - மௌனித்திருந்தவர் மனக்குரல் - (சிங்கள நூல்)
(02) - தமிழ்த் தேசத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும் - எழுதியவர் V.நவரத்தினம்
(03) - ஈழநாதம் - 03.06.2004 "வாழும் நாயகன் கியாப்"

# சர்வதேசமயமாக்கப்படும் டார்பர் நெருக்கடி

—அருளாளன்—

"இவ்வாறாக வழிநடத்தும் அறிக்கைகளை வெளியிடும் மேற்கிலுள்ள சில ஊடக மற்றும் அரசியல் வட்டாரங்கள் டார்பர் பிரச்சினையை "ஆபிரிக்கர்களுக்கு" எதிராக "அரப்க்கள்" நட்த்தும் "இனச் சுத்திகரிப்பு" ஆகக் காட்ட முற்படுகின்றனர்.

டார்பர் பிரா்ந்தியத்திலுள்ள மக்கள் எல்லோருமே முஸ்லிம்கள். அரபுமொழி பேசுபவர்கள். அங்கு ஆயுதம் தரித்த கொள்ளையர்கள் தோன்றியிருக்கிறார்கள். அங்குள்ள பிரச்சினை மூல வளங்களையும் நீர்ப்பாசனத்துக்கான நீரையும் அடிப்படையாகக் கொண்டது. நிலையாக வாழ்ந்து விவசாயம் செய்பவர்களினதும் (SEDEN-TARY GROUPS), நாடோடிகளின்தும் (NOMADIC TRIBES) வாழ்க்கை முறைகளுக்கு இடையேயான முரண்பாடுகள்தான் அங்கே காணப்படுகின்றன. வட-தென் சூடான்களின் பிரச்சினைகளுக்கு மதச்சாயம் பூசும் முயற்சி அமைதி ஒப்பந்தம் கைச்சாத்தானதும் தோற்றுப் போயிற்று.

இந்தப் பிரச்சினை பிரித்தானிய குடியேற்றவாத அரசின் வசைப் புகழ்பெற்ற "மூடப்பட்ட மாவட்டம்" சட்டம் காரணமாக, உருவாகிய, அபிவிருத்தி மட்டங்களுக்கிடையேயான வேறுபாடுகள் காரணமாகவே உருவாகியது. பிரித்தாளும் தந்திரம் என்ற பழைய கள்ளு புதிய மொந்தைகளில் பரிமாறப்படுகிறது. செயலற்ற தன்மை குறித்து அரசுமீது குற்றம் சாட்டும் "பிரச்சார நோக்கம் கொண்ட" ஆய்வாளர்கள் பயங்கரவாதத்துக்கும் சட்டம் ஒழுங்கு சீர்குலைவுக்கும் எதிராக அரசு கண்டிப்பான நடவடிக்கை எடுப்பதையும் கண்டனம் செய்யமுடியாது. படைய தலையீடு என்ற அச்சுறுத்தல் பாலைவனத்தில் இன்னொரு பலூஜாவை உருவாக்கும். இது இந்தியாவுக்கான சூடான் தூதுவர் AA மொஹமட், த ஹிந்து பத்திரிகைக்கு (02.08.2004) அளித்துள்ள செய்திக்குறிப்பு முழுப் பூசணிக்காயை "சோற்றில் மறைப்பவர்கள்", "வெறும் கோப்பையில் மறைப்பவர்கள் மத்தியில் வெறும் காற்றில் மறைப்பவராக திரு.அஹமட் இருக்கிறார். அவரது கூற்றையே சூடானின் அரபு மேலாண்மை அரசின் கூற்றாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

வட, தென் சூடான்களுக்கிடையேயான பிரச்சினை குறித்தும் "மூடப்பட்ட மாகாணம்" தென்சூடான் மக்கள் மதம் - இனம் காரணமாக அரபு வடசூடானின் இரட்டை ஒடுக்குமுறைக்கு உட்பட்டது. அவர்கள் எதிர்த்துப் போராடியது. SPLA அமைப்புடன் பேச்சு நடத்தி சுயாட்சி வழங்க வேண்டிய நிலைக்கு சூடான் அரசு தள்ளப்பட்டது. சூடானின் வரலாற்றுப் பின்னணி ஆகியவை 2004, தைமாத 'விடுதலைப் புலிகள்' ஏட்டில் வெளிவந்த 'ஆக்கிரமிப்பிலிருந்து மீண்டெழும் தென்சூடான்' என்ற கட்டுரையில் (பக்-04) விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

திரு.மொஹமட் குறிப்பிட்டிருக்கும் நிலையாக வாழ்ந்து விவசாயம் செய்பவர்கள் என்பது, டார்பர் பிராந்திய மண்ணின் மக்களான கறுப்பினத்தவர்கள்தான். அவர்கள் முஸ்லிம்கள் என்று திரு.மொஹமட் கூறினாலும் கறுப்பினத்தவர்கள் என்பதற்காக ஒடுக்குமுறைக்குட்பட்டவர்கள்.

அவர் குறிப்பிட்டிருக்கும் நாடோடிகள் என்பது சஹாரா பாலைவனங்களுக்கு அண்மித்த பகுதிகளில் கால் நடைகளை மேய்த்து வாழ்ந்த அரபு இனத்தவர்கள். இவர்கள் முஸ்லிம்கள். சஹாரா பாலைவனம் விரிவடைந்து தங்கள் மேய்ச்சல் நிலங்களை விழுங்கியபொழுது தெற்கு நோக்கி நகர்ந்து, டார்பர் பிராந்தியங்களில் தங்கள் கால்நடைகளை மேய்த்து வந்தவர்கள். அமைதிக் காலங் களிலே இது எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. மரபுவழி உடன்பாடுகள் இரு இனங்களுக்குமிடையேயான திருமணங்கள், பரிமாற்றங்கள், சமரச பொறியமைப்புகள், பொதுவாகவே அமைதிபூர்வமாக இருந்த உறவுகளை மேலும் வலுப்படுத்தியிருந்தன. பிரச்சினைகள் எழுந்தபொழுது இன வேறுபாடுகள் இருதரப்பாலும் முனைப்பாகப் பயன்படுத்தப்பட்டன.

வட, தென் சூடான்கள் இடையேயான பேச்சுவார்த்தை இடம்பெற்றபொழுது தாம் ஒதுக்கப்பட்டுவிட்டதான உணர்வை, ஐக்கிய அமெரிக்காவின் மூன்றிலொரு பங்கு அளவிலான பரப்புக்கொண்ட டார்பர் பிராந்திய கறுப்பின மக்கள் பெற்றார்கள். அந்த மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் சூடான் விடுதலை இயக்கம்/இராணுவம் (SLM/A) மற்றும் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம் (JEM) ஆகிய இரண்டு இயக்கங்கள் 2003, பெப்ரவரியில் உருவாகி சூடான் அரச இலக்குகளைத் தாக்கத் தொடங்கினார்கள். இந்த இயக்கங்கள் பேர் (FUR), மஸாலிற் (MASALIT), ஸாக்ஹாவா (ZAGHAWA) கறுப்பினக் குழுமங்களிலிருந்தே தோற்றம் பெற்றன.

டார்பர் மக்கள் ஓரங்கட்டப்படுவது நிறுத்தப்படவேண்டும் என்பதும் நிலையாகக் குடியமர்ந்து விவசாயம் செய்யும் மக்களுக்கு அதிக பாதுகாப்பு வேண்டும் என்பதும் அவர்களது கோரிக்கைகளாக இருந்தன. வடக்கு, தெற்கு சூடான்களிடையேயான பேச்சுவார்த்தையானது நாங்கள் ஏற்றுக்கொள்ளப்படாததையும் "ஆயுதம் வைத்திருப்பவர்களுடன் மட்டும் காட்டும் பேசும்" என்பதையும் எடுத்துக்காட்டியிருப்பதாக அவர்கள் கூறுகிறார்கள்.

2003, ஏப்ரலில் அல் - பாஷிர் விமான நிலையத்தை SLM தாக்கியது. 70 சூடானிய இராணுவத்தினர் கொல்லப்பட்டதோடு பல விமானங்களும் அழிக்கப்பட்டன. டார்பர் பிரச்சினைக்கு படையவலு மூலம் பதிலளிக்க காட்டும் அரசு முடிவு செய்தது.

இதற்கு காட்டும் அரசு சூடான் இராணுவத்தை பெருமளவில் பயன்படுத்தவில்லை. மேற்படி நாடோடி கும்பல்கள் மற்றும் கொள்ளைக்காரர்களில் இருந்து "ஜஞ்ஜாவிட்" (JANJAWID - ஆயுதபாணி குதிரை வீரர்கள் என்று பொருள்) என்ற துணைப்படை ஒன்றை காட்டும் அரசு உருவாக்கியது. அரசுக்கு எதிராக கிளர்ச்சி செய்பவர்களுக்கும் மேற்படி நாடோடிகளுக்கும் இடையேயான முரண்பாடுகளை கூர்மைப்படுத்தி, அவர்களைத் தூண்டிவிட்டு அவர்களுக்கு ஆயுதம் வழங்கி, அவர்கள் புரியும் கொலை, கொள்ளை, வல்லுறவு, ஆட்கடத்தல் முதலியவற்றை தட்டிக் கேட்காமல் விடுவதென்பது சூடான் அரசு திரும்பத் திரும்ப கைக்கொள்ளும் மூலோபாயமாக இருந்து வருகிறது.

இந்த ஜஞ்ஜாவிட்களும், மேற்கு சூடானிய கிராமங்கள் மீது பரவலான குண்டு வீச்சுகளை நடத்திய வான் படையினர் உள்ளிட்ட இராணுவத்தினரும் இணைந்து வட, தென், மேற்கு டார்பர் மாநிலங்களின் குடிமக்கள் மீது மேற்கொண்ட சட்டவிரோதமானதும் திட்டமிட்டதுமான தாக்குதல்களின் கோலங்களை இடம்பெயர்ந்தவர்கள் முகாமில் உள்ளவர்கள் சர்வதேச மன்னிப்புச் சபைக்கு அளித்த முறைப்பாடுகள் எடுத்துக்காட்டுகின்றன. இந்தத் தாக்குதல்களிலே ஆண்கள் கைது செய்யப்பட்டனர். காணாமல் போயினர் அல்லது கொல்லப்பட்டனர். கிராமவாசிகள் வலுக்கட்டாயமாக அவர்களது வீடுகளிலிருந்து இடம்பெயரச் செய்யப்பட்டார்கள். அவர்களுடைய வீடுகள் எரிக்கப்பட்டன.அல்லது அவற்றில் ஜஞ்ஜாவிட்களின் குடும்பங்கள் குடியேறினார்கள். கிராம மக்களது சீவனோபாயமாக இருந்த கால்நடைகள், பயிர்கள் முதலியவை ஒன்றில் எரிக்கப்பட்டன அல்லது கொள்ளையிடப்பட்டன.

ஐ.நா வின் புள்ளி விபரங்களின் படி இந்தத் தாக்குதல்கள் காரணமாக 1.2 மில்லியன் மக்கள் இடம் பெயர்ந்திருக்கிறார்கள். ஆகக் குறைந்தது ஒரு மில்லியன் மக்கள் தங்கள் சொந்த இடங்களுக்குள்ளேயே இடம் பெயர்ந்தவர்களாக (IDP) உள்ளார்கள். 170,000பேர் எல்லைகளைக் கடந்து காட்டுக்குள் சென்றிருக்கிறார்கள். சரியான எண்ணிக்கை தெரியாத பலர் மலைகள், பள்ளத்தாக்குகள் அல்லது ஆயுதம் தரித்த குழுக்களின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மறைந்திருக்கிறார்கள். இடம் பெயர்ந்தவர்களில் 49 விழுக்காட்டினருக்கு போதிய உணவில்லை. 88 விழுக்காட்டினருக்கு இல்லிடம் இல்லை. 67 விழுக்காட்டினருக்கு நீர் கிடைக்கவில்லை. 93 விழுக்காட்டினருக்கு சுகாதார வசதிகள் கிடைக்கவில்லை.

இவை எல்லாவற்றையும் விட கொடுமையானதாக இப்பிராந்திய கறுப்பினப் பெண்கள் மீதான வல்லுறவுக் கொடுரங்கள் இருக்கின்றன.

தொழில் தேடி தங்கள் ஆண்கள் நகரங்களுக்கும் அயல் நாடுகளுக்கு அல்லது மந்தைகளை மேய்க்க தொலை தூரங்களுக்கு சென்றுவிட்ட நிலையில் வீட்டுத் தலைமையையும் குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்களைப் பராமரிக்கும் பொறுப்பையும் ஏற்கும் பெண்கள் குடியிருப்புகளுக்கு அண்மையாக ஊசாட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இதன் காரணமாக கிராமங்களின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்படும் போது, அதன் உக்கிரத்துக்கு முதலில் முகம் கொடுப்பவர்களாகவும் அவர்களே இருக்கிறார்கள். இடம்பெயர்ந்தோர் முகாம்களில் பெண்களின் விகிதாசாரம் அதிகமாக இருப்பதற்கும் இதுவே காரணமாகும்.

"எமது கிராமத்தின் மீது தாக்குதல் ஆரம்பமானபொழுது நான் தூங்கிக் கொண்டிருந்தேன். தாக்குதல் நடத்தியவர்களால் நான் பிடித்துச் செல்லப்பட்டேன். அவர்கள் (ஜஞ்ஜாவிட்கள்) சீருடை அணிந்திருந்தார்கள். மேலும் டசின் கணக்கான யுவதிகளைப் பிடித்த அவர்கள் மூன்று மணித்தியாலங்களுக்கு எங்களை நடத்திச் சென்றார்கள். பகல் வேளைகளில் எமக்கு அடித்தார்கள். 'கடவுள் இல்லாத கறுப்பிகளே உங்களை அழிக்கப்போகிறோம்' என்று கூறிக்கொண்டே தாக்கினார்கள். இரவுகளில் தொடர் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டோம். மூன்று நாட்களுக்கு எமக்கு உணவே தரப்படவில்லை" என்று ஜஞ்ஜாவிட்களால் பிடித்துச் செல்லப்பட்ட ஒரு கறுப்பினப் பெண் மன்னிப்புச் சபைக்கு கூறினாள்.

"நான் கர்ப்பிணியாக இருந்த வேளையிலேயே வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டேன். பதினெட்டு வயதான ஒரு நிறை கர்ப்பிணிப் பெண்ணும் என்னோடிருந்தார். அவள்மீது வல்லுறவு கொண்ட பின் அவளது வயிற்றை வெட்டிக் கிழித்தார்கள். வயிற்றில் இருந்த சிசுவைத் தூக்கிப் பிடித்தபடி 'இது எதிரியின் குழந்தை' என்று கூக்குரலிட்டார்கள்".

"பதினேழு வயதான கன்னிப் பெண்ணும் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டாள். ஆறு ஆண்கள் அவளுடன் வல்லுறவு கொண்டார்கள். அவளது வீட்டுக்கு முன்னால் அவளது தாய் பார்த்திருக்க இது நடந்தது. அவளது சகோதரனின் கையையும் காலையும் கட்டி எரிந்துகொண்டிருந்த நெருப்பில் தூக்கி எறிந்துவிட்டார்கள்."

இவை சாட் இடம் பெயர்ந்தோர் முகாம்களில் சர்வதேச மன்னிப்புச் சபையினர் பெற்ற நூற்றுக்கணக்கான வாக்குமூலங்களில் சிலவாகும். சோகம் இத்தோடு முடியவில்லை. மேற்படி வல்லுறவுகளின் பின்விளைவுகள் இதைவிடச் சோகமானவை.

போரின் ஒரு ஆயுதமாக பெண்கள் மீதான பாலியல் வல்லுறவு ஆகிவிடுமோ என்ற அச்சம் தவிர்க்கமுடியாமல் எழுகின்றது.

டார்பரில் நிகழ்த்தப்பட்டிருக்கும் பாரிய அளவிலான மனித உரிமை மீறல்கள், எழுந்தமானமான கைதுகள், தொடர்பு கொள்ளும் உரிமையின்றித் தடுத்து வைத்தல், 'காணாமல் போதல்கள்', மனித



உரிமைச் செயற்பாட்டாளர்கள், சட்டங்கள், டார்பர் சமூகத் தலைவர்கள், மக்கள் முதலியோரைத் தண்டிக்க சித்திரவதை செய்தல் முதலியன அடங்குவதோடு, இவற்றுக்குச் சூடான் அரசே பொறுப்பு என்பதைச் சுட்டிக்காட்டும் பெருமளவிலான சான்றுகளும் உள்ளன. இந்த மூலோபாயமானது, பெரிய குழுக்களாக உள்ள மக்களிடையே பயத்தைப் பரவச்செய்து ஒடுக்குமுறையை தீவிரப்படுத்துவதன் மூலம் அந்த மக்கள் குழுவைக் கட்டுப்படுத்த மத்திய அரசுக்கு உதவுகின்றது என்பதோடு எந்தச் சமூகத்திலிருந்து கிளர்ச்சியாளர்கள் தோன்றுகிறார்களோ, அந்தச் சமூகங்களை கூட்டாகத் தண்டிப்பதை இலக்காகக் கொண்டிருப்பதாகவும் தோன்றுகிறது.

ஜஞ்ஜாவிட் தாக்குதல்களின் ஒரு நோக்கமாக கறுப்பின மக்களின் குடியிருப்புகளையும் கால்நடைகளையும் அபகரிப்பது இருப்பதாக தோன்றுகிறது. கறுப்பின மக்களின் வீடுகளில் தங்கள் குடும்பங்களை ஜஞ்ஜாவிட்டினர் குடியமர்த்துவது இதனை உறுதிப்படுத்துகிறது. இத் தாக்குதல்களோடு அரபு ஆண்கள்தான் தொடர்புபடுகிறார்கள் என்றில்லை.

### "ஹக்கமாக்கள்" (ஜஞ்ஜாவிட் பெண்கள்)

'ஹக்கமா'(HAKAMA) என்பது ஆண் போர்வீரர்களைப் புகழ்ந்து பாடல்களைப் பாடுவதன்மூலம் அவர்களை உற்சாகப்படுத்தும் மரபுவழி பாடகிகளைக் குறிக்கும் பதமாகும். சில சமயங்களில் ஆயுதம் தரித்த முரண்பாடுகளில் இந்தப் பெண்கள் முனைப்பாகப் பங்கெடுப்பார்கள். பெண்கள் பாடிக்கொண்டே சென்று வீரர்களை உற்சாகப்படுத்தும் நிகழ்வுகள் டார்பர் தவிர்ந்த ஏனைய இடங்களிலும் இடம்பெற்றுள்ளன. (உதாரணமாக, யூதக் குடியேற்றங்களைத் தாக்கச் செல்லும் அரபுக்களின் பின்னால், கொள்ளைப் பொருட்களை அள்ளிச் செல்வதற்கான பைகளுடன் அரபுப் பெண்கள் தொடர்ந்து வருவார்கள் என லியோன் யூரிஸ் - இன் "எக்ஸடஸ்" தமிழில் "தாயகம் நோக்கிய பயணம்" நூலிலும் குறிப்பிடப்பட்டுள்ளது) தாக்குதல்களின்போது

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

# தீர்வுத் திணிப்பை தமிழினம் ஏற்காது

புலிகள் இயக்கம் சமர்ப்பித்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை வரைபுக்குப் பதிலாக சந்திரிகா அம்மையாரின் அரசும் இடைக்கால வரைபொன்றை வரைந்து வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரச வரைபின் அடிப்படையிலேயே புலிகளுடன் அது பேச விரும்புவதாகவும் செய்திகள் கூறுகின்றன. இதேசமயம், புலிகளின் வரைபைப் பற்றிப் பேசவும் அம்மையாரின் அரசு தயாராக உள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வழமைபோலவே அம்மையார் தனது பாணியில் அரசியல் கூத்தொன்றை அரங்கேற்றத் துடிக்கின்றார் என்பதையே மேற்குறித்த முரண் செய்திகள் வெளிப்படுத்துகின்றன.

அம்மையாரின் சமாதானத்திற்கான போர் என்ற நாசகாரத்திட்டம் எப்படி பரிகசிக்கப் பட்டதோ! அதுபோலவே அரச வரைபின் அடிப்படையிலேயே பேச்சுவார்த்தை நடாத்தப்படும். அதேசமயம் புலிகளின் வரைபும் பேச்சுக்கு எடுக்கப்படும் என்பதும் பரிகாசத்திற்குரியதேயாகும்.

அரசியல் அமைப்பு ரீதியாக - நிருவாகக் கட்டமைப்புகள் ரீதியாக - நீதிபரிபாலன ரீதியாக தமிழினத்தை அடக்கி - ஒடுக்கிவரும் ஒரு அரசு, அது விரும்பும் ஒரு தீர்வையே தயாரித்து வெளியிடும். அந்த தீர்வுத் திட்டம் தனது அரசின் அத்திவாரங்களான மேற்குறித்த கட்டமைப்புக்களை சீண்டாவண்ணம் - அவற்றை மாற்றாவண்ணமே தயாரிக்கப்படும். அந்தத் தீர்வு வரைபு விடுதலைக்காகப் போராடும் தமிழினத்தை எந்த வகையிலும் திருப்திப்படுத்தமாட்டாது.

"புதிய மொந்தையில் பழைய கள்" என்ற ரீதியில் அம்மையார் தனது பழைய தீர்வுப் பொதியை இடைக்கால வரைபு என்ற புதிய பெயரில் வெளியிட விரும்புகின்றார். 1994ஆம் ஆண்டைய அவரது தீர்வுப்பொதி தமிழ்மக்களால் நிராகரிக்கப் பட்டு - கைவிடப்பட்டு பத்தாண்டுகள் சென்றுவிட்டன. பேச்சிற்கெடுக்கக்கூடிய அடிப்படைகள் ஏதுமற்ற அந்த தீர்வுப் பொதியில் மேலோட்டமாகச் சில மாற்றங்களைச் செய்து இடைக்கால சபை என்ற பெயரில் தமிழ் மக்கள் மீது திணிக்க அம்மையார் விரும்புகின்றார்.

அம்மையாரின் இந்த சதிமுயற்சி சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு எந்த வகையிலும் உதவப்போவதில்லை.

இது காலத்தைக் கடத்தும் ஒரு சலிப்பூட்டும் - பழைய உத்தியாகும். அதேசமயம் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வர மறுக்கின்றார்கள் என்று உலகிற்குக் காட்ட எடுக்கப்படும் தந்திரோபாயமுமாகும்.

அம்மையாரின் உத்தியும் சமாதான முயற்சிக்கு உதவப் போவதில்லை. அவரது தந்திரமும் பலிக்கப்போவதில்லை.

சிங்கள அரசியலின் சந்தர்ப்பவாதப் போக்கை - தமிழர் விரோத அரசியலை கடந்த மூன்றாண்டுகளாக சர்வதேச சமூகம் கிட்டநின்று அவதானித்து வருகின்றது.

எதிர்க்கட்சியாக இருக்கும்போது அவை வெளியிடும் தமிழர் இனப்பிரச்சினை தொடர்பான கருத்துக்களை ஆளுங் கட்சியாக வந்தபின் மாற்றிக் கொள்வதும் - பின்னர் ஆளுங் கட்சியிலிருந்து எதிர்க் கட்சியானதும் மீண்டும் கொள்கை மாற்றம் செய்வதும் சிங்களத்து பிரதான கட்சிகளின் அரசியல் வழமையாகும்.




இந்த நிலையில் தமிழரின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு முயற்சி தேடும்போது நிரந்தரமான - மாறும் அரசாங்கங்களால் மாற்றப்படமுடியாத உறுதித் தன்மை வாய்ந்த தீர்வு முயற்சிகளிலேயே பயன் உள்ளது.

அந்த வகையில், புலிகள் இயக்கம் தயாரித்து - அரசிடம் கையளித்துள்ள இடைக்கால தன்னாட்சி வரைபு சமாதானத்தை உறுதியாக்கக் கூடியது. சிங்களத்தின் சந்தர்ப்பவாத அரசியலுக்கு அணை போடக்கூடியது. அத்துடன் தமிழரின் அரசியல் அபிலாசைகளை பிரதிபலிப்பதாகவும் உள்ளது. சிங்களவர் - தமிழர் என்ற இரு தரப்பினதும் பகை உணர்ச்சிகளையும் பரஸ்பர சந்தேகங்களையும் படிப்படியாகக் களையும் செயன்முறைகளையும் கொண்டது. மாறிமாறி வரும் அரசாங்கங்களின் கட்சிநல - குறுகியவாத அரசியலுக்கு இடங்கொடாது உறுதியான சமாதானத்திற்கான பலமான அத்திவாரத்தையும் கொண்டது. சிங்கள அரசின் அடக்குமுறைகள் - பாரபட்சங்கள் என்பவற்றிலிருந்து தமிழினம் தன்னை தற்காத்துக் கொள்ளும் அரசியல் அம்சங்களை புலிகளின் இடைக்கால வரைபு கொண்டுள்ளது. தமிழினத்தின் ஏகோபித்த மக்கள் ஆணை மூலம் அங்கீகரிக்கப் பட்டதுடன் - சர்வதேசத்தின் ஆதரவையும் - அனுசரணையையும் அந்த வரைபு பெற்றுள்ளது.

புலிகள் தயாரித்து - அரசிடம் கையளித்துள்ள இடைக்கால வரைபின் அடிப்படையில் பேச்சை ஆரம்பிப்பதே சமாதான முயற்சிகளை ஆக்கபூர்வமானதாக்கும்.

சிங்கள அரசுகள் தயாரித்த தீர்வுத்திட்டங்கள் கடந்த காலங்களில் படு தோல்விகளையே கண்டன. யுத்தம் நீள்வதற்கும் - அழிவுகளும் - துயரங்களும் தொடர்வதற்கும் அந்த அரைகுறை தீர்வுத் திட்டங்களே காரணமாகும்.

அதனால்தான், புலிகள் இயக்கம் ஒரு தீர்வுத்திட்டத்தை தயாரித்து வெளியிடவேண்டும் என்று சர்வதேச சமூகம் விரும்பியது. அதற்கமைய எமது அரசியல் நிபுணர்களின் பங்குபற்றலுடனும் - சர்வதேச சட்ட அறிஞர்கள் சிலரினதும் பங்களிப்புடன் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை என்ற பெயரில் ஒரு மாதிரி வரைபை புலிகள் இயக்கம் தயாரித்தது.

இந்த வரலாற்றுப் போக்கைப் புறந்தள்ளிவிட்டு மீண்டும் சிங்கள அரசு தனது தீர்வுத் திட்டத்தைப் பற்றியே பேச வேண்டும் என்று அடம்பிடிப்பது எந்த வகையிலும் ஏற்றுக் கொ. ள முடியாதது.

பயனற்ற ஒரு தீர்வுப் பொதி பற்றிப் பேசி - நேரத்தை வீணாக்கவோ, அல்லது அந்தப் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்து மீண்டும் போர் மூள்வதையோ புலிகள் இயக்கம் விரும்பவில்லை.

தற்போதைய சமாதான சூழல் - ஒரு நிரந்தர சமாதானத்திற்கான அரசியல் தீர்வை நோக்கி நகர்த்தப்படவேண்டும் என்பதே புலிகள் இயக்கத்தின் அரசியல் நிலைப்பாடாகும். அதனால்தான், பேச்சுவார்த்தைகள் அற்று நீளும் இந்த சமாதான காலத்தை புலிகள் இயக்கம் பொறுமையுடன் கையாள்கின்றது. தோல்வியை அடிநாதமாகக் கொண்ட பேச்சுவார்த்தையைப் புலிகள் இயக்கம் விரும்பவில்லை. சிங்கள இனவாதிகளை - போர் வெறியர்களைத் திருப்திப்படுத்த முனையும் ஒரு சமாளிப்புத் திட்டம் ஒரு சரியான தீர்வுத்திட்டமாக அமையாது. அத்தகையதொரு அரைகுறை தீர்வுத்திட்டத்தை பரிசீலனைக்கு எடுப்பதையே தமிழ்மக்கள் விரும்பமாட்டார்கள். தமிழ்மக்கள் விரும்பாத ஒரு முயற்சியில் ஈடுபட புலிகள் இயக்கமும் தயாராக இல்லை.

சிங்கள அரசு தனது விருப்பத்தை தமிழ்மக்கள் மீது திணிக்க முயலும் மனநிலையை கைவிடவேண்டும். தமிழ்மக்கள் விரும்பும் அரசியல் உரிமைகள் பற்றிப் பேசும் நாகரீக அரசியலுக்கு சிங்கள அரசு இடங் கொடுக்க வேண்டும். புலிகள் வரைபு மறைமுக நோக்கங்களைக் கொண்டது என்ற மாதிரியான விதண்டாவாதங்களை சிங்கள அரசு கைவிட வேண்டும். மூன்றாந்தரப்பின் முன்னிலையில் நடைபெறப் போகும் பேச்சுவார்த்தையில் நீதியும் - நியாயமும் கடைப் பிடிக்கப்படும் என்ற யதார்த்தத்தை சிங்கள அரசு நம்ப வேண்டும்.

எனவே, புலிகள் இயக்கம் சமர்ப்பித்துள்ள இடைக்கால வரைபை அடிப்படையாகக்கொண்டே பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதே புலிகளின் உறுதியான அரசியல் நிலைப்பாடாகும். சிங்கள அரசின் அரைகுறை தீர்வுத் திட்டங்கள் பற்றி இனியும் பேசிக்கொண்டு - காலத்தைக் கடத்த புலிகள் இயக்கம் தயாராக இல்லை. பேச்சுவார்த்தைகள் அரசியல் தீர்வை எட்ட வேண்டும் என்பதே புலிகளின் நிலைப்பாடாகும்.

சர்வதேச சமூகத்தை ஏமாற்றவோ! அல்லது உதவி வழங்கும் நாடுகளை திருப்திப் படுத்தும் நோக்கிலோ பேச்சுவார்த்தை நாடகத்தை நடத்த சிங்கள அரசு விரும்பினால் அதில் பங்குகொள்ள புலிகள் இயக்கம் தயாராக இல்லை. ●

அரசியல் அமைப்பு ரீதியாக - நிருவாகக் கட்டமைப்புகள் ரீதியாக - நீதி பரிபாலன ரீதியாக தமிழ் இனத்தை அடக்கி - ஒடுக்கிவரும் ஒரு அரசு, அது விரும்பும் ஒரு தீர்வையே தயாரித்து வெளியிடும். அந்தத் தீர்வுத்திட்டம் தனது அரசின் அத்திவாரங்களான மேற்குறித்த கட்டமைப்புக்களை சீண்டாவண்ணம் - அவற்றை மாற்றாவண்ணமே தயாரிக்கப்படும். அந்தத் தீர்வு வரைபு விடுதலைக்காகப் போராடும் தமிழினத்தை எந்தவகையிலும் திருப்திப்படுத்தமாட்டாது

- எல்லாளன் -

# எல்லோரதும் உதாரணமாய்...

அது ஒரு சிறப்பு அணி. அதிசிறப்பு அணி. காட்டின் சருகுகள் காலில் மிதிபடும் ஓசையைக் கூட எழுப்பாது பதுங்கி நகர்ந்து, பார்வையைக் கூர்மையாக்கி இரைதேடி, பொருத்தமான இலக்கை மட்டுமே வேகப் பாய்ச்சலில் பாய்ந்து தாக்குகின்ற சிறுத்தை போன்றது அந்தச் சிறப்பு அணி. தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்றுவிக்கப்பட்ட அதன் உறுப்பினர்களும் சிறுத்தைகளை ஒத்தவர்களே. அடித்தால், இலக்குத் தப்பாது. தப்ப விடக்கூடாது.



மனிதர்களைச் சிறுத்தைகளாக்குகின்ற அந்த மாபெரும் முயற்சியில் சுதந்திரா முழுமூச்சுடன் ஈடுபட்டிருந்த நாட்கள் அவை. சிறப்பு அணிக்குரிய படைய தொடக்கப் பயிற்சித் தளத்தின் பொறுப்பதிகாரி அவர்.

அப்போதுதான் வீட்டிலிருந்து வந்த இளம் பெண்களை, 'உன்னால் முடியாது' என்று சமூகம் சொல்வதை நம்பி கடினமானவை என்று கருதப்படுகின்ற பணிகளை அப்பாக்கள் அண்ணாக்களின் உதவியோடு செய்தவர்களை, அவர்கள் கனவில் கூட கண்டிருக்கமுடியாத வாழ்க்கைக்கு அழைத்துப் போவது அவ்வளவு எளிதானதல்ல.

அந்தக் கடின பணியைச் சுதந்திரா செய்துமுடித்தார். அவர்களுக்கு ஒவ்வொரு விடயமாகச் சொல்லிக்கொடுத்தார். எது ஏன் செய்யப்படுகின்றது என்பதைப் புரிந்துகொண்டு அவர்கள் செய்ததனால், தலைவர் அவர்களின் எதிர்பார்ப்புக்கமைய அவர்களால் செயலாற்ற முடிந்தது.

அங்கே எல்லாமே நேரக் கணக்குப்படிதான் குறிக்கப்பட்ட நேரத்தினுள் எல்லோரும் உணவறையில் ஒன்றாக இருக்கைகளில் அமர்ந்து, பரிமாறப்படுகின்ற அதிகரித்த அளவிலான உணவை, கீழே சிந்தாமல், மிச்சம் மீதிவிடாமல் சாப்பிட்டே ஆகவேண்டும். மேற்பார்வையாளரின் விழிகள் அனைவரையும், அனைத்தையும் கவனித்துக் கொண்டேயிருக்கும். நேரம் கடந்தும் சாப்பிடமுடியாமல் திணறுபவர்கள் சுதந்திராவின் குடில் வாயிலில் நின்றவாறு சாப்பிட்டு முடிக்க நேரிடும். அவர்களின் அதிகரித்த பயிற்சியால் எப்படி சக்தி இழக்கப்படுகின்றது என்றும், அதை ஈடுசெய்ய அவர்கள் அதிகம் சாப்பிடவேண்டிய தேவைபற்றியும் உள்ளிருந்து ஒலிக்கும் சுதந்திராவின் குரல் விளக்கும். ஒருமுறை நின்றவர்கள் மறுபடி குடில் வாயிலில் நிற்கவேண்டியிராது.

காலையில் ஓடுபாதைக்குப் போகுமுன் குடிக்கவேண்டிய அரை அவியல் முட்டை, வந்த புதிதில் பலருக்குச் சிக்கலாகவே இருக்கும். ஏன் முட்டை குடிக்கவேண்டும் என்று விளக்கியவாறே சுதந்திரா தன் கையாலேயே முட்டைகளை ஒவ்வொருவருக்கும் கொடுத்துக் கொண்டிருப்பார்.

ஓட்டம் ஆரம்பமாகும் புள்ளியில் சுதந்திரா நிற்பார். இரண்டாவது, மூன்றாவது சுற்று ஓடும்போதும் அதிலேயே நிற்பார். அவர் அதிலேதான் நிற்பார் என்ற எண்ணத்தில் இடைவழியில் எவரேனும் நடக்கமுனைந்து நாலு அடி எடுத்து வைத்துவிட்டு நிமி[illegible]தால், எதிரேயுள்ள மரத்தோடு சாய்ந்தபடி சுதந்திரா நிற்பார். எந்த இடைவழிகளால் எப்படி அவர் வருகின்றார் என்பது ஒருவருக்கும் விளங்காது. திடீர் திடீரெனக் காட்சி தருகின்ற சுதந்திராவின் வருகையே எல்லோரையும் ஓடவைக்கப் போதுமானது.

பிழைகள் நடந்த வேளைகளில், கோபத்தை ஏற்படுத்தக் கூடியமாதிரி ஏசாமல், தாம் உணர்ந்து கொள்ளக்கூடியவாறு சுதந்திரா கதைத்ததாகவே அவரைப்பற்றி சிறப்பு அணியினர் இப்போதும் கூறுகின்றார்கள்.

போராளிகள் தவறுவிட்டால், அந்த அணித்தலைவரைக் கூப்பிட்டுக் கண்டிப்பார். கடுமையானவர்களுக்குக் கடுமையாக, இலகுவானவர்களுக்கு எளிமையாக அவரவர் இயல்புக்கேற்ப ஒவ்வொருவரையும் அணுகுகின்ற சுதந்திரா, 1993ஆம் ஆண்டின் இறுதியில்

**மலைமகள்**

சிறப்பு அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டதிலிருந்து 1996ஆம் ஆண்டின் இறுதிவரை ஏழு அணிகளுக்கு சிறப்புப் பயிற்சியின் முன்னோடி படைய தொடக்கப் பயிற்சியை வழங்கியிருந்தார்.

கல்விப் பொதுத் தராதர (உ/த) கலைப்பிரிவு மாணவியாக இருந்த சுதந்திரா 1989ஆம் ஆண்டில் எமது அமைப்பில் இணைந்து கொண்டார். இந்திய வல்லாதிக்க இராணுவம் சூழ்ந்திருக்க, மணலாற்றுக் காட்டினுள்ளே தலைவர் அவர்களின் எதிர்பார்ப்புக்கேற்ற வகையில் மேஜர் சோதியா, மேஜர் சஞ்சிகா முதலானோர் பெண் போராளிகளுக்கென உருவாக்கிய 'விடியல்' பாசறையில், விடுதலைப்புலிகள் மகளிர் படையணியின் ஐந்தாவது அணியில் தனது படைய தொடக்கப் பயிற்சியை நிறைவுசெய்த சுதந்திரா, 1990இன் ஆரம்ப நாட்களில் இந்தியப் படையினரின் வெளியேற்றத்தோடு, மகளிர் படையணி காட்டுக்குள்ளிருந்து நாட்டுக்கு வருகை தந்தபோது, வெளிவந்திருந்தார்.

ஆரம்ப நாட்களில் படையணியின் களஞ்சியப் பொறுப்பாளராகவும், அறிக்கையாளராகவும் பணியாற்றியவர், 1990லேயே பலாலி - கட்டுவன் பகுதியில் நிலைகொண்டிருந்த சிறு அணியொன்றின் வழிநடத்துனராகவும் செயற்பட்டார்.

1991இல் ஆனையிறவு மீதான ஆகாய கடல் வெளி நடவடிக்கையின் முடிவில், அதிகாரிகளுக்கான சிறப்புப் பயிற்சி கற்கை நெறிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். லெப்.கேணல் ராஜன் அவர்களால் நடாத்தப்பட்ட அந்த அதிகாரிகள் கல்லூரி ராஜனைப்போலவே ஒழுக்கமும் கண்டிப்பும் நிறைந்ததுதான். கட்டாயம் சுட்டு ஆறிய நீர்தான் எல்லோரும்

---

## லெப்.கேணல் சுதந்திரா

**(மரியமைந்தினி ஜேசுதாசன்)**
**யாழ்ப்பாணம்.**

பிறப்பு : *24.12.1971*
வீரச்சாவு : *25.04.2001*

---

குடிக்கவேண்டும். குளிர்பானம் தயாரிப்பதாயினும் அதில்தான். எதைக் குடித்தாலும் நோயே வராத உயர் எதிர்ப்பு சக்திவாய்ந்த எம்மவர்களுக்கு சுடவைத்த நீர் சுவை குறைந்திருப்பதாகத் தோன்றியது. ராஜனின் ஒப்புதலைப் பெறாமலேயே, ஒருநாள் சுடவைக்கப்படாத அதாவது சுவையான நீரில் குளிர்பானத்தைத் தயாரித்து எல்லோருக்கும் கொடுக்க, வந்தது வில்லங்கம். வயிற்றோட்டத்தால் அவதியுற்ற சுதந்திராவால் எல்லோருமே அகப்படவேண்டிய ஏதுநிலை தோன்றவே, அன்றோடு பச்சைத் தண்ணீரைக் கைவிட்டார்கள் சுதந்திராவைத் திட்டியவாறே.

எவருமே எதிர்பாராதவண்ணம் பேரிடியாய் நிகழ்ந்த லெப்.கேணல் ராஜனின் வீரச்சாவோடு தமது பயிற்சியை இடைநிறுத்திய அதிகாரிகளுக்கு உடனேயே பணி காத்திருந்தது. 1992இல் தொண்டைமானாற்றிலிருந்து ஒட்டகப்புலம் வரையான நூற்றைம்பது காவலரண் அழிப்பு நடவடிக்கையில் பங்கேற்ற விடுதலைப்புலிகள் மகளிர் படையணியின் அணிகளின் நிர்வாகப் பொறுப்பு இவரிடம் கொடுக்கப்பட்டது. அதுதான் முதல் அனுபவம் என்றாலும், சிறப்பாகவே தன் பங்கை ஆற்றியிருந்தார் சுதந்திரா.

நடவடிக்கையின் பின்னும் தாக்குதல் அணிகளோடே பெரும் பொழுதைக் கழித்த லெப்.கேணல் சுதந்திரா, 1993ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் விடுதலைப்புலிகள் மகளிர் படையணியின் வரலாற்றுப் பக்கங்களிலிருந்து மறைந்துபோனார். முடியாதது என்று எல்லோரும் எண்ணிக் கொண்டிருக்கும்போதே அதை முடித்துக் காட்டுகின்ற எமது தலைவர் அவர்கள் மிகுந்த நம்பிக்கையோடு பெண் போராளிகளை மட்டும் கொண்டதாக சிறுத்தைகளின் வேகங்கொண்ட ஒரு சிறப்பு அணியை 1992இலே உருவாக்கினார். அது 1993இன் கடைசிப் பகுதியில் சுதந்திராவை உள்வாங்கிக்கொண்டது.

1996 பிற்பகுதிவரை படைய தொடக்கப் பயிற்சியோடே நின்ற சுதந்திராவுக்கு, மறுவருடமே ஒரு புதிய பணி தரப்பட்டது. படைய தொடக்கப் பயிற்சியை முடித்திருந்த குறிப்பிட்ட தொகைப் போராளிகளுக்கு மேலதிகப் பயிற்சி வழங்கி, சிறப்பு அணியினரின் இரண்டாவது தலைமுறையை உருவாக்கும் பொறுப்பு இப்போது சுதந்திராவிடம்.

யாழ்ப்பாணத்திலிருந்து வன்னி நோக்கிய மாபெரும் இடப்பெயர்வோடு சிறப்பு அணி வன்னியின் காடுகளுள் புகுந்துகொண்டது. பொருட்களை ஏற்றிவந்த ஊர்திகள் காட்டுக்கு வெளியே நின்றுகொள்ள, அத்தனை பொருட்களையும் போராளிகள் தலையிலும் தோளிலும் காவிச் சென்றனர். அதற்கிடையிலேயே காட்டுக்குள் சுதந்திராவின் அணியினர் காட்டுத் தடிகளால் குடில்கள் அமைத்து புற்களால் கூரை வேய்ந்து களஞ்சிய அறைகளைத் தயார் செய்துவிட்டனர். பொருட்கள் வருவதும், சுமப்பதும், அடுக்குவதும் இரவு பகலாக நடந்துகொண்டிருந்தது. பெருந்தளங்களே இடம்மாறிய காலமல்லவா அது?

சுதந்திரா தனது அணியினரை மூன்றாகப் பிரித்தார். ஒரு அணி குடில்களை அமைத்து கிணறு வெட்ட, ஒரு அணி பொருட்களைச் சுமக்க, ஒரு அணி தனது சிறப்புப் பயிற்சியைச் செய்துகொண்டிருக்கும். இது மூன்று அணிகளுக்கும் சுழற்சி முறையில் வரும். இடப்பெயர்வு நடந்ததே தவிர, பயிற்சிகள் இடைநிறுத்தப்படவில்லை.

ஒரு பிஸ்கட் பேணியுடன் ஒரு அணி ஒருநாள் முழுதும் பயிற்சி எடுத்த நாட்கள் அவை. சில நாட்களில் அதுவும் இருக்கவில்லை. அப்படியான நேரங்களில் பாகையையும் தூரத்தையும் கொடுத்து நீண்ட காவலுலாவுக்கு அணிகளை அனுப்பிவிடுவார் சுதந்திரா. பாகையும் தூரமும் தரப்பட்டால், அன்று பட்டினிதான் என்று அணிகளுக்குப் புரிந்துவிடும்.

காட்டுக்குள் அமைக்கப்பட்ட களஞ்சியம் நிறையும்வரை இந்தக்

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்)



# யுத்தத்திற்கு ஆயத்தமாக இரு சமாதானம் வரும்



**தே**ர்தலை அடுத்து வந்த சில மாதங்களில் ஜனாதிபதி சந்திரிகாவின் அரசியல் நீடவடிக்கைக்கும் இப்போதைய அவரின் அரசியல் நடவடிக்கைக்கும் இடையே கூர்மையான வேறுபாட்டைக் காணமுடிகின்றது. சந்திரிகாவின் முன்னைய அணுகுமுறைக்கான நிகழ்ச்சி நிரலில் தளம்பல் தெரிகிறது.

ஆரம்பத்தில் ஜனாதிபதி இடைக்கால நிர்வாகம் பற்றிப் பேசுவதற்கு இடமே இல்லை என்றும் நிரந்தரத் தீர்வுபற்றி வரையறுக்கப்பட்ட ஒரு காலத்துக்குள் பேசி முடிக்கலாம் என்றும் சமாதானம் தொடர்பான தனது நிலைப்பாட்டை முன்வைத்தார். விடுதலைப்புலிகள் திட்டவட்டமாக இதனை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதைத் தெரிந்திருந்தே இத்தகைய ஒரு தீர்மானத்திற்கு அவர் வந்திருக்க முடியும்.

ஏனெனில் டோக்கியோ மாநாட்டைப் புறக்கணித்ததுடன் கடந்து சென்ற பயன்விளைவற்ற சமாதானத்தைச் சுட்டிக்காட்டி இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை பற்றி அல்லாமல் இனிச் சமாதானப் பேச்சில் கலந்துகொள்ளப் போவதில்லை என விடுதலைப்புலிகள் திட்டவட்டமாக அறிவித்திருந்தனர். இச்சூழலில் சந்திரிகாவின் நிலைப்பாடு புலிகளால் புறக்கணிக்கப்படும் என்று தெரிந்தே முன்வைக்கப்பட்டது எனக் கொள்ளத்தக்கதாகும். இது ஒரு மிகை நிபந்தனை என்று அவர் தெரிந்து கொள்ளாமல் இருக்க வாய்ப்பில்லை.

ஒஸ்லோ தீர்மானம் சமாதானப் பேச்சில் விடுதலைப்புலிகளை நெகிழ்ச்சிக் குரியவர்களாக சர்வதேசத்தின் முன் வெளிக்காட்டியதென்றால் சந்திரிகாவின் மேற்சொன்ன தீர்மானம் சமாதானப் பேச்சில் சந்திரிகா நெகிழத் தயாரில்லை என்பதை சர்வதேச சமூகத்திற்குக் காட்டியது.

சமாதானத்தில் எதிர்த் தரப்பால் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு மிகை நிபந்தனை வைக்கப்படுகின்றது என்றால் அதன் அர்த்தம் என்ன? கௌடில்யர் தனது அர்த்த சாஷ்திரத்தில் இதற்கான காரணத்தை இப்படி விளக்குகிறார்:

01. சமாதானத்தில் தனது தரப்பால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களிலிருந்து மாறுபட விரும்பியவன்,

02. பகை மக்களை ஒடுக்குவதற்கு ஆர்வம் கொண்டிருப்பவன்,

03. தன் நண்பனாக இருக்கக் கூடியவனுடன் பகைவன் வளர்த்துக் கொள்ளும் உறவைப் பிரிக்க விரும்பியவன்,

04. பகைவனோடு சமாதானம் செய்வதால் பிறர் தன்னை எதிர்க்கும் நிலை உண்டு என எண்ணுபவன்.

சமாதானத்தில் எதிர்த் தரப்பால் ஏற்றுக்கொள்ள முடியாத முன் நிபந்தனையை முன்வைப்பான். அவ்வாறிருந்தும் அந்நிபந்தனை ஏற்றுக் கொள்ளப் படுகின்றது என்றால் பகைவன் எதிர்க்கும் ஆற்றலற்று, தயாரற்று இருப்பதாகவே அர்த்தப் படுத்திக்கொள்ள முடியும் என விளக்குகிறார் கௌடில்யர்.

இதன்படி விளங்குவோமானால் சந்திரிகாவைப் பொறுத்தவரை ரணில் அரசாங்கம் புலிகளிடம் வசமிழந்து புலிகள் தனிநாட்டை ஏற்படுத்துவதற்கான வழிகளையே விட்டுக் கொண்டிருக்கின்றது என்பதே முன்னர் அவரது நிலைப்பாடாக இருந்தது. அதைக் காரணமாக முன்வைத்தே அவர் ரணிலின் அரசாங்கத்தைக் கலைத்தார். எனவே ரணில் சமாதானத்தில் ஒப்புக்கொண்டவிடத்திலிருந்து முன்னெடுப்பது சந்திரிகாவால் இயலாது. எனவே நடந்த சமாதானத்தில் ஒப்புக் கொள்ளப்பட்ட விடயங்களிலிருந்து மாறுபடவேண்டிய தேவை சந்திரிகாவிற்கு இருந்தது.

> நடந்த தேர்தலில் சமாதானம், யுத்தம் என
> இருவேறுபட்ட கோசங்களே அடிப்படையாக முன்நிறுத்தப்பட்டது.
> யுத்தகோசம் வெளிப்படையாக முன்நிறுத்தப்படாது விடினும்
> நடந்த சமாதானத்தை புறக்கணிப்பதன் உள்ளார்ந்த அர்த்தமும் கிராமப்புற
> வெளிப்படையான பிரச்சாரங்களும் சு.க, ஜே.வி.பி யின் யுத்த கோசமாகவே
> முன்நிறுத்தப்பட்டது. அதற்குக் கிடைத்த வெற்றி தமிழ்மக்களை
> ஒடுக்குவதில் சிங்கள தேசத்தில் நிலவும்
> ஆர்வத்தை வெளிப்படுத்தியது.

நடந்த தேர்தலில் சமாதானம், யுத்தம் என இரு வேறுபட்ட கோசங்களே அடிப்படையாக முன்னிறுத்தப்பட்டது. யுத்தகோசம் வெளிப்படையாக முன்நிறுத்தப்படாது விடினும் நடந்த சமாதானத்தை புறக்கணிப்பதன் உள்ளார்ந்த அர்த்தமும் கிராமப்புற வெளிப்படையான பிரச்சாரங்களும் சு.க. ஜே.வி.பி யின் யுத்த கோசமாகவே முன்நிறுத்தப்பட்டது. அதற்குக் கிடைத்த வெற்றி தமிழ் மக்களை ஒடுக்குவதில் சிங்கள தேசத்தில் நிலவும் ஆர்வத்தை வெளிப்படுத்தியது. எனவே அதனைப் பற்றிப் பிடித்துக் கொள்ளவேண்டிய தேவை சந்திரிகாவிற்கு இருந்தது.

இலங்கை ஒரு அரசு என்ற வகையில் ஏனைய சர்வதேச நாடுகளுக்கிடையிலான உறவு நலன்களின் பொருட்டு ஒன்றில் ஒன்று தங்கிநிற்பது; சர்வதேச உறவில் இலங்கை பிணைந்திருக்கும் வாய்ப்புள்ளது. ஆனால் இதன் எதிர்த் தரப்பான விடுதலைப் புலிகளின் நிலைமை அவ்வாறானதல்ல; இதற்கு எதிரான நிலைமையையே கொண்டிருந்தது எனலாம். ஆனால் இந்த சமாதானத்தின் இரண்டரை வருடம் விடுதலைப் புலிகளுக்கு ஒரு சர்வதேச பிரசன்னத்தையும் குறிப்பிடத்தக்க அங்கீகாரத்தையும் கணிசமான முக்கியத்துவத்தை கொடுத்திருந்தது. இது சர்வதேச நாடுகளுடன் விடுதலைப்புலிகள் ஒரு உறவை வளர்த்துக்கொள்ள ஒப்பீட்டளவில் வாய்ப்பளித்தது. மேற்கு நாடுகளுடனான நெருக்கம் உருவாகியிருந்தது. இலங்கை போன்ற மூன்றாம் தரப்பு நாட்டின் நேச சக்தியென்பதே உதவிவழங்கும் நாடுகள்தான். அத்தகைய மேற்கு நாடுகளுடனான புலிகளின் உறவை பிரிக்க வேண்டிய கட்டாயமும் சந்திரிகாவிற்கு இருந்தது.

மேற்சொன்ன காரணங்களைக் கொண்டிருந்த இலங்கை அரசாங்கம் சமாதானத்தைப் புறந்தள்ளவேண்டி வரின் எதிர்த் தரப்பின் யுத்தம்பற்றிய மனோநிலையை அறியவேண்டியதுமாயிற்று. இதன் அடிப்படையில்தான் விடுதலைப் புலிகளால் புறக்கணிக்கப்படும் என்று தெரிந்திருந்தும் சந்திரிகா முன்வைத்த பேச்சுக்கான மிகை நிபந்தனையை விளங்கவேண்டும்.

இந்த நிலைப்பாட்டை விடுதலைப் புலிகள் தீர்மானகரமாக மறுத்தனர். மறுயோசனைக்கு இடமின்றி இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை அடிப்படையிலான பேச்சைத் தவிர்த்து வேறு எதிலும் தாம் பங்கெடுக்கப்போவதில்லை என்பதையும் கடந்த தேர்தலில் அதற்காகத் தமிழ் மக்களிடம் கிடைக்க ஆணையையும் முன்நிறுத்தினர்.

இது புலிகளின் மனோநிலையை அறியவிரும்பிய சந்திரிகாவிற்கு யுத்தமொன்று வருமெனின் எதிர்க்கத் தயார் நிலையில் இருக்கும் விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை விளக்குவதற்குரிய சமிக்ஞையாக புரிந்துகொள்ளப்பட்டது என்றே கொள்ளத்தக்கது.

இதன்பின் சந்திரிகா தனது முன்னைய நிலைப்பாட்டிலிருந்து சற்றுச் சறுகத்தொடங்கினார். இறுதி நிலைப்பாடாக விடுதலைப்புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை வரைபையும் தாம் தயாரித்த இடைக்கால நிர்வாகசபை வரைபையும் அடிப்படைகளாகக் கொண்டு சமாதானப் பேச்சை ஆரம்பிக்கலாம் என்பதை தனது தனிப்பட்ட நிலைப்பாடாக முன்வைத்திருக்கிறார். இது சந்திரிகா தனது முன்னைய நிகழ்ச்சி நிரலிலிருந்து தளம்புவதையோ மாறுபடுவதையோதான் காட்டுகின்றது.

இந்த நிலைப்பாடு விடுதலைப் புலிகள் காட்டிய சமிக்ஞையின் மறுமொழியாகவே கொள்ளத்தக்கது. இதற்கு மேற்கு நாடுகளின் நிலைப்பாட்டிற்கும் விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டிற்கும் இடையில் உறவு விரிசலை ஏற்படுத்துவதற்கு எடுத்த எத்தனிப்பின் தோல்வியும் காரணமாக அமையக் கூடியது.

இப்போது பேச்சு முயற்சி சமாதானத்தையே நோக்கமாக கொண்டிருக்க வேண்டும் என்ற வகையில் அதற்கான சாத்தியப்பாடான வழிமுறையாக விடுதலைப் புலிகள் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையிலேயே பேச்சு நடக்கலாம் என்று அறிவித்திருக்கின்றனர். இதற்கு கிடைக்கப் போகும் பதில் பாராளுமன்ற உறுப்பினர்

**பிரபாத்திரவி**

கஜேந்திரகுமார் சண்டே லீடருக்கு (ஆகஸ்ட்,08) அளித்த பேட்டியில் கூறியது போன்று *எதுவும் ஜனாதிபதியின் தனிப்பட்ட நிலைப்பாடாக இருக்கக் கூடாது. அவர் எப்போழுதும் மாறுபட்டுப் பேசுபவர். அரசாங்கத்தின் நிலைப்பாடாக அது முன்வைக்கப் பட வேண்டும்.*

அத்தகைய ஒரு பதில், ஒன்றில் மூன்று தசாப்தமாக இரத்தம் சிந்தி தமக்கான இராணுவ பலத்தைக் கட்டி வளர்த்த மக்களுக்கு பேச்சு முயற்சியில் முன்னேறுவதற்கு வாய்ப்பளிக்கும். அல்லது சமாதானத்திற்காக தமிழ்மக்கள் மேலும் யுத்தத் தயார் நிலைக்கு வர வேண்டும் என வற்புறுத்தும். எதுவாயினும் எதிர்ப்பதற்கான தயார் நிலையே சமாதானத்தின் மந்திரச்சாவி என விளங்கலாம் கௌடில்யரிடமிருந்து.

**"தேசாபிமான உணர்வானது மக்களை ஆழமாகப் பற்றிக்கொள்ளும் பொழுதுதான் ஒரு தேசம் தனக்கே உரித்தான, தனித்துவமான ஆளுமையைப் பெறுகின்றது."**

*- தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் -*

# இன அழிப்பும் ஈழத்தமிழர் வரலாறும்

மனிதகுலம் தோன்றிய நாள்தொட்டே இனப்படுகொலைகள் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன. தோல் நிறம், உடற் தோற்றம், மதம், மொழி, பண்பாடு போன்றவற்றால் வேறுபடும் மக்கள் பலம் குன்ற நேரிடும்போது அழிவை எதிர்நோக்குகின்றனர். ஒரு சமூகம் தனது ஆதிக்க எல்லைக்குள் வாழும் பிறிதோர் மக்கள் குழுமத்தை அடக்கி ஆள விளையும்போது இன அழிப்பின் ஆரம்ப கட்டம் தென்படுகிறது. வரலாற்றில் இவ்வாறு அகப்பட்டுக் கொள்ளும் சமூகங்கள் மூன்று விதமாகத் தமக்கு வரும் ஆபத்தை எதிர்கொள்கின்றன:

அ. அடக்கு முறையை எதிர்த்து தமது இறைமையை விட்டுக் கொடுக்காது போரிடுகின்றன,

ஆ. பகுதியாகவோ முழுமையாகவோ தமது இறைமையை விட்டுக் கொடுத்து இழிநிலைக்குத் தள்ளப்படுகின்றன,





இ. முழுமையாக விட்டுக்கொடுத்து ஆதிக்க சமூகத்தினுள் கரைந்து போகின்றன.

ஈழத்தமிழரின் அண்மைக்கால வரலாற்றில் முதலாவது தெரிவு மேலோங்கி நிற்கிறது.

இன அழிப்பைக் குறிக்கும் 'ஜெனோசைற்' (GENOCIDE) என்ற சொல்லைப் போலாந்து நாட்டின் சட்டவியலாளர் றப்பேயல் லெம்கின் (RAPHAEL LEMKIN) 1944ஆம் ஆண்டில் உருவாக்கினார். 'ஜெனொஸ்' என்ற கிரேக்கமொழிச் சொல்லையும் 'சேடரே' என்ற லத்தீன்மொழி வினைச் சொல்லையும் ஒன்றிணைத்து இச்சொல்லைப் புனைந்தார். ஜெனொஸ் என்றால் மக்கள் அல்லது இனம் என்றும் சேடரே என்றால் படுகொலை செய்தல் என்றும் பொருள்படும். (RAPHAEL LEMKIN: AXIS RULE IN OCCUPIED EUROPE. WASHINGTON D.C 1944) லெம்கின் போன்றோர் கொடுத்த அழுத்தம் காரணமாக வரலாற்றில் முதன்முறையாக சர்வதேசச் சட்டம் தடைசெய்யும் தண்டனைக்குரிய குற்றமாக இன அழிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஐ.நா பொதுச்சபை டிசெம்பர் 09, 1948இல் ஜெனோசைற் குற்றத்தடுப்பும் தண்டனையும் என்ற சட்டத்தை ஏகமனதாக நிறைவேற்றியது. இது CONVENTION ON THE PREVENTION AND PUNISHMENT OF THE CRIME OF GENOCIDE, 1948 என்று அழைக்கப்படுகின்றது. நூறுக்கும் மேலான ஐ.நா நாடுகளின் அங்கீகாரத்துடன் இச்சட்டம் ஜனவரி 12, 1951இல் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஜெனோசைற் வரைவிலக்கணம் இன்றும் சர்வதேசச் சட்டத்தின், இக்குற்றம் சம்பந்தமான அடிப்படைக் கோட்பாடாக இடம்பெறுகின்றது. இச்சட்டத்தின் பிரகாரம் ஜெனோசைற் என்பது ஒரு தேசிய, இன, குழும, அல்லது மதக்குழுவைப் பகுதியாகவோ முழுமையாகவோ அழிக்கும் நோக்குடன் செய்யப்படும் கீழ்க்காணும் ஏதாவதொரு நடவடிக்கையாகும்:

அ. குழுவைச்சேர்ந்த உறுப்பினர்களைப் படுகொலை செய்தல்,

ஆ. குழுவைச்சேர்ந்த உறுப்பினர்களுக்குப் பாரதூரமான உடல், உளரீதியான தீங்கு விளைவித்தல்,

இ. முழுமையாகவோ, அல்லது பகுதியாகவோ அக்குழுவினரின் உயிரழிவை ஏற்படுத்தும் நோக்குடன் அவர்கள்மீது திட்டமிட்டுச் சுமத்தப்படும் வாழ்க்கை முறைகள்,

ஈ. மகப்பேற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை அக்குழுமீது மேற்கொள்ளல்,

உ. அக்குழுவைச் சேர்ந்த சிறார்களை பலவந்தமாகப் பறித்துப் பிறிதோர் குழுவிடம் ஒப்படைத்தல்.

யாவரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் ஜெனோசைற் பற்றிய மேற்கூறிய வரைவிலக்கணம் அமையவில்லை என்பது ஆய்வாளர்கள் முடிவு. யூத இன அழிப்பை அடிப்படையாகக் கொண்டு லெம்கின் தனது நூலைத் தயாரித்தார் என்று உறுதியாக நம்பப்படுகின்றது. உண்மையில் நாசிகள் நடத்திய யூதப் படுகொலைகள்தான் லெம்கின் நூலுக்குக் கருப்பொருளாக அமைந்தன. அவருடைய ஜெனோசைற் என்ற பதம் உயிர் பறிப்பை மாத்திரம் முதன்மைப் படுத்துகிறது. ஒரு இனத்தின் தனித்துவ அடையாளங்களை இல்லாதொழித்தல், சொந்த மண்ணில் வாழும் உரிமையை மறுத்தல், ஒரு மக்கள் கூட்டத்திற்குச் சொந்தமான மண்ணை அபகரித்தல், கலாச்சாரச் சீரழிவுகளைத் திட்டமிட்டுச் செய்தல் போன்ற முக்கிய விடயங்களை லெம்கினும் சரி ஐ.நாவும் சரி கருத்தில் எடுக்கவில்லை. இவை இன அழிப்புக்கு நிகரான செயல்கள் என்பதோடு ஆக்கிரமிப்பு நடவடிக்கையின் முக்கிய அங்கமாகவும் இடம் பெறுகின்றன. எனினும் ஐ.நா நிறைவேற்றிய 1951ஆம் ஆண்டுச் சட்டம் மனித உரிமை விவகாரங்களில் ஒரு முக்கிய மைல் கல்லாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

மனித உரிமை மீறல் குற்றங்களில் இன அழிப்புக் குற்றம் முதலிடம் வகிக்கின்றது. இன அழிப்பு எங்கு நடந்தாலும் அதைத் தடுக்கும் அரசியல், இராணுவ மற்றும் தார்மீகப் பொறுப்பு சர்வதேச சமூகத்தின்மீது சுமத்தப்பட்டுள்ளது. அத்தோடு இக்குற்றச் செயலுக்குப் பொறுப்பானவர்களைச் சர்வதேச நீதிமன்றத்தின் முன் நிறுத்தித் தண்டிக்கும் பொறுப்பும் சர்வதேச சமூகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இறைமை நாடுகளின் உள் விவகாரங்களில் பிற நாடுகள் தலையிடக் கூடாது என்ற கோட்பாடு முன்பு நிலவியது. தலையிடாமையை (NON - INTERFERENCE) சர்வதேச ஒழுங்கின் முக்கிய அடிப்படைக் கோட்பாடாகக் கருதும் நிலை மாறி வருகிறது. ஜெனோசைற் போன்ற பாரதூரமான குற்றச் செயல்கள் உள்விவகாரங்களாக இனிமேலும் கணிப்பிடப்பட மாட்டாது. ஆனாலும் தலையீடு என்பது நினைத்த மாத்திரத்தில் எடுக்கப்படும் முடிவில்லை. தலையிடுமுன் ஐந்து வகையான வினாக்கள் எழுப்பப்பட்டு விடை காண வேண்டிய நிலையில் உலக நாடுகள் இருக்கின்றன.

01. குற்றச்செயல் சம்பந்தமான தரவுகள் யாவும் முறையாகத் திரட்டப் பட்டுள்ளனவா?

02. குற்றச் செயல்களைத் தடுப்பதற்கு எடுக்கப்பட்ட இராசதந்திர முன்னெடுப்புக்கள் உரிய பலனளிக்கத் தவறிவிட்டனவா?

03. குற்றச் செயலைத் தடுப்பதற்கு எடுக்க உத்தேசித்த இராணுவ நடவடிக்கை பொருத்தமானதா, எதிர்பார்த்த பலனளிக்குமா?

04. தலையீட்டிற்குப் பின் சம்பந்தப்பட்ட நாட்டில் தங்கி நின்று நிலமையைச் சீராக்க முடியுமா? கால விரயத்தைப் பொருட்படுத்தாது தங்கி நிற்க முடியுமா?

05. தலையிடுவதால் தேசிய நலன் பயனடையுமா?



புதிய உலக ஒழுங்கில் தலையிடும் கோட்பாடு (THE DOCTRINE OF INTER - FERENCE) கேந்திர நிலையில் இருக்கிறது. மேற்கூறிய ஐந்து அம்சங்களும் இணைந்து இக்கோட்பாடாக அமைகின்றன. தலையிட உத்தேசிக்கும் நாடுகளைப் பொறுத்தளவில் ஐந்தாவதான 'தேசிய நலன் பயனடையுமா' என்ற வினா மிகவும் முக்கியமானது. வல்லரசுகள் இதையே முதன்மைப் படுத்துகின்றன. இறைமைக் கோட்பாடு புதிய உலக ஒழுங்கில் முன்னைய வலுவை இழந்துள்ளது. கொசோவோவில் நடந்த இனச் சுத்திகரிப்பு மற்றும் இனப்படுகொலை, தென் ஆபிரிக்காவில் நடைபெற்ற வெள்ளை நிறவெறி ஆட்சி போன்ற நிகழ்ச்சிகளில் ஏற்கனவே உலக சமுதாயம் தலையிட்டுள்ளது. பெருமளவு மனித உரிமை மீறல்களை நடத்திக்கொண்டு இறைமையைப் பேணமுடியாது என்பது இன்றைய உலக அனுபவம். 1994ஆம் ஆண்டு றுவாண்டா படுகொலைகள் நடந்தபோது உலக சமுதாயம் விலகிநின்று மௌனம் சாதித்தது. ஆனால் கொசோவோ படுகொலைகள் 1999இல் நடைபெற்றபோது நேற்றோ அமைப்பு இராணுவத் தாக்குதல்களை சேபியர்கள்மீது தொடுத்தது. மனித உரிமை மீறல்களைத் தடுப்பதற்காக எங்கு வேண்டுமானாலும், எந்நேரமும் தலையிடலாம் என்ற இன்னுமோர் தலையீட்டுக் கோட்பாட்டை நேற்றோ உருவாக்கியுள்ளது.

முன்னாள் சோவியத் ஒன்றியத் தலைவர் லியோனிற் பிறேஸ்னெவ் (LEONID BREZHNEW) 1968இல் பிறேஸ்னெவ் கோட்பாடு என்ற பெயரில் தலையிடும் உரிமையை நிலைநாட்டினார். செக்கோசுலோவாக்கியா நாட்டில் அரசியல் சீர்திருத்தம் ஆரம்பித்தபோது அவர் வார்சோ படைகளை அங்கு அனுப்பி மீண்டும் பொதுவுடைமைக் கருத்துக்களை நிலைநாட்டினார். பொதுவுடைமைக் கருத்துக்களில் இருந்து விலகி நடக்கும் நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிட்டு மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவரும் பொறுப்பு கொமியூனிச நாடுகளுக்கு உண்டு என்பது பிறேஸ்னெவ் கோட்பாட்டின் சாராம்சம்.

போகிறோம், எக்ஸ்ரேமினேசன் (POGROM, EXTERMINATION) என்ற இரு சொற்கள் ஜெனோசைற்றின் அர்த்தத்தில் பயன்படுத்தப்படுகின்றன. போகிறோம் ருஷ்ய மொழிச் சொல், அழித்தல் என்ற அர்த்தம் கொண்டது. கிறோம் என்றால் ருஷ்ய மொழியில் இடிமுழக்கம் என்பதையும் குறிக்கும். 1905-6 காலப்பகுதியில் ருஷ்யாவில் வாழ்ந்த யூதமக்களை அரச படைகளும் பொது மக்களும் வேட்டையாடினார்கள். இதற்குப் போகிறோம் என்று பெயரிடப்பட்டது. நன்கு திட்டமிட்டு நாடு தழுவிய ரீதியில் நடத்தப்படும் படுகொலைகள் பொதுவாகப் போகிறோம் என்று அழைக்கப்படுகின்றன. 1983இல் தமிழர்களுக்கு எதிராக இலங்கைத்தீவு முழுதும் நடத்தப்பட்ட படுகொலைகள் போகிறோம் ரகத்தைச் சேர்ந்தவை. டிசெம்பர் 1983 இல் வெளிவந்த அனைத்துலகச் சட்டவியலாளர் ஆணைய அறிக்கையில் (INTER - NATIONAL COMMISSION OF JURISTS REPORT DECEMBER, 1983) "தமிழர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள் சாட்சியங்களின் அடிப்படையில் அவை ஜெனோசைற் நடவடிக்கைகள் தான் என்ற முடிவுக்கு இட்டுச் செல்கின்றன." என்று கூறப்பட்டுள்ளது. அரச இயந்திரமும் அதன் ஆயுதப் படைகளும் இணைந்து படுகொலைகளை நிறைவேற்றின என்பது மறுக்கமுடியாத உண்மை.

மேற்கூறிய படுகொலைகளின் ஒரு அங்கமாக மொத்தம் 53 அரசியல் கைதிகள் வெலிக்கடை சிறைச்சாலையில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டனர். யூலை, 25ஆம் நாள் முதற்கட்டமாக 35பேரும், யூலை, 27ஆம் நாள் இரண்டாம் கட்டமாக 18பேரும் சிறைச்சாலைக் கட்டடத்திற்குள் வைத்துப் படுகொலை செய்யப்பட்டனர். படுகொலைகளை நிறுத்துவதற்கு அரசு யாதொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று இன வன்முறைகள் சம்பந்தமான ஜனாதிபதி ஆணைய அறிக்கை கூறுகின்றது (2003). யூலை 1983

➡

இனப் படுகொலைகளுக்கு அனுசரணையாக யூலை 18, 1983ஆம் நாள் இலங்கை அரசு அதிவிசேட வர்த்தமானி மூலம் பின்வரும் பிரகடனத்தைச் செய்தது: பாதுகாப்பு அமைச்சின் செயலர் அனுமதியுடன் உதவிப் பொலிஸ் சுப்பிரின்ரென்டன்ற் அதிகாரியோ அல்லது அதற்கும் கூடிய பொலிஸ் அதிகாரியோ நீதி விசாரணைக்கு உட்படுத்தாமல் இறந்த உடல்களை அடக்கம் செய்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இப்பிரகடனம்

**கலாநிதி வ.சோமாஸ்கந்தன்**

வெளியிடப்பட்ட திகதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் 24, யூலை 1983 படுகொலைகள் ஆரம்பமாகின.

எக்ஸ்ரேர்மினேஷன், டெசிமேஷன் (EXTERMINATION, DECIMATION) என்ற ஆங்கிலமொழிச் சொற்கள் முற்றாக அழித்தொழித்தலைக் குறிப்பிடுகின்றன. அவுஸ்திரேலியாவுக்குச் சொந்தமான ரஸ்மேனியா (TASMANIA) தீவுப் பழங்குடி மக்கள் அவுஸ்திரேலியாவின் முதலாவது வெள்ளை ஆளுநரான ஆர்தர் பிலிப் கட்டளைப்படி முற்றாக கொன்றொழிக்கப்பட்டனர். இவர்களுக்குச் சொந்தமான நிலத்தை அபகரிப்பதற்காக இப்படுகொலை நடத்தப்பட்டது. நான்கு பழங்குடி மக்கள் கொலைகாரர்களின் கண்களில் படாத காரணத்தால் உயிர் தப்பியதாக லின்டால் றாயன் என்ற ஆய் வாளர் எழுதிய நூலில் தெரிவிக்கப்படுகின்றது (LYNDALL RYAN: ABORIGINAL TASMANIANS) அமெரிக்கக் குடியேற்றவாசிகளால் கொல்லப்பட்ட செவ்விந்தியர்களின் எண்ணிக்கை ஏராளம். 140 வருடங்களுக்குமுன் நடந்த ஒரு படுகொலை நிகழ்ச்சி இன்றும் நினைவு கூரப்படுகின்றது. நவம்பர் 24, 1864ஆம் நாள் கேணல் சிவிங்ரன் தலைமையில் சென்ற 700 குதிரைப் படையினர் சான்ட் கிறீக் (SAND CREEK) கிராமத்தில் வாழ்ந்த 163 செவ்விந்தியர்களைச் சுட்டும் வெட்டியும் கொன்றனர்.

இறந்த உடல்களை அவர்கள் வெட்டித் துண்டாடினார்கள். ஒரு கர்ப்பிணித் தாயின் வயிற்றைப் பிளந்து வெளியே எடுத்த சிசுவையும் துண்டாடினார்கள். மூன்று வயதுப் பையன் ஒருவனை இரு தடவை துவக்கால் சுட்டுக்கொன்றனர். அமெரிக்கத் துருப்புக்களின் வரலாற்றில் மிகக் கொடூரமான, காட்டுமிராண்டித்தனமான செயலாக இப்படுகொலை கணிப்பிடப்படுகின்றது. இந்தக் கிராமத்தில் வாழ்ந்தவர்கள் அமெரிக்க அரசின் நண்பர்கள். கிராமத்தின் மையப்பகுதியில் அமெரிக்கக் கொடியும் சமாதானத்தை வெளிப்படுத்தும் வெள்ளைக் கொடியும் பறந்துகொண்டிருந்தன. அவற்றை உதாசீனம் செய்தபடி படுகொலைகள் நடத்தப்பட்டன. தமிழீழத்தில், குறிப்பாகத் தென் தமிழீழத்தில் இதிலும் படுமோசமான படுகொலைகளை சிங்கள இராணுவம் காலத்திற்குக் காலம் செய்துள்ளது. தமிழர்களைப் படுகொலை செய்வதற்கென்றே சிறிலங்கா பொலிஸ் படையின் விசேட அதிரடிப்படை 1985இல் உருவாக்கப்பட்டதை இங்கு நினைவு கூரலாம்.

இனச் சுத்திகரிப்பு (ETHNIC CLEANSING) என்ற புதிய சொற்றொடர் 1990களில் பொஸ்னிய முஸ்லிம்களின் படுகொலைக்குப் பின் பாவனைக்கு வந்தது. 7000 வரையிலான முஸ்லிம்கள் சேர்பியர்களால் கொல்லப்பட்டனர். சேர்பியப் படையினரால் முஸ்லிம் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டனர். இப் பாலியல் வல்லுறவை பரந்தளவில் நடத்தும்படி மேலிட உத்தரவு வழங்கப்பட்டது. பாராளுமன்றம் நிறைவேற்றிய சட்டங்களின் மூலமான இனச் சுத்திகரிப்பு (ETHNIC CLEANSING BY LAW)1948இல் சிறிலங்கா சுதந்திரம் பெற்ற ஒன்பதாம் மாதமே தொடங்கிவிட்டது. இதன்மூலம் மலையகத் தமிழர்கள் குடியுரிமை இழந்தனர். சில மாதங்களுக்குப் பின் இவர்கள் பிரிட்டிசார் காலத்தில் அனுபவித்த வாக்குரிமை சட்டத்தின்மூலம் பறிக்கப்பட்டது. 1949இல் இந்தியக் குடியுரிமை பெறாது இலங்கையில் தங்கியிருந்த நாடற்ற இந்திய வம்சாவழியினரை பலாத்காரமாக வெளியேற்றும் சட்டம் கொண்டுவரப்பட்டது. இருபதாம் நூற்றாண்டின் மிகப் பழமை வாய்ந்த இத்தகைய இனச் சுத்திகரிப்பாக இதைக் கொள்ளலாம். இதுபோன்ற கொடூரமான சட்டங்களைப் பிறிதோர் நாட்டில் காண்பது அரிது. இவர்கள் தமிழர்கள் என்ற காரணத்தினாலேயே இச்சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

இனச் சுத்திகரிப்பின் பிறிதோர் வடிவமாக ஒக்ரோபர், 1969 - டிசெம்பர், 1971 காலப்பகுதியில் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் மீது அரசு ஆதரவுபெற்ற சிங்களக் குண்டர்கள் தொடர்ச்சியான தாக்குதல்களைத் தொடுத்தனர். இதில் பலர் கொல்லப்பட்டனர். 1976இல் இதேபோன்று சங்குவாரி, டெல்டா தோட்டத் தொழிலாளர்கள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அரசாங்க அமைச்சர் ஹெக்ரர் கொபேக்கடுவ இவர்களைக் கடலில் போடுவேன் என்று குளுரைக்கும் அளவுக்கு நிலைமை மோசமடைந்தது. 1973இல் நாடு பூராகவும் நிலவிய உணவுப் பஞ்சத்தில் பல தோட்டத் தொழிலாளர்கள் பட்டினிச் சாவடைந்தனர். பல தோட்டத் தொழிலாளர்கள் பலவந்தமாக லொறிகளில் ஏற்றப்பட்டு கிழக்கு இலங்கை மற்றும் வவுனியா காடுகளில் தள்ளப்பட்டனர். இங்கிலாந்தின் கிரனடா (GRENADA) தொலைக்காட்சியில் மலையகத்தில் பிடிக்கப்பட்ட காட்சிகள் அந்தக் காலத்தில் காட்டப்பட்டன. எடித்பொன்ட் (EDITH BOND) என்ற ஆங்கிலப் பெண் 'தேயிலையின் நிலவரம்' (THE STATE OF TEA) என்ற இதுபற்றிய வரலாற்று நூல் எழுதினார். நவம்பர் 10, 1980ஆம் நாள் வெளிவந்த சன் (SUN) பத்திரிகைப்படி 70,000 தோட்டத் தொழிலாளர்கள் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளுக்கு அனுப்பப்பட்டனர். இவர்களில் 1972-76 காலப்பகுதியில் தோட்டங்களில் இருந்து வெளியேற்றப்பட்டவர்களும் 1977ஆம் ஆண்டுக் கலவரத்தில் பாதிப்படைந்தவர்களும் அடங்குவர். ஆகஸ்து 1981இல் மத்திய மற்றும் சப்பிரகாமுவாத் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான மீண்டுமோர் தாக்குதல் தொடுக்கப்பட்டது.

யூதர்களுக்கு எதிராக நாசி ஜேர்மனி வகுத்த இறுதித் தீர்வை நினைப்பூட்டும் நிகழ்ச்சிகள் 1956 தொடக்கம் 1983வரை சிறிலங்காவில் நடந்தேறின. தமிழர்களைக் கொன்றொழிக்கவேண்டும் அல்லது சிங்கள இனத்தோடு இரண்டறக் கலக்கவேண்டும் என்ற மூர்க்கத்தனமான எண்ணம் ஆட்சியாளர்களிடம் இருந்தது. நாம் பலம் பெற்ற படியால் எதிரியின் திட்டங்களை எம்மால் முறியடிக்க முடிந்தது. சிறிலங்காவின் இனக் கலவரங்கள் யாவும் அரச தரப்பினரால் நன்கு திட்டமிட்டு வழிநடத்தப்படுகின்றன. இறுதித் தீர்வின் (FINAL SOLUTION) அங்கமாகத் தமிழர்களுக்கு எதிரான படுகொலைகள் சிங்களக் காடையர்களாலும் ஆயுதப் படையினராலும் நடத்தப்பட்டன என்பது மறுக்கமுடியாத உண்மை.



1951ஆம் ஆண்டின் ஜெனோசைற் குற்றவியல் சட்டம் தடைசெய்யும் 'மகப்பேற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளைச் சிறிலங்கா அரசு இன்றுவரை மலையகத்தில் நடத்திக்கொண்டிருக்கிறது. சிங்கள மருத்துவர்கள் பணியாற்றும் அரசினர் மருத்துவ நிலையங்களில் மலையகத் தமிழ்ப் பெண்களின் கருப்பை அவர்கள் சம்மதமின்றி அகற்றப்படுகின்றது. கன்னிப் பெண்களின் கருப்பை கூட அகற்றப்படுவதாகத் தகவல் கிடைத்துள்ளது. அப்பாவிப் பெண்களை ஏமாற்றிச் செய்யப்படும் இவ்வகைச் சத்திர சிகிச்சை இன அழிப்பு நோக்குடையது. இன அழிப்பு என்பது ஒட்டுமொத்தமாக ஒரு இனத்தை அழிக்கும் செயலாக மாட்டாது. ஏனென்றால் ஒருவரும் எஞ்சியிருக்காமல் முற்றாக அழிப்பது சாத்தியமற்றது. ரஸ்மேனியாத் தீவுப் படுகொலைகளில் நால்வர் உயிர் தப்பியதை இங்கு நோக்கற்பாலது.

மேற்கூறிய ஜெனோசைற் குற்றவியல் சட்டம் தனது பார்வைக்கு உட்படுத்தாத சில இன அழிப்புக் குற்றங்களை இவ்விடத்தில் சுட்டிக்காட்டுதல் மிகப் பொருத்தம். இன அழிப்பு ஒரு இனத்தின் தேசிய வாழ்வை அழிப்பதை நோக்காகக் கொண்டது. தனி மனிதர்களுக்கு எதிராக எடுக்கப்படும் உயிரழிப்பு நடவடிக்கைகள் ஒரு இனத்தின் உறுப்பினர் என்ற காரணத்திற்காகவே நிறைவேற்றப்படுகின்றன. தனி மனிதர்களின் சுதந்திரம், உடல்நலம், பாதுகாப்பு, உயிர்வாழ்வு ஆகியவற்றை திட்டமிட்டு அழிப்பதை இன அழிப்புக் குற்றமாகக் கணிப்பிடவேண்டும். தேசிய இனங்களின் வாழ்வாதாரங்களான மண், இயற்கை வளம், நிறுவனங்கள், மொழி, மதம் போன்ற கலாசார விழுமியங்கள் என்பனவற்றை ஆக்கிரமிப்பதும் மீளளிக்க மறுப்பதும், படிப்படியாக அழிப்பதும் இன அழிப்புக் குற்றங்களாகும்.

இலங்கை சுதந்திரம் பெற்ற நாட்தொட்டு மண் பறிப்பும், இன அழிப்பும் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன. கிழக்கு மாகாணத்தில் மண் பறிப்பு இன்றுவரை இடைவிடாது தொடர்கின்றது. இதன்பயனாய் 1947இல் பத்து வீதமாக இருந்த சிங்களவர்களின் விகிதாசாரம் நாற்பதை நெருங்கிக் கொண்டிருக்கின்றது. திருகோணமலை அம்பாறை மாவட்டங்களை சிங்கள மயமாக்கும் நடவடிக்கை இறுதி நிலையில் இப்போது இருக்கிறது. யாழ் தீபகற்பத்தில் ஒரு இலட்சத்திற்கும் மேலான மக்கள் இராணுவத்தின் அதியுயர் பாதுகாப்பு வலயம் காரணமாக சொந்த மண்ணில் ஏதிலாகியுள்ளனர்.



இருபதாம் நூற்றாண்டின் இன அழிப்பு வரலாற்று மைல் கற்களாக பெரும் எண்ணிக்கையில் படுகொலை செய்யப்பட்டோரின் புதைகுழிகள் இடம்பெறுகின்றன. இவை 'மாஸ் கிறேவ்ஸ்' (MASS GRAVES) என்ற கலைச்சொல் மூலம் அறியப்படுகின்றன. தமிழீழ வரலாற்றில் வடக்கிலும் கிழக்கிலும் பெரும் எண்ணிக்கையிலான இத்தகைய புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. சிங்கள ஆயுதப் படைகளாலும் அவர்களுடன் இணைந்து செயற்பட்ட தமிழ், முஸ்லிம் காடையர்களும் இப்படுகொலைகளுக்குப் பொறுப்பாவர். சிறிலங்காவின் சிங்கள அரசுகள் இவற்றை மூடிமறைப்பதற்கு தம்மால் இயன்றதைச் செய்கின்றன. ஆனால் சில புதைகுழிகள் எதிர்பாராத விதத்தில் பகிரங்கமாகி விடுகின்றன. அப்படி வெளிப்பட்டாலும் அது பெரிய விவகாரமாக மாறாமல் தடுப்பதில் கொழும்பு அரசு பெரு வெற்றி கண்டுள்ளது.

மனித உரிமை ஆர்வலரும், மாஸ் கிறேவ்ஸ் சம்பந்தமான முன்னோடி நிபுணருமான பில் ஹாக்லண்ட் (BILL HAGLUND) ருவாண்டா, செம்மணி (யாழ், சிறிலங்கா), பால்கன் பிரதேசம் (பொஸ்னியா) போன்ற பகுதிகளின் புதைகுழிகளை ஆய்வுசெய்த அனுபவமுள்ளவர். இவர் ஆப்கானிஸ்தானில் கொள்கலன்களில் (CONTAINERS) உயிரோடு அடைத்துக் கொல்லும் புதியதொரு படுகொலை முறையைக் கண்டுபிடித்துள்ளார். ஜெனரல் டொஸ்தமும், தலிபான்களும் பல்லாயிரக் கணக்கானோரை இந்த முறையில் படுகொலை செய்துள்ளனர். மனிதப் புதைகுழிகளை எப்படிக் கண்டுபிடிக்கலாம் என்ற வினாவுக்கு பில் ஹாக்லண்ட் 'மண் மேற்பகுதி மாற்றங்கள், புல் பூண்டு போன்றவற்றில் தெரியும் வித்தியாசங்கள், வாகனங்கள் வந்துபோன அடையாளங்கள், ஆடைகள், காலணிகள் சிதைந்த நிலையில் அப்பகுதியில் காணப்படுதல்' போன்ற தடயங்கள் மூலம் கண்டுபிடிக்கலாம் என்று 2003 இல் கூறியுள்ளார்.

கிருசாந்தி குமாரசாமி வழக்கில் குற்றவாளியாக நிறுத்தப்பட்ட கோப்பிரல் இராஜபக்ச நீதி மன்றில் வெளிப்படுத்தும் வரை ஒருவரேனும் செம்மணி பற்றிப் பேசவில்லை. அவர் இது பற்றிக் கூறியபின் செம்மணிப் பகுதியில் ஊரடங்குச் சட்டம் போடப்பட்டது. அதன் பின் யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டிருந்த சிங்கள இராணுவம் செம்மணிப் புதைகுழிகளை புல்டோசர்மூலம் திறந்து, மனித எச்சங்களை வெளியே எடுத்தது. இரவோடு இரவாக எலும்புக் குவியல்கள் எரியூட்டப்பட்டன. கோப்பாய் போன்ற அயல் கிராமங்களில் வாழ்ந்தவர்கள் புகைமண்டலம் வான் நோக்கி எழும்புவதை நன்கு அவதானித்துள்ளனர். ஊரடங்கு உத்தரவு விலக்கப்பட்டபின் 'புதைகுழி ஆய்வு' என்ற நாடகம் அரங் கேறியது. பில் ஹாக்லண்ட் போன்ற சர்வதேச நிபுணர்களும் உள்ளூர் தென்புலப் பேராசிரியர்களும் வந்து சென்றனர். செம்மணிக்கு கைவிலங்குடன் கொண்டுவரப்பட்ட இராஜ பக்ச மாத்திரம் "நான் புதைக்க உதவிய சடலங்கள் எவ்வாறு மாயமாக மறைந்தன?" என்று பகிரங்கமாகக் கேட்டார். இதே கேள்வியை மேற்கூறிய நிபுணர்கள் ஏன் கேட்காமல் விட்டார்கள், அந்த அடிப்படையில் ஏன் அவர்கள் புலனாய்வு செய்யவில்லை என்று கேட்கவேண்டியது அவசியம். புதை குழிகள் சடலங்களை மாத்திரமல்ல, பல இரகசியங்களையும் தம்மோடு மறைத்து வைத்திருக்கின்றன. ●

> **யூலை 1983 இனப் படுகொலைகளுக்கு அனுசரணையாக யூலை 18, 1983ஆம் நாள் இலங்கை அரசு அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் பின்வரும் பிரகடனத்தைச் செய்தது: பாதுகாப்பு அமைச்சின் செயலர் அனுமதியுடன் உதவிப் பொலிஸ் சுப்பிறின்டன்ற் அதிகாரியோ அல்லது அதற்கும் கூடிய பொலிஸ் அதிகாரியோ நீதி விசாரணைக்கு உட்படுத்தாமல் இறந்த உடல்களை அடக்கம் செய்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.**



# ஜே.வி.பிக்கு யுத்தம் வேண்டும்

முழு இலங்கைத்தீவின் அரசியலும் தற்போது இனப் பிரச்சினையில் மையங் கொண்டுள்ளது. ஆதலால் உள்நாட்டுச் சக்திகளாயினும் சரி, வெளிநாட்டுச் சக்திகளாயினும் சரி இனப் பிரச்சினைக் கூடாகவே இலங்கையின் அரசியலைப் பற்றிச் சிந்திக்கும் நிலை உள்ளது.

கொழும்பு அரசியற் சக்திகளைப் பொறுத்தவரையில் அவர்களது பல்வேறு வகைப்பட்ட அரசியல் அபிலாசைகளுக்கான ஒரு கருவி என்ற நிலையிலேயே இனப்பிரச்சினை உள்ளது.

வெளிநாட்டுச் சக்திகளைப் பொறுத்தவரையில் அவர்களது தேவைகளை நிறைவேற்றுவதற்கான ஒரு வழிமுறை என்ற வகையிலேயே இனப்பிரச்சினை உள்ளது.

தமிழீழ மக்களைப் பொறுத்த வரையில் அவர்களது வாழ்நிலையே இனப்பிரச்சினையாக உள்ளது.

இந்தியாவைப் பொறுத்த வரையில் அவர்களது புவியியல் நலனே இனப்பிரச்சினையாக உள்ளது.

எவ்வாறாயினும் சரி மேற்படி விடயங்கள் அனைத்துமே இனப்பிரச்சினையின் மீதுதான் மையங்கொண்டுள்ளன என்பது தெளிவு. எனவே இனப்பிரச்சினையைப் பற்றிப் பேசாமல் இலங்கையின் அரசியலைப் பற்றிப் பேச முடியாதென்பதே இன்றைய நிலை.

இந்நிலையில் ஜே.வி.பி எனப்படும் ஜனதா விமுத்தி பெரமுன அமைப்பானது இனப்பிரச்சினையை எவ்வாறு பார்க்கிறது? அதனை அது எப்படிப் பயன்படுத்த முனைகின்றது என்பதை ஆராய வேண்டியது அவசியமாகும்.

இலங்கையில் நிலவி வரும் சிங்கள - பௌத்த இனவாத அரசியலின் கொடுமுடியாய், இதுவரை காலமும் நிலவி வந்த இனவாத அரசியலின் கூட்டுமொத்த வெளிப்பாடாய் ஜே.வி.பி உள்ளது.

ஜே.வி.பி தன்னைத் தானே ஒரு மாக்ஸிஸக் கட்சி என அழைத்துக் கொண்டாலும் அதன் தற்போதைய அரசியற் சித்தாந்தம் இனவாதமாக உள்ளது. ஆதலால் அது ஒரு மாக்ஸிஸ சித்தாந்தக் கட்சியல்ல, இனவாத சித்தாந்தக் கட்சியாகும். அது அரசியல் ஆதிக்கத்தைப் பெற இனவாதத்தை ஒரு கருவியாகக் கையிலேந்துகின்றது. ஜே.வி.பியின் இத்தகைய சித்தாந்தங்களை வரலாற்று ரீதியாகப் பின்னோக்கிப் பார்ப்போம்.

1970களில் ஜே.வி.பியின் சித்தாந்தமாக விளங்கியது இந்திய விஸ்திரிப்பு எதிர்ப்பு வாதமாகும். ஜே.வி.பியின் அப்போதைய ஐந்து தலையங்கங்களின் கீழான வகுப்புகளில் "இந்திய விஸ்தரிப்புவாதம்" எனும் தலைப்பிலான வகுப்பு மிகப் பிரதான வகுப்பாய் அமைந்தது.

அந்த வகுப்பின் கருத்தோட்டம் என்னவெனில் இந்தியா படிப்படியாக அயல்நாடுகளை ஆக்கிரமித்துவரும் விஸ்தரிப்பு வாதத்தைக் கொண்டுள்ளது என்றும் அவ்வாறு இலங்கையும் இந்திய விஸ்தரிப்பு நடவடிக்கைகளுக்கு உட்பட்டு வருவதாகவும், இலங்கைவாழ் தமிழர் இந்திய விஸ்தரிப்பிற்கான கருவிகளாக உள்ளனர் என்றும் பதவியில் இருக்கும் சிங்கள ஆட்சியாளர் இந்தியாவினதும் ஏகாதிபத்தியத்தினதும் அடிவருடிகள் என்றும் ஒரு பொதுச் சமன்பாட்டைப் போட்டனர். ஆதலால் அப்போது அனைத்தையும் ஜே.வி.பியினர் இந்திய விஸ்தரிப்பு வாதம் எனும் சூத்திரத்துள் இணைத்துத் தமது பதவிக்கான ஒரு சித்தாந்தத்தை வரைந்து கொண்டனர்.

1987 இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அடுத்து இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்புச் சித்தாந்தத்தை முன்வைத்தனர். இந்திய இராணுவம் வெளியேறவே அச்சித்தாந்தம் படுதோல்வியில் முடிந்தது. அச்சித்தாந்தத்தின் பேரில் ஜே.வி.பி ஆரம்பத்தில் விரைவான வளர்ச்சி அடையத் தொடங்கியது. பல இடங்களில் அரசு தனது கட்டுப்பாடுகளை இழக்கும் நிலை தோன்றத் தொடங்கியது. ஆனால் இந்திய இராணுவம் வெளியேறியதைத் தொடர்ந்து ஜே.வி.பியினரை வேட்டையாடுவது அரசிற்குச் சாதகமாய் இருந்தது.

மேற்படி படுதோல்விகளின் பின்னணியில் ஜே.வி.பியினர் தமிழின எதிர்ப்பு இனவாத சித்தாந்தத்தைத் தமது முழுமுதற் சித்தாந்தமாகக் கொள்ளும் நிலை இப்போதுள்ளது. தாம் பதவிக்கு வருவதற்கு அவர்கள் கைக்கொள்ளும் பிரதான ஆயுதமாய் இது உள்ளது.

ஆரம்பத்திலிருந்தே ஜே.வி.பியிடம் இனவாதம் உண்டாயினும் அது தற்போது இந்த இனவாதத்தைத்தான் முழுமுதற் "சித்தாந்தமாகக் கைக்கொள்கின்றது.

சிங்கள மக்கள் மத்தியில் பதவிப் போட்டிக்கான மிக இலகுவான ஒரு கருவியாய் இனவாதம் நிறுவனமயப்படுத்தப்பட்டுவிட்டது. அனைத்து சிங்களக் கட்சிகளும், அமைப்புக்களும், நிறுவனங்களும், பல்கலைக் கழகங்கள் போன்ற கல்விசார் நிறுவனங்களும் இப்பணியில் தம் கைகளைத் தோய்த்துக்கொண்டன.

இவ்வாறு நீண்ட வளர்ச்சிப் பாதையில் நிறுவனமயப்பட்ட இந்த இனவாதத்திற்கு பிரதானமாக ஐ.தே.க, சு.க ஆகிய இருபெரும் கட்சிகளும் முன்னணித் தலைமைத்துவத்தை வழங்கின. ஆனால் தற்போதைய உலக மயமாக்கல் பின்னணியில் பதவியில் இருப்பவர்கள் தீவிர இனவாதத்தைப் பேசுவது வெளிநாட்டு உதவிகளைப் பெறக் கஷ்டம் என்ற நிலை தோன்றிவிட்டது. இதனால் பதவியில் இருக்கையில் இனவாதத்தை அடக்கி வாசிக்க வேண்டிய தேவை மேற்படி இரு கட்சிகளுக்கும் ஏற்பட்டுள்ளது.



அதேவேளை சு.க இதில் ஒரு புதிய தந்திரோபாயத்தைப் பின்பற்றத் தொடங்கியது. அதாவது தீவிர இனவாத ஜே.வி.பி யுடன் கூட்டுச்சேர்ந்து தான் இனவாதத்தை அடக்கி வாசித்த வண்ணம் ஜே.வி.பி யின் தீவிர இனவாத நிலைப்பாட்டுக்குள்ளால் இனவாத வாக்குகளை சேகரிக்கலாம் என்பதே அந்தப் புதிய வழி. இது ஐ.தே.க வை வீழ்த்த உதவும் என்பது ஜனாதிபதி சந்திரிகாவின் கணிப்பு. அக் கணிப்பு ஒரு பக்கம் சரியாக அமைந்தது. அதாவது ஐ.தே.க வை வீழ்த்த அது உதவியது தான்.

ஆனால் இதிலெழுந்த பிரச்சினை என்னவெனில் சு.க வின் மேடைகளையும், அரச வளங்களையும் பயன்படுத்தி ஜே.வி.பியினர் தாம் தேர்தலில் நிறுத்திய 19 உறுப்பினர்களையும் நாடாளுமன்றம் அனுப்பி வைத்தது (18+1). இத்தகைய முழுமுதல் வெற்றி சு.க விற்கு அதிர்ச்சியைக் கொடுத்ததுடன் ஜே.வி.பி யினரிற்கு புதிய அரசியல் அங்கீகாரத்தையும், இனவாதச் சுவையையும் வளர்த்துவிட்டது. விருப்புத் தேர்வு வாக்குகளில் ஜே.வி.பியினர் சு.க வினரை விடவும் அதிக முன்னணிக்கு வந்தமை சு.க விற்கு ஓர் அதிர்ச்சி வைத்தியமும் ஜே.வி.பி க்கு இனவாதச் சொருகக்கான தூண்டலாகவும் அமைந்தது.

1971ஆம் ஆண்டு ஜே.வி.பி கிளர்ச்சியில் ஈடுபட்ட காலத்தில் இலங்கை இராணுவம் 6000 பேரைக் கொண்ட ஒரு சம்பிரதாயபூர்வ இராணுவமாக மட்டுமே இருந்தது. அப்போது ஜே.வி.பியை முற்றிலும் ஒடுக்கியது இந்திய இராணுவத்தின் உதவி மூலம்தான். தற்போதைய இலங்கை இராணுவத்தின் கட்டமைப்பும் வளர்ச்சியும் தமிழீழ விடுதலைப்போராட்ட காலத்தில் ஏற்பட்டதுதான். ஆதலால் இலங்கை இராணுவத்தின் முழுமுதல் சித்தாந்தமே தமிழின எதிர்ப்பு இனவாதச் சித்தாந்தமேயாகும்.

ஜே.வி.பியினை, 1988, 89, 90ஆகிய ஆண்டுகளில் சிங்கள இராணுவம் உயிருடன் ரயர் போட்டு கொழுத்தி அழித்தது. அந்த வகையில் இராணுவத்தினரிடம் கைதியாக இருந்த ஜே.வி.பி தலைவர் றோகண விஜயவீரவை இராணுவம் கொன்ற விதம் இங்கு கவனிக்கத் தக்கது. இதுபற்றி பிரபல ஆங்கிலப் பத்திரிகையாளரான மறைந்த காமினி நவரட்ண பரிமாறிய நம்பகமான தகவல் ஒன்றை

**ஜே.வி.பிக்கு இனவாதம் அதன் சித்தாந்தம்;**
**அது கதிரைக்கு வர யுத்தத்தைக் கோருகிறது;**
**சு.க வை விழுங்க யுத்தத்தை நாடுகின்றது;**

நோக்குவோம். அதன்படி கைது செய்யப்பட்டிருந்த விஜய வீரவை இராணுவத்தினர் ரூபவா ஹினி தொலைக்காட்சி உரைக்குத் தயார்படுத்தினர். அவ்வுரை தொலைக்காட்சிக்காகப் பதிவு செய்யப்பட்டதை உடனடுத்து இராணுவம் அவரை அடித்து முறித்துவிட்டு உயிருடன் பெற்றோல் ஊற்றிக் கொழுத்தினர். தமிழின எதிர்ப்பில் வளர்ந்து மனிதர்களை ஈவிரக்கமின்றிக் கொன்று குவிக்கும் பயிற்சியைத் தமிழர் மத்தியிற் பெற்ற அதே இராணுவம்தான் பின்பு ஜே.வி.பியினரை அவ்வாறு செய்தது. இத்தகைய இராணுவத்தை இனிமேல் ஆயுதப் போராட்டத்தால் வெற்றி கொள்ள ஜே.வி.பியினால் முடியாது. எனவே இந்த இனவாத சித்தாந்தத்தைக் கொண்ட இராணுவத்தை இனவாத சித்தாந்தத்தால் தம்பக்கம் வென்றெடுக்க முடியுமென ஜே.வி.பி இப்போது நம்புகின்றது.

ஜனாதிபதி சந்திரிகாவுடனான தேர்தற் கூட்டின் மூலம் தமக்குச் சாதகமான அரசியற் களத்தை மக்கள் மத்தியில் தோற்றுவித்துள்ள ஜே.வி.பி தற்போது ஒரு யுத்தத்தின் மூலம் இராணுவத்திற்குள் செல்வாக்கை வளர்க்க விரும்புகின்றது.

யுத்தமொன்று தொடங்கினால் ஜே.வி.பி தீவிர இனவாதத்தைத் தூக்கிப் பிடிக்கும். இனவாதத்தைத் தமது பணியாகவும், சித்தாந்தமாகவும் கொண்டு அதற்குப் பழகிப் போய்விட்ட சிங்கள, ஆங்கில இனவாதப் பத்திரிகைகள் ஜே.வி.பி யின் இனவாதத்திற்கு முதன்மை கொடுப்பதன் மூலம் ஜே.வி.பியை முதன்மைப் படுத்துவர். அக்காலத்தில் இராணுவத்திற்குள் ஜே.வி.பி தனது ஆட்களை அனுப்புவதுடன் ஆள்ச்சேர்ப்பிலும் முன்னணி வகிக்கும். அத்துடன் தினமும் ஜே.வி.பியினர் இராணுவத்திற்குத் தொடர்ச்சியான புகழாரங்களைச் சூட்ட வாய்ப்பேற்படும். இப்பின்னணியில் இராணுவத்திற்குள் தமக்கென ஒரு தனியிடத்தைத் தேடமுடியுமென ஜே.வி.பி நினைக்கின்றது.

எந்தப் பத்திரிகைகளை முதலாளித்துவப் பத்திரிகைகளென ஜே.வி.பி முன்பு வசைபாடியதோ அந்தப் பத்திரிகைகள் மூலம் தன்னை முன்னிறுத்தச் செய்ய ஜே.வி.பியினால் முடிகின்றது. அதற்கு இனவாதச் சித்தாந்தமே தனியொரு காரணமாகும்.

இவ்வாறாகத் தமிழரைப் பலியெடுப்பதன் மூலம் தாம் பதவிக்குவர முயலும் ஓர் அரசியல் தந்திரமே ஜே.வி.பி யின் இனவாத சித்தாந்தமாகும். இத்தகைய சிந்தனையின்படி யுத்தத்தைத் தூண்டுவதுதான் ஜே.வி.பி யின் பிரதான நோக்கமாகும். அப்படி ஒரு யுத்தத்தின் வளர்ச்சிப் போக்கில் தாம் பதவிக்கு வந்து விடலாம் என ஜே.வி.பி நினைக்கின்றது. ஜே.வி.பி யின் யுத்த இலக்குகளில் தமிழர் மட்டுமல்ல சு.க வும், ஐ.தே.க வு... கூடவே உண்டு.

போராட்ட வரலாற்று வளர்ச்சிப் போக்கின்படி பார்த்தால் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஒடுக்கலாமென்பது இனிச் சாத்தியமில்லை. இறுதி அர்த்தத்தில் பார்த்தால் அரசியற் சூதாட்டத்திற்காக ஜே.வி.பியை தம்முடன் அணைத்துக்கொண்ட சந்திரிகாவின் அரசியல், சு.க வின் அரசியல் நெருப்பை மடியில் கட்டிய கதையாய் முடியும்.

– சாருமகன் –

# நெருப்பில் கலந்த சிரிப்பு

இரவுப் பூச்சிகளின் ரீங்காரம் விட்டுவிட்டுக் கேட்டுக்கொண்டிருந்தது. கண்கள் இருளை ஊடுருவ காதுகளை கூர்மைப்படுத்தியபடி உலவினேன்.

சருகுச் சத்தம் கேட்ட திசையை நோக்கி துப்பாக்கியைத் திருப்பியபடி பின்னுதை உயிர்ப்பித்தேன். கீரிபோன்று முறைப்பபடி நின்றது.

என்னையறியாமலே பூத்த புன்னகைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, கைக்கடிகாரத்தின் பொத்தானை அழுத்தி நேரத்தைப் பார்த்தேன். மூன்றுமணிக்கு மூன்று மணித்துளிகள் இருந்தன. அடுத்த ஆளை எழுப்புவதற்காக கொட்டிலை நோக்கி நடந்தேன். பனியில் குளித்திருந்த மரக்கிளை உடலோடு உரசி சில்லிட வைத்தது.

கொட்டிலினுள் யாரோ முனகும் சத்தம் கேட்டது. விரைந்து கொட்டிலினுள் புகுந்தேன். அவள் வயிற்று வலியால் முனகிக்கொண்டிருந்தாள். வயிற்றைத் தடவியபடி பார்த்தேன். வயிற்றின் அடிப்பகுதி வீங்கிப்போயிருந்தது.



அவள் சண்டையொன்றில் காலொன்றை முழங்காலுக்குக் கீழ் இழந்தபோதும் பழைய சுறுசுறுப்பு அணுவளவும் குறையாமலே இருந்தாள். பொய்க் காலுடன் அவள் சிரித்தபடி பணியில் மூழ்கிப்போயிருப்பாள். பயிற்சிக்காக மரத்தில் கட்டப்பட்டிருந்த கயிற்றில் யாருக்கும் தெரியாமல் ஏறுவதிலும் ஈடுபடுவாள்.

சுகவீனமென்று சோர்ந்திருந்ததை நான் கண்டதில்லை.

அடுத்த ஆளை எழுப்பி காவல்கடமைக்கு அனுப்பிவிட்டு அவளை மருத்துவ முகாமுக்கு கூட்டிச் சென்றேன். மருத்துவ முகாமை அடைந்தபோது நிலம் வெளிக்கத் தொடங்கியிருந்தது.

அவளுக்கு கல்லடைப்பு நோய்க்கான சத்திரசிகிச்சை நடந்தது. சத்திர சிகிச்சைக்குப் பின் அவளைச் சந்தித்தபோது சிரித்தபடியே சொன்னாள். "அண்ணை! மெடிசினுக்கு வர இன்னும் கொஞ்சம் பிந்தியிருந்தனெண்டா கரும்புலியொராள் வீணா செத்திருக்கவேண்டி வந்திருக்கும்."

அவள் தானும் கரும்புலியாகப் போகவேண்டுமென கடிதத்துக்குமேல் கடிதம் எழுதிக்கொண்டிருந்தாள். ஆனால் இன்னும் அனுமதி கிடைக்கவில்லை. ஆனால் அவள் முயற்சியைக் கைவிடவில்லை.

பணிமாற்றம் காரணமாக நான் வேறு முகாமுக்கு மாற்றப்பட்டிருந்தேன். ஒருநாள் முகம் நிறையச் சிரிப்புடன் வந்து கட்டியணைத்தபடி கரும்புலிக்கான அனுமதி கிடைத்ததைச் சொல்லிவிட்டுப் போனாள்.

பல மாதங்களின் பின் மீண்டும் வந்தாள். பயிற்சிகள் முடிந்துவிட்டதாகவும் இலக்கிற்கான வாய்ப்பு இன்னும் கிடைக்கவில்லையென சோர்வோடு சொல்லிவிட்டுப் போனாள்.

வழமைபோலவே அன்றும் காலையில் நாளேட்டை எடுத்தேன். 'கடலில் கடற்கலம் மூழ்கடிப்பு' என்ற தலைப்புடன் சில கரும்புலிகளின் படங்களும் இருந்தன. அந்தப் படங்களில் அவளின் படமும் முகம் நிறையச் சிரிப்புடன் இருந்தது.

மேசையின் இழுப்பறையைத் திறந்து அவள் எனக்குத் தந்துவிட்டுப்போன படத்தின் பின்பக்கம் திருப்பினேன். அந்த வரிகள் பளிச்சிட்டன.

"வாழ்க்கை வாழ்வதற்காகத்தான்; ஆனால் மக்களின் சுதந்திரமான வாழ்விற்காக வாழ்வை அர்ப்பணிப்பது மேலானது."

பதியப்படாத பக்கங்கள்

ஆ.ந. பொற்கோ

## எல்லோரதும்...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடின நாட்கள் தொடர்ந்தன. இப்போது எல்லாம் ஓரளவு சரி. நீர் வசதிதான் ஏற்படுத்தப்படவில்லை. தூரத்தேயுள்ள தளம் ஒன்றுதான் கைகொடுத்தது. அன்றிரவு களஞ்சியத்தினுள் போத்தல் விளக்கொன்றைத் தூக்கிப் பிடித்தபடி பொருட்கள் எடுப்பதற்காக வந்த போராளி ஒருவர், திடீர் காற்றுக்கு நெருப்பு அலைபாய்ந்து சட்டென தறைந்து கூடி எரிய அவரின் கைகள் தன்னிச்சையாகப் போத்தலை வீசிவிட்டன.

தூரத்தே நின்ற சுதந்திரா மரங்களின் உச்சியைத் தொட்டவாறு உயர்ந்த நெருப்பைக் கண்டு ஓடிவந்து, நெருப்புக்குள் நின்று பொருட்களை எடுக்கமுயன்று கொண்டிருந்த எல்லாரையும் வெளியே தள்ளிவிட்டு, தனியாக தன்னை மறந்த நிலையில் கையில் அகப்பட்டவற்றை எடுத்து வெளியே எறிந்தார். போத்தல்கள் வெடித்து, பேணிகள் உருகி... ஒரு சிலவற்றைத் தவிர எல்லாம் நாசம்.

அமைப்புக்கு நாம் கடன்பட்டிருக்கின்றோம் என்று அந்த நிகழ்வுபற்றி அடிக்கடி அணியினரோடு கதைப்பார் அவர்.

அந்தச் சுடுகலன்கள் அப்போதுதான் அமைப்புக்குப் புதிதாகக் கிடைத்திருந்தன. அவற்றைத் தலைவர் அவர்கள் சிறப்பு அணியினருக்கு வழங்கியிருந்தார். வழங்கப்பட்ட ஆரம்ப நாட்களில் எல்லோரது சுடுகலன்களையும் துப்பரவு செய்வது சுதந்திராதான். ஒரு வாரமளவில் அணியினர் நன்கு பார்த்துப் பழகிய பின்பே, அவர்களைத் துப்பரவு செய்யவிட்டார். சுத்தத்தைச் சரிபார்க்கும் போது எப்படியோ எங்கேயோ ஒரு சிறு தூசு அவரின் கண்களில் பட்டுவிடும். நான்கு கரும்புலிகள் உட்பட பதினெட்டு கடற்புலிகள் தமது உயிர்களை விலையாகக் கொடுத்து தாயகத்துக்கு அனுப்பி வைத்த சுடுகலன்கள் அவை. அவற்றின் உயிர்ப் பெறுமதியை மீளவும் மீளவும் எல்லோருக்கும் நினைவுபடுத்துகின்ற சுதந்திரா, சுடுகலனைத் துப்பரவாக வைத்திருக்காதவர்களை உரிய ஒறுப்புக்குள்ளாக்குவார்.

சிறப்பு அணியின் இரண்டாவது அணி பயிற்சிகளை முடிக்குமுன்பே சுதந்திராவை 'வெற்றிஉறுதி' எதிர் நடவடிக்கைக் களம் அழைத்தது. அதுவரை நாளும் புளியங்குளம் பகுதியில் சிறப்பு அணியின் தாக்குதலணியை வழிநடத்திக் கொண்டிருந்த லெப்.கேணல் நந்தாவின் வெற்றிடத்தை நிரப்ப, சுதந்திரா புறப்பட்டார்.

நெருக்கடி மிகுந்த வன்னிச் சமர்முனையில் நின்ற சிறப்பு அணியில் ஒரு அணியினருக்குப் புதியவகை விமான எதிர்ப்புப் பீரங்கியொன்றை இயக்கும் பயிற்சி வழங்கப்பட்டது. களமுனையில் நிற்கும் தனது அணியினரை மாறிமாறிப் பயிற்சிக்கு அனுப்பிவைப்பார். வேலை நெருக்கடியால் அவரால் தொடர்ச்சியாக அதில் ஈடுபட முடியவில்லை. காப்பரண்களிடையே காவல் உலா போகின்ற வேளைகளில்கூட வருபவரிடம் படித்த விடயங்களைக் கேட்டறிந்தார். நிலத்தில் படங்களைக் கீறிக் காட்டி, அவர்களிடம் சரிபார்த்துக் கொண்டார். வாய்ப்புக் கிடைத்த வேளைகளில் நேரடியாக போகத் தவறவில்லை. பயிற்சி நிறைவில் நடந்த சூட்டுப் போட்டியில் அதிக புள்ளிகளைப் பெற்று, எல்லோரையும் ஆச்சரியப்பட வைக்கவும் தவறவில்லை அவர்.

அகல விரிந்த களமுனைகளெங்கும் சுதந்திராவின் கால்களும் நடந்தன. கரிப்பட்டமுறிப்பு, மூன்றுமுறிப்பு, ஒலுமடு, கிளிநொச்சி... இந்தக் காலப்பகுதியில் சிறப்பு அணி பங்கேற்ற ஊடுருவி உள்நுழையும் தாக்குதல்கள் சிலவற்றில் இவரும் இணைந்திருந்தார்.

1999இல் ஓயாத அலைகள் - 03 சுழன்றடிக்கத் தொடங்கிய அன்று தன் அணியினரோடு ஒட்டுசுட்டான் பகுதியூடு உள்நுழைந்த சுதந்திரா, நெடுங்கேணி, மணலாறு வரையும் போனார். ஆண்டிறுதியில் இன்னுமொரு அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரி அவரை உள்வாங்கிக்கொண்டது.

2000.04.01இல் இயக்கச்சி - முகாவில் பகுதியூடு நடந்த முன்னேற்ற நடவடிக்கையில் ஏனைய அதிகாரிகளோடு அவரும் பங்கேற்றார். தொடர்ந்தும் நீண்டுவிரிந்த களம் இவரைத் தன்னோடு அழைத்துக் கொண்டது.

அமைப்பு எந்த வேளையில் எமக்கு எந்தப் பணியைத் தந்தாலும் ஏற்று செய்யத் தயாராக இருக்கவேண்டும் என்று அடிக்கடி கூறுவார். 'என்னை உடை தோய்க்குமாறு அமைப்பு வேலை தந்தால், உடைகளை எப்படி மிகச் சுத்தமாகத் தோய்க்கலாம் என்று பார்ப்பேனே தவிர, இந்த வேலையை நான் செய்வதா என்று கவலைப்பட மாட்டேன்' என்ற கேணல் கிட்டு அவர்களின் எடுகோளைக் குறிப்பிடுவார். சொன்னதுபோலவே செய்தும் காட்டினார்.

தம்மால் வளர்த்தெடுக்கப்பட்ட போராளியொருவர் தனக்கு மேலான பொறுப்பாளராக வந்தபோதும் அதை இயல்பாக ஏற்றுக்கொண்டு, அவரின் கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டார்.

'கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே - சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்'

ஔவை சொல்லக் கேட்டதை, சுதந்திராவிடம் நேரே பார்த்தோம். அதனால்தான் சுதந்திராவின் இழப்புக்கு எல்லோருமே வருந்தினோம்.

ஒருவரின் இயல்பை அறிந்து பழகுவது, பழக்குவது அவரின் இயல்பு. சிறப்பு அணியினருக்கு காவலரண் வாழ்வு புதிது. அவர்கள் வெட்டிய காப்பரண்கள் இருந்த விதத்தைப் பார்த்த சுதந்திரா, மேலதிக ரவைக்கூட்டு அணியை அணிந்த நிலையில் அவர்களை அதற்குள் இறக்கி ஏற்றி, என்ன பிழை என்று அவர்களிடமே கேட்டு, திருத்துவித்து, காவலரண் வாழ்வுக்குப் பழக்கினார்.


எப்போதும் எடுகோளாக இருப்பது அதுவும் அவரின் இயல்பு. புதிதாக விமான எதிர்ப்புப் பீரங்கி ஒன்று வந்தபோது, பொதி உடைக்கப்படாமல் இவர்களின் கையில் அது கொடுக்கப்பட்டது. குழல்வாய் மூடி மிக இறுக்கமாக இருந்ததால், எல்லோரும் கைவிட்டுவிட, நாற்பத்தைந்து நிமிடங்களுக்கும் மேலாக தொடர்ந்து முயன்று மூடியைக் கழற்றினார்.

தரப்படும் பணிக்கு மறுப்புச் சொல்வது அவரின் வரலாற்றிலேயே கிடையாது. அது இல்லை, இது இல்லை என்று தாமதிக்காமல், எது இருக்கின்றதோ அதைவைத்து வேலையைத் தொடங்கிவிடுவார்.

ஓயாத அலைகள் - 04இல் பங்கேற்ற அவர், கட்டம் - 2 மிகச் சிரமமான பாதைகளோடே நகர்ந்த போதும் நம்பிக்கையோடு அணிகளை வழிநடத்தினார்.

தன்னுடைய கடைசி நாட்களை மேஜர் சோதியா படையணியுடன் முகமாலைப் பகுதியில் கழித்தார் அவர். ஒருபெரும் பலம் தமக்குக் கிடைத்ததற்காக அவர்கள் பெருமையுற முன்னரே, தீச்சுவாலை - 1 எதிர் நடவடிக்கை அவரை அவர்களிடமிருந்து பறித்தது.

ஆனையிறவிலிருந்து பகைவரை நாம் துரத்தியபோது எங்களோடிருந்த சுதந்திரா, ஆனையிறவை மீண்டும் பிடிக்கமுனைந்த படையினரைத் துரத்தியபோது பகைவர்களின் வரவுக்கு மட்டுமன்றி, தன் வரலாற்றுக்கும் முற்றுப் புள்ளியை வைத்துவிட்டார்.



# "இனியும் அவன் ஏன்தம்பி பிடிக்கமாட்டான்... அதுதான் ஊருக்கே வந்திட்டம்"

சேறு நிரம்பிய வயல் வெளியினூடு, கற்கள் சிதறிய அந்தப் பாதை நீண்டு வளைந்து ஓடிக்கொண்டிருந்தது. வீதியோரம் - வயல்களினுள் வாய்க்கால் நீரைத் தேக்கி புதிய உழவுக்காக வயலை சேறாக்கிக் கொண்டிருந்தார்கள்.

மட்டக்களப்பின் வெல்லாவெளி சந்தியிலிருந்து பாலையடி வெட்டை டானியல் கடையடி சந்தியூடாக நீண்ட வயல் வெளிகளினூடும், ஆங்காங்கேயிருந்த சிறிய தென்னம் தோப்புகளினூடும் ஓடிய வீதியால், எங்கள் உந்துருளி ஓடியபோது மட்டக்களப்பின் இன்னுமொரு எல்லையோரக் கிராமமான வைக்கேல, 38ம் கொலனி எங்களை எதிர்கொண்டது.

தென் தமிழீழத்தின் எல்லாச் சிங்கள எல்லையோரக் கிராமங்களைப் போலவே, 38ம் கொலனியிலிருந்தும் பதின்நான்கு வருடங்களின் முன்னர் மக்கள் விரட்டியடிக்கப்பட்டிருந்தனர். சொந்த நிலத்தை இழந்து, சுயமான தொழிலை இழந்து, நிலையான தம் வருமானத்தை இழந்து இடம் பெயர்ந்தவர்களாக, அகதிகளாக ஏதுமற்றவர்களாய், ஊர்விட்டு ஊரோடி மீண்டும் மீண்டும் அகதி வாழ்வினுள், மறைப்புகளற்றகுடிசைகளினுள் அவலவாழ்வு வாழ்ந்து, போதிய உணவற்று, கல்வியற்று தசாப்தமாய் அலைந்தவர்கள் மீண்டும் தமது சொந்த ஊரில்



குடியேறியிருந்தனர்.

எப்போதோயிருந்த, அவர்களுக்கு வரும் பிரதான வீதி சிதைவடைந்திருந்தது. இப்போதுதான் நீரோடத் தொடங்கியிருந்த வாய்க்காலில் நீர் கரையின் புற்களை மேவி பாய்ந்துகொண்டிருந்தது. 38ஆம் கொலனி, வைக்கேல, நானமடு என நாற்திசையும் ஒவ்வொரு ஊரின் பெயருடன் எப்போது அந்தச் சந்தியில் நடப்பட்ட கல்லு, ஓரங்கள் உடைந்து, புழுதிமண்டி எழுத்துக்கள் அழிந்த போதும் நிமிர்ந்து நின்றது அவ்வூரின் மக்கள்போல.

பதின்நான்கு வருடங்களின் பின் தம் சொந்த ஊரில் குடியேறியவர்களுடன் அந்தச் சந்தியில் நின்று பேசத் தொடங்கினேன். நவக்கிரி குளத்திலிருந்து நீர் கொண்டுவந்த அந்தப் பெரிய வாய்க்கால் அவர்களுடைய ஊரை வளைத்து ஓடிக்கொண்டிருந்தது.

அங்கிருந்த முதியவர் ஒருவர் பேசத் தொடங்கினார்.

"ஆதிகாலம் தொட்டு இது தமிழர்களின் வெள்ளாண்மை நிலந்தான் தம்பி"

"1956-57இல தான் இஞ்ச நிரந்தரமா நாங்கள் குடியேறினாங்கள். முதலில, போகம் போகம் வந்து குடில்கட்டி வெள்ளாண்மை செஞ்சனாங்க,

"மறுகா, சிங்களவர் எங்கட பூமியை நிரந்தரமா ஆக்கிரமிக்கப் போறான் எண்டதாலதான், 56, 57 இல, இராசமாணிக்கத்தாரின்ர காலத்தில நாங்க வைக்கேலவில் குடியேறினம்"

என தமது ஊரின் கதையை சொல்லத் தொடங்கினார்.

"இதுதான் இஞ்சாலை, பதுளை றோட்டில போய் ஏறுற இந்த றோட்டின்ட கடைசி கிராமம் தம்பி"

"எங்களுக்கு எல்லை உந்த பிள்ளையார் கோயிலடி ஏத்தம். தாண்டினா சிங்களவன்ர 38ஆம் கொலனி தொடங்கிது"

என அப்பால் தூரத்தே தெரிந்த பிள்ளையார் கோயிலடியை சுட்டிக் காட்டியவாறு சொல்லிக் கொண்டிருந்தார்.

"எங்களுக்கு அங்கால இரண்டு பக்கமும் 38ஆம் கொலனி, சின்னவத்தை, கல்லுவெட்டை, நெடியவெட்டை, நானமடு என்டு நீட்டுக்கும் தமிழ் கிராமங்கள்தான் இருந்திச்சி தம்பி. ஆனா எல்லாம் எல்லைக் கிராமந்தான் தம்பி,

"எங்கட 38ஆம் கொலனிக்கு சிங்கள 34ஆம் கொலனி, 36ஆம் கொலனி எல்லை"

"சின்னவத்தை கல்லுவெட்டை, நெடியவெட்டை தமிழ்க் கிராமத்துக்கு சின்னவத்தை சிங்கள ஊர் எல்லை"

"நானமடுவுக்கு 10ஆம், 11ஆம் கொலனி எல்லை.

"இஞ்சால 38ஆம் கொலனி, 39ஆம் கொலனி தமிழ்க் கிராமத்திற்கு பதுளை எல்லை தம்பி.

"எங்கட எல்லா ஊருகளையும் வளைச்சு சிங்களவன்தான் இருந்தான் தம்பி"

சிங்கள எல்லையோரக் கிராமமான அவர்களுக்கு அருகிருந்த சிங்களக் குடியேற்றங்களும், அக்குடியேற்றப் பாதுகாப்பிற்கென முகாமிடப்பட்டிருந்த இராணுவத்தினரும், விசேட அதிரடிப்படையினரும் நிரந்தர அச்சுறுத்தலாகவே இருந்தனர்.

ஆங்காங்கே சிறுசிறு சம்பவங்கள் நிகழ்ந்தாலும், 38ஆம் கொலனியில், பெரிதாக எந்தவொரு சம்பவமும் நடக்காமலேயிருந்தது. மட்டக்களப்பில் எல்லையோரக் கிராமங்கள் படிப்படியாக அழிக்கப்பட்டு, சிங்கள இராணுவத்தாலும், காடையர்களாலும் சூறையாடப்படும் செய்திகள் கேட்கும் போதெல்லாம், தமக்கும் எப்பவோ இது நிகழ்ந்தே விடும் என அவர்கள் அஞ்சியிருந்ததாகச் சொன்னார்கள்.

இறுதியாக அவர்கள் எதிர்பார்த்தது நடந்தேவிட்டது. அது 1990ஆம் ஆண்டின் யூன் மாதத்தில் ஒரு காலைப்பொழுது. சின்னவத்தை பக்கமா மூங்கில்வெட்டை என்ற இடத்திலதான் அது முதலில் நிகழ்ந்தது.

"விடிய வெள்ளாமை பாக்கப்போன எங்கட ஊரான் ஒருத்தன், இளையவர் என்று அவர சொல்லுறனாங்கள்"

அவரை வெள்ளாமை வாய்க்காலுக்க வைச்சு கத்திக்குத்து காயத்தோட சவமாய் எடுத்தம்"

அதுதான் இறுதியாக அவர்கள் விரட்டப்படும்போது இடம்பெற்ற முதலாவது கொலை. என்னுடன் கதைத்துக்கொண்டிருந்த செல்லத்தங்கம் என்ற பெண் தொடர்ந்தார்.

"சின்னவத்தையுக்க இருந்த சிங்களவன்தான் விடிய தண்ணிகட்ட போனவனை கத்தியாலகுத்தி சாகவச்சிட்டாங்கள்.

அண்டைக்கு, இரவிரவா 36ம் கொலனி சிங்கள ஊருக்க ஆமிக்காரன்ட வாகனங்கள் இரச்சலோட ஓடிக்கொண்டிருந்தது.

ஊர்க்கரையில இருந்த சனமெல்லாம் பயத்தில் இராவிரவா வந்து நடு ஊருக்க படுத்திச்சதுகள்"

"ஊருக்க ஒரே பதட்டமா போச்சது"

அந்தப் பொழுதுகளை விபரிக்கும்போது இப்பொழுதும் அவருடைய கண்ணில் பதட்டமிருந்தது. கண்களில் அந்த நாளின் நினைவிருந்தது.

"மறுநாள் விடிய, யூன் பதின்மூன்றாம் திகதியெண்டு நினைக்கிறன், எங்கட ஊருக்குள்ள சிங்கள ஆமி பூந்திட்டான்"

அருகிருந்த மற்றையவர் பேசத் தொடங்கினார்.

"பிறகால, சிங்களக் காடையரும் சிங்களச் சனமும் வந்ததுகள்.

"ஆமிக்காரன் கண்டபடி எல்லாரையும் பிடிச்சு சுட்டு, வெட்டி, பிள்ளையளை ஆக்கினைப்படுத்தி வந்தான்.

"தப்பினவையெல்லாம் கையில் கிடைச்சதோட வெல்லாவெளி, காக்காச்சிவெட்டை பக்கமா ஓடத்தொடங்கிட்டம்.

"பிறகால வந்த சிங்களவன் எங்கட வீடுகள உடைச்சு சாமான் சக்கட்டையள வாகனங்களில ஏத்திப் போனதாம், போகும்போது வீடுவாசல கொழுத்தினதாம் இஞ்சின மறைஞ்சு இருந்து மறுகா தப்பி வந்தவை சொல்லிச்சினம்"

இப்படித்தான், அன்றைய பொழுதில் அவர்களின் ஊர் சிங்கள இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டது. எரிந்து சுடுகாடாகிய அவர்களின் ஊரில் இராணுவம் நிலையாகக் குந்திக்கொண்டது. அந்த மக்களின் சொத்துக்களும் வளங்களும் அருகிருந்த சிங்கள கிராம மக்களால் சூறையாடப்பட்டன.

"எங்கள ஊர் நல்ல செளிப்பா இருந்த ஊர்தம்பி.

வீட்டுக்கு வீடு நெல்லுக் களஞ்சியம். வருடம் இருபோக வெள்ளாமை. ஒடேக்க ஒவ்வொருகுடும்பமும் இலச்சக்கணக்கில தங்கட சொத்துக்களை விட்டுத்தான் ஓடினதுகள்"

"எங்கட ரக்ரரைக் கூட நாங்க எடுக்கேல்ல"

- அன்பமாறன் -

தாமிருந்த அன்றைய வாழ்வையெண்ணிப் பெருமூச்சுவிட்டார். இப்போது ஒற்றைக் கலப்பையுடன் வயலுக்குச் சென்றுகொண்டிருந்த செல்வராசு.

அன்றிலிருந்து பதின்மூன்று வருடங்கள் தமது சொந்தமான, வளமான நிலத்தை விட்டு அவர்கள் எல்லோரும் அகதிவாழ்வு வாழ்ந்தனர். அன்றாட வாழ்வுக்கே அல்லற்பட்டு மீண்டும் மீண்டும் தம் ஊரில் ஏதாவது எடுப்பதற்காய், தம் பிறந்த மண்ணைப் பார்ப்பதற்காய் ஊர் வந்தவர்கள் இராணுவத்தால் பிடிக்கப்பட்டனர். சித்திரவதையின் பின் சுடப்பட்டனர். காணாமல் போயினர். இறுதியாக அவர்கள் மீளக்குடியேறும்வரை, நூற்றிருபதுக்கும் மேற்பட்ட தம் உறவுகளை அவ்விரு ஊர்களும் - 38ஆம் கொலனி, கண்ணகிபுரம் - சிங்கள இராணுவத்தினரின் துப்பாக்கி வாய்களுக்குப் பலிகொடுத்திருந்தது. பலரை காணாமல்போனோர் ஆக்கியது.

600 வரையான குடும்பங்களை பதின்மூன்று வருடங்களின் முன் கொண்டிருந்த 38ஆம் கொலனிக் கிராமம் கடந்த 2003 டிசம்பர் மாதமளவில் 300 வரையான குடும்பங்களுடன் மீள்குடியேறிக் கொண்டது.

திசைக்கொன்றாய் சிதைந்து, கொல்லப்பட்ட தமது உறவுகளையும் வளமான வாழ்வையும் எண்ணியவாறு இன்று தளராத நம்பிக்கையுடன் அவர்கள் தம் மண்ணில் குடில்களை அமைக்கின்றனர். பதின்மூன்று வருடங்களின் பின்னர் அவர்களுடைய வாய்க்காலில் ஓடும் தண்ணீரில் நிரம்பிய வயல்கள் வெள்ளாமைக்கு காத்திருக்கின்றன.

ஊரில் பாடசாலை, நெற்களஞ்சியங்கள், வைத்தியசாலை என எல்லா வசதிகளுடனும் இருந்த அந்த ஊரில் மக்கள், காடாகிப்போன தம் ஊரின் மத்தியில் வளைந்து செல்லும் பாதையை தாமாகவே திருத்திவிட்டு தமது காணிகளைத் துப்பரவாக்குகின்றனர். தமது சிறார்களுக்கு ஒரு பாலர் பாடசாலையையும் அமைத்துவிட்டு வாழ்வின் எதிர்காலக் கனவுகளுடன் காத்திருக்கின்றனர்.

முன்னர், மத்திய மருந்தகமாக அவர்களது சொற்களில் சொல்வதானால் "தரும ஆஸ்பத்திரி"யாக இருந்த கட்டடம் புற்கள் மண்டியிருந்தது. நான் அதனருகே நடந்துபோய் அக்கட்டிடத்தை பார்த்தபோது என்னருகில் நின்ற தாய் சொன்னார்

"என்ன மாதிரி இருந்தம் தம்பி. இப்ப ஒரு சின்ன வருத்தமெண்டால் கூட மருந்தெடுக்க இடமில்லை.

"என்ன வருத்தமெண்டாலும் களுவாஞ்சிக்குடிக்குத்தான் போகவேண்டும்"

அவர் கூறும்போது போக்குவரத்து வசதிகளற்ற, அந்த எல்லைக் கிராமத்தில் நம்பிக்கையோடு மீள்குடியேறிய மக்களின் நடுவில் நின்று, களுவாஞ்சிக்குடி வைத்தியசாலைக்கு மருந்தெடுக்கப் போகும் தூரம்பற்றி நான் எண்ணிப்பார்த்தேன். எனக்கு தவிப்பாயிருந்தது. அவர் தொடர்ந்தார்.

"இராவில் ஏதும் வருத்த துன்பமெண்டால் ஒண்டும் செய்யேலாது தம்பி.

பூரான் கடிச்சுக் கூட மருந்தில்லாம இஞ்ச ஆட்கள் செத்திருக்கினம் தம்பி"

நடந்தவைகளுக்கும் அப்பால் அவர்கள் எல்லோரும் நம்பிக்கையோடிருந்தனர்.

ஊரெல்லையில் இருந்த முகாமிலிருந்தும், அருகிலிருந்த சிங்களக் குடியேற்றத்திலிருந்தும் மீண்டும் ஒரு புயல் தம்மை நோக்கி வராது என யாருமே நம்பியிருக்கவில்லை. ஆனாலும் அவர்கள் தம்மூரில் வாழுகின்ற திருப்தியிலிருந்தனர். ஊரெல்லை முகாமிலிருந்து நேற்றுக்கூட திடீரென இராணுவ, விசேட அதிரடிப்படையினர் ஊருக்குள் நுழைந்து வீதிகளால் சென்றதாக சொன்னார்கள்.

ஆனாலும் அவர்கள் உறுதியோடிருந்தனர். இப்போது எனக்கும் சொல்லியிருந்தனர்.

"56இல் வெள்ளாமை நிலமாயிருந்த எங்கட நிலத்தை சிங்களவன் அடாத்தாய்ப் பிடிச்சுபோடுவான் எண்டதாலதான் தம்பி இஞ்ச வந்து நிரந்தரமா குடில் போட்டனாங்கள்.

"இனியும் விட்டா அவன் ஏன்தம்பி எங்கட ஊரைப் பிடிக்கமாட்டான்?

"அதான் இப்பவும் ஊருக்கே வந்திட்டம்"

## அளவிடமுடியாத ஆழங்கள்

உயிர் என்பதன் பெறுமதி ஒவ்வொருவருக்கும் அவரவர் மனதுக்கு ஏற்ப வேறுபடும். அடிப்படைத் தேவைகளனைத்தும் நிறைவேறி வாழ்க்கையை வசந்தமாக அனுபவிப்பவர்களுக்கு நூறுவருட ஆயுள் போதாமலிருக்கலாம். வாழ்க்கையில் எதிர்நீச்சல் போட்டும் தோல்விகளைத் தொடராக சந்தித்துக் கொண்டிருப்பவர்களுக்கு இருப்பினை விடவும் சாவு பெறுமதியான ஒன்றாகத் தோன்றலாம். ஒரு விடுதலைப் போராளிக்கு...?

போராட என்று முதலடி எடுத்து வைத்த அந்த வேளையிலிருந்தே அந்தப் போராளியினது உயிர் உடல் எல்லாம் எந்த நேரத்திலும் எதையும் எதிர்கொள்ளத் தயாராகி விடுகின்றன.

தமிழீழம் என்ற இலட்சியம் சுவாசமாகி விடுகின்றபொழுது அவயவங்கள் இழக்கப்பட்ட பின்னும் உடலினுள் குருதி அசைகின்ற வரைக்கும் சக்கர நாற்காலிகளிலும் படுக்கைகளிலும் இருந்தபடியே தொடர்கின்றது போராட்டப் பணி.

ஒரு போராளியின் உயிர் இப்படித்தான் போகுமென்று இதுவரைக்கும் எந்த விதியும் எழுதப்படவில்லை. கரும்புலிகள் இதற்கு விதிவிலக்காகின்றனர். இது சாவுடன்




விளையாடிய ஒரு வீரனின் கதை.

அந்தக் கடற்புலிப் போராளி ஒரு முக்கிய கடமையிலிருந்தான். அவன் ஒரு சாரதியும்கூட. அவனுக்கு ஒருசில குழந்தைகளுடன் பழக்கமிருந்தது. அந்தக் குழந்தைகளை அவனும் குழந்தைகள் அவனையும் நேசிக்கின்றார்கள். தேசக் கடமையில் விளைந்த புனிதமான பாசம் அது.

அது ஒரு மிக மோசமான காலப்பகுதி. எந்தநேரம் கிபிர் மற்றும் மிக் ரக விமானங்கள் வரும் என்று யாருக்கும் தெரியாது. ஆனாலும் முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்குத் தெரியும் அடி எங்கே விழும் என்று.

முதலில் எல்லோரும் பயந்ததுண்டு. பாடசாலைக் குழந்தைகள் மேசைகளின்கீழ் பதுங்கியதுமுண்டு. காலப்போக்கில் தங்களுக்கு அடிவிழாது என்ற துணிவு அனைவருக்கும் வந்துவிட்டது. புதிதாக வந்து பயந்து போகின்றவர்களுக்குக் கூட மற்றவர்கள் தெம்பூட்டுவார்கள் "அது கடலைக்குத்தான் போகுது".

ஆம். எங்களுக்கு வழமையாய் அடிவிழுகின்ற அந்த தளத்தின் இயல்பான பெயரை "கடலை" என்று வைத்துவிட்டார்கள் எல்லோரும். அந்த தளத்திற்கு அருகில் இருந்த மக்கள் பாவம். தினமும் செத்துப் பிழைக்கின்ற வாழ்க்கை அவர்களுக்கு. அன்றைக்கும் அப்படித்தான், "கடலை நோக்கிச் செல்கின்ற குண்டுவீச்சு விமானங்களைப் பார்த்தபடி மக்கள் தமது வழமையான பணிகளில் ஈடுபட்டிருந்தார்கள். அந்தப் போராளி அன்று "கடலை" தளத்தில் வேலையாக நின்றிருந்தான். விமானங்களின் சத்தத்தினால் பரபரத்தது தளம். விமானம் வந்தால் பதுங்கு குழிகளுக்குள் போக வேண்டுமென்பது அனைவருக்கும் இடப்பட்ட கட்டளை. எனினும் அதனை ஒருபோதும் கேட்பதில்லை போராளிகள். உயிரைவிடப் பெறுமதியான ஆயுதங்களையும், பொருட்களையும் அப்படியே விட்டுவிட்டு வெறும் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள யாருக்குத்தான் மனம் வரும்? மக்கள் தம் வியர்வையைக் காசாக்கிப் பெற்றுத் தந்தவையல்லவா இந்த ஆயுதங்களும் ஏனையவையும்...!

அந்தப் போராளிக்குப் பொறுப்பான ஒரு கடமை இருந்தது. அதைச் சரியாகச் செய்யவேண்டும் என்பதில் அவன் முனைப்பாக இருந்தான். அந்த நேரத்தில் அந்த இடத்தில் ஒரு பெரும் சிக்கல் உருவாகியது. மறைப்புக்கள் ஏதுமற்ற நிலையில் பெறுமதியான பொருட்களுடன் கொள்கலன் ஒன்று நின்றுகொண்டிருந்தது. பொருட்களை நகர்த்திக் கொண்டிருக்கையில் விமானங்கள் வந்துவிட்டன. விமானிகளின் கண்களில் அது தென்படுவதைத் தவிர்க்க முடியாது.

என்ன செய்வது? எல்லோர் நெஞ்சையும் குடைந்த கேள்வியது. எப்படியாவது பொருட்களைக் காப்பாற்றியே தீரவேண்டும். இந்த உறுதியான முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க அந்த வீரன் தயாரானான்.

தனது உருமறைப்பு வாகனத்தை வெளியில் எடுத்தான் அவன். இலக்குத் தேடி வட்டமிட்டுக் கொண்டிருந்த விமானங்களிற்குத் தெரியும் வகையில் அவனது வாகனம் வெட்டவெளிக்கு வந்து ஓடத்தொடங்கியது. எப்படியும் ஒரு குறிப்பிட்ட நேரம் விமானங்களுக்குப் போக்குக் காட்டினால் போதும் அதற்குள் மற்றவர்கள் உருமறைப்பினைக் கச்சிதமாய்ச் செய்துவிடுவார்கள்.

தானாக வெளிவந்த இலக்கினை விமானங்கள் கண்டுகொண்டன. விடுதலைப் புலிகளின் தளபதிகள் யாரோ தப்பி ஓடுவதாகவும், தமக்கு நல்ல இரை கிடைத்து விட்டதாகவும் விமானிகள் நினைத்திருக்கக் கூடும். அவற்றின் கவனத்தைத் தன்மீது குவிய வைப்பதில் ஈடுபட்டிருந்த அந்தச் சாரதி தனது உயிர்பற்றி அந்த நேரம் என்ன நினைத்திருக்கக் கூடும்?

ஒரு சிறு பொழுதில் விமானங்கள் தமது இலக்கினை வேட்டையாடி விட்டன. வழமையாக இலக்குப் பிசகி விழுந்து தொலைக்கின்ற குண்டுகள் இன்று பார்த்து அருகில் விழுந்ததில் எது நடக்கக் கூடாதென்று, கூட இருந்தவர்கள் நினைத்தார்களோ அது நடந்துவிட்டது. அந்தப் போராளி வீரச்சாவடைந்து போனான். எனினும் வெற்றி விமானங்களுக்கல்ல. அவனது வீரச்சாவு நிகழ்வில் பலரும் கலந்துகொண்டார்கள். எனினும் அவன் எங்கே? என்று ஆவலாய்க்கேட்ட அந்தக் குழந்தைகளிடம் அவனது வீரச்சாவு பற்றிச் சொல்ல முடியவில்லை. போராளிகளுடன் உறவு வைத்தால் இப்படித்தான் முடியும் என்று எப்படிச் சொல்லுவது? ●

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

ஹக்கமாக்களும் பிரசன்னமாக இருந்ததாக மன்னிப்புச்சபை பெற்ற சாட்சியங்கள் கூறுகின்றன. இவர்கள் கறுப்பினப் பெண்களை நேரடியாகத் தாக்கியதோடு வசை பாடியுமுள்ளனர். இவர்களது சொந்த இருப்பை உறுதிப்படுத்த கறுப்பின மக்கள் விரட்டப்பட வேண்டியது அவசியமாகுமென்பது இங்கே கவனிக்கத்தக்கது.

இந்த 17 மாதகால வன்செயல்களில் எல்லாத் தரப்புக்களிலும் 1200 பேர் வரை கொல்லப்பட்டிருப்பதாக அல் பஷீரே கூறியிருக்கிறார். அப்படியானால் 2 அல்லது 3மில்லியன் இறப்புகள் ஏற்பட்ட கொங்கோவில் ஏற்படாத கரிசனை டார்பர் மீது வெளிநாடுகளுக்கு குறிப்பாக வல்லரசுகளுக்கு ஏற்படுவதற்கான காரணம் என்ன?

இங்கிலாந்து பிரதமர் ரோனி பிளேயரிடம் சூடான் பற்றி கேட்கப்பட்ட பொழுது, "இது குறித்த அறமுறையான பொறுப்பு எங்களுக்கு உள்ளது என நான் நினைக்கிறேன். இதில் எங்களால் முடிந்த எந்த வழியையும் பயன்படுத்த வேண்டும்". பிரித்து ஆண்ட சூடான்பற்றி அறமுறை பொறுப்புப்பற்றி கவலைப்படும் இங்கிலாந்துக்கு அதேபோல் ஆளப்பட்ட இலங்கை குறித்து அறமுறைகள் நினைவிராதது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆனால் இது குறித்து கருத்துக் கூறிய ஸாண்டேர்ஸ் ஆய்வு மையத்தைச் (SANDERS RESEARCH ASSOCIATES) சேர்ந்த ஜோண் லாப்லான்ட் (JOHN LAUGHLAND), "1998, டிசம்பரில் ஈராக்குக்கும் 1999இல் யூகோஸ்லாவியாவுக்கும் 2000தில் சியரா லியோனுக்கும் 2001, ஒக்ரோபரில் ஆப்கானுக்கும் கடந்த மார்ச்சில் ஈராக்கிற்கும் படைகளை அனுப்பியபோது அறமுறை சார்ந்த தேவைகள் இருப்பதாகவே குறிப்பிட்டார். எனினும் இந்தப் போர்களுக்கான காரணங்களாகக் குறிப்பிடப்பட்டவை அனைத்துமே பொய்யானவை" என்று தெரிவித்திருக்கிறார்.

இப்பொழுது எமது TV திரைகள் பட்டினியில் வாடும் குழந்தைகளை காட்டுகின்றன. நாங்கள் சூடானை தாக்கினால் கை கால்களற்ற குழந்தைகளையும் இறந்த குழந்தைகளையும் அவை காட்டும் என்று அவர் மேலும் கூறியிருக்கிறார்.

எனவே ஊடகங்களின் கரிசனை சூடான் நெருக்கடியில் அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதால் ஏற்பட்டதா என்பதை தெளிவாகக் கூறமுடியவில்லை.

டார்பர் பிரதேசத்தில் 'கறுப்புத் தங்கம்' ஆம், மசகு எண்ணெய் - இருக்கிறது.



சவுதியுடனான அமெரிக்காவின் மசகு எண்ணெய் ஒப்பந்தம் விரைவில் முடிவுக்கு வருகிறது. ஆப்கானில் காலூன்ற முடியவில்லை. அடுத்த இலக்கான ஈராக்கிலோ எண்ணெய்க் குழாய்கள் வெடித்துச் சிதறிக் கொண்டிருக்கின்றன. இதனால் அமெரிக்க - இங்கிலாந்து கூட்டு புதிய எண்ணெய் வளங்களைத் தேடுகின்றது.

இதுவரையில் சூடானின் ஆகப் பெரிய முதலீட்டாளர் என்ற இடம் சீனாவுக்கே இருந்தது. தென்புல டார்பரில் உள்ள எண்ணெய்க் கிணறுகள் சீன தேசிய பெற்றோலிய நிறுவனத்தின் கைகளிலேயே உள்ளன. சூடானின் இதுவரை பயன்படுத்தப்படாத எண்ணெய் வளத்தை இலக்கு வைத்து தலையீட்டுக்கான "அறக் காரணங்களை ஆங்கில - அமெரிக்க கூட்டுகள் தேடிக்கொண்டிருக்கின்றன.

இதற்கிடையே 19 மாதகாலம் இடம்பெற்ற முரண்பாடுகளை அடுத்து 2004, ஏப்ரலில் சூடான் அரசுக்கும் SLM, JEM ஆகியவற்றுக்குமிடையே போர்நிறுத்தம் ஒன்று நடைமுறைக்கு வந்திருக்கிறது.

இந்தியாவுக்கான சூடானியத் தூதுவர் என்னதான் 'காற்றில் பூசணிக்காயை மறைக்க' முயன்றாலும் ஐ.நா பாதுகாப்புச் சபையானது 30.07.2004 அன்று, டார்பர் பிராந்தியங்களில் வன்செயல்களை மேற்கொண்டிருப்பதாக முதலில் அமெரிக்காவால் குற்றம் சாட்டப்பட்ட ஜன்ஜாவிட் குழுப் படைகளை சூடான் அரசு 30 நாட்களுக்குள் கட்டுப்படுத்தவேண்டும் என்று 13-0 வாக்குகளால் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. சூடான் எண்ணெய் வளத்தை தற்போது வைத்திருக்கும் சீனாவும் இன்னொரு முஸ்லிம் நாடான பாகிஸ்தானும் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

"இது நீதியற்ற நிலைப்பாடு" என ஆத்திரமும் அதிர்ச்சியும் பொங்க தெரிவித்திருக்கும் காட்டும் அரசு, இந்த வேகத்தில் டார்பர் பிரச்சினை பாதுகாப்புச்சபை வரை சென்றிருப்பது குறித்தும், பிராந்திய பின்னணியிலிருந்து அது வலிந்து வெளியில் இழுத்தெடுக்கப்பட்டிருப்பது பற்றியும் கவலை தெரிவித்துள்ளது. இந்த நெருக்கடியைத் தீர்க்க காட்டும் ஆபிரிக்க யூனியன் மற்றும் அரபுலீக் எடுக்கும் முயற்சிகளை பாதுகாப்புச்சபை வேண்டுமென்றே அலட்சியப்படுத்தியுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் புடுங்குப்பாடுகளிடையே ஐ.நா செயலர் கொபி அனான் நேரடியாக சூடான் சென்றும் அவரது சமரச முயற்சிகள் வெற்றிபெறவில்லை.

யுத்தநிறுத்த அவதானிப்பாளர்கள் 120பேர் டார்பரில் ஆபிரிக்க யூனியனால் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அவர்களது பாதுகாப்புக்கென 300 ஆபிரிக்க யூனியன் படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அவர்களது ஆணையில் அவதானிப்பாளர்களை பாதுகாப்பது மட்டுமே அடங்குகிறது சிவிலியன்களைப் பாதுகாப்பது அடங்கவில்லை. இந்த பாதுகாப்புப் படையை அமைதி காக்கும் படையாக மாற்றியமைப்பது தொடர்பான முன்மொழிவுகளை ஆபிரிக்க யூனியன் முரண்பட்டு நிற்கும் தரப்பினருக்கு கையளித்துள்ளது. அவர்களது பதில் வினைகளைப் பொறுத்து முடிவு மேற்கொள்ளப்படும் என்று ஆபிரிக்க யூனியன் தெரிவித்துள்ளது.

இந்த முரண்பாட்டினுடைய இன்னொரு பக்கவிளைவாக ஆபிரிக்க யூனியனின் இந்தமாதக் கூட்டத்துக்கு தலைமை தாங்கும் பொறுப்பில் இருந்து சூடான் விலகிக்கொண்டுள்ளது.

ஆபிரிக்க யூனியனின் ஏற்பாட்டில் சூடான் அரசுக்கும் SLM, JEM அமைப்புகளுக்குமிடையே 2004, ஓகஸ்ற் மாதத்தில் அமைதிப் பேச்சுவார்த்தைகள் இடம்பெறவிருக்கின்றன. தாங்கள் கறுப்பர்கள் மட்டுமல்லாது அரபுக்களும் அல்ல என்பது வலிந்து உணர்த்தப்பட்டிருக்கும் டார்பர் பிராந்திய மக்களுக்கு நியாயம் கிடைக்குமென எதிர்பார்ப்போம். ●

# தேசத்தின்(ல்) கடமை

வன்னி மண்ணை போரரக்கள் ஏறி மிதித்துக் கொண்டிருந்த காலம். ஜயசிக்குறுப் படைகள் மாங்குளத்தில் முட்டிக்கொண்டு நிற்கின்றன. அலையலையாய் வரும் படைகளுக்கு போராளிகளும், துணைப்படை வீரர்களும் அணைபோடுவதற்காக உயிரைக்கொடுத்து உடலை மண்ணாக்கிக் கொண்டிருக்கின்றார்கள். போருக்கு இயற்கை அரணாகவும் மக்களின் சுகவாழ்விற்கு முரணான காரணிகளையும் அதிகம் கொண்டிருக்கிறது அப்பிரதேசம். பெரு மழையில் அதில் பல இடங்கள் தீவுகளாகும். மலேரியா மக்களின் இறப்பு வீதத்தைக் கூட்டும். பொது மருத்துவமனைகள் நோயாளிகளால் நிரம்பி வழியும். காலை எட்டரை மணிக்கு ஆரம்பிக்கப்படும் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற அதிகாலை மூன்றரை மணிக்கு மருத்துவமனை முன்றலில் கூடிவிடும் காட்சி, பச்சிளம் குழந்தைகளும் வயோதிபர்களும் மலேரியாவாலும் பனிக்குளிராலும் உதறலெடுக்க, ஒரு துண்டுத் துணியால் போர்த்து அவர்கள் வெறுந்தரையில் படுத்திருக்கும் அவலம். ஒவ்வொரு நாளும் ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் பல மைல்கள் நடந்து வந்திருப்பர். அவர்களில் சில நூறுபேர் மருந்தின்றி, உணவின்றி மீண்டும் வீடு திரும்புவர்.

தமிழ்த் தேசிய பலத்தின் அத்திவாரத்தையே கிளற நினைக்கும் எதிரியுடன் மூர்க்கமாக மோதும் போராளிகளுக்கும், கண்மண் தெரியாமல் பகைவன் பொழியும் குண்டு மாரியில் இறந்தவர்கள் போக அங்கம் சிதைந்தவர்களுக்கும் உடனடி உயிர்காப்பு சிகிச்சை செய்வதற்கே வளங்கல் காணாமல் இருக்கும். பொதுமருத்துவமனை மருத்துவர்களின் வேலைப்பழுவைக் குறைக்க போராளி மருத்துவர்களும் சேவையிலீடுபடுதல் அத்தியாவசியமானது. அன்றும் அவ்வாறுதான் அதிகாலை மூச்சுத் திணறிய ஆறுமாதக் குழந்தையொன்று சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழந்துவிட்டது. அந்நிகழ்வு கொடுத்த அடியால் போராளி மருத்துவன் வாணன் கதிகலங்கிப் போய்விட்டான். ஆற்றாமையால் வந்த கண்ணீர் போர் வெம்மையாய் வரும் மூச்சால் ஆவியாவதை உணர்கின்றான்.

நடுநிசியாகியும் அவனால் நித்திரை செய்ய முடியவில்லை. அதிகாலை நேரத்துடன் மருத்துவமனை சென்றால்தான் மேலதிகமாக மக்களுக்கு சிகிச்சை வழங்கமுடியும் என நினைத்து கடமையுணர்வை உதவிக்கு அழைத்தும் அவனால் நித்திரைகொள்ள முடியவில்லை. அடர்ந்த காட்டினுள் அமைந்திருக்கும் போராளிகளுக்கான மருத்துவமனையில் அவன் தங்கியுள்ளான். அப்பொழுது கானகப் பாதையில் இரைந்துவரும் வாகன ஒலி கேட்கிறது. "இண்டையான் நித்திரை இத்தோட சரி, சண்டை நடக்காதபடியால் பாம்புக் கடியாய் இருக்கும். அல்லது தவறுதலான வெடிவிபத்தாய் இருக்கும்". தன்னுள் எண்ணியபடி எழும்பியிருக்கின்றான். வாகனமும் இவன் தங்ககத்திற்கு முன்னால் வந்து நிற்கின்றது. இம்ரான் பாண்டியன் படையணி மருத்துவப் போராளியும் இன்னொரு போராளியும் இவனிடம் வருகின்றனர். "டொக்ரர்! அம்மா ஒராள் வருத்தத்தில படுத்திருக்கிறாவாம் போய்ப் பார்க்க வரமுடியுமா?". அவன் தன் தொனி தாழ்த்தி தயவாய்க் கேட்டதிலேயே கொடுக்கும் சங்கடத்திற்காக கேட்கும்



மன்னிப்பையும் கலந்துவிட்டிருந்தான். தலையசைப்பின் மூலம் சம்மதம் தெரிவித்தவன் மருத்துவப் பொருட்கள் அடங்கிய பையையும் எடுத்துக்கொண்டு அவர்களுடன் செல்கின்றான். இரகசிய பாதுகாப்புக் காரணங்களால் பொதுமக்களை இவ்வாறான இடங்களுக்கு அழைத்து வருவது தவிர்க்கப்பட்டுள்ளது. அதற்குப் பரிசாக பயணக் களைப்பை இவர்கள் அடிக்கடி அனுபவிக்கவேண்டி வரும். அம்மா....' என்று அப்போராளி கூறியது இவனுக்கு வீட்டு ஞாபகத்தைக் கிளறிவிட்டிருந்தது. 'இப்ப அம்மா எப்படி இருப்பா? அவவுக்கு பிறசர், நீரழிவு என நாலைந்து வருத்தம். எல்லாம் நான் இயக்கத்திற்கு வந்ததாலதான் வந்ததாம். சனம் கதைக்குதுகள். இந்தச் சண்டை முடிய அம்மாவுக்கு ஏதாவது செய்யவேண்டும். அப்பதான் பெத்த கடனை அடைக்கலாம்.' பலவாறு எண்ணியவன் பெருமூச்சொன்றை வெளிவிடுகின்றான்.

பிரதான வீதி தவிர்த்து குறுக்குப் பாதையால் இறங்கி இவர்கள் வாகனம் பயணிக்கின்றது. அப்பொழுதுதான் வீதியைக் கடந்திருக்கும் யானைக் கூட்டம் போட்ட லத்திகளும் அவை முறித்த மரக்கொப்புகளும் அவர்கள் கண்களில் படுகின்றது. ஒருவரை ஒருவர் அர்த்தமுடன் பார்த்துக்கொள்கின்றனர். தங்கள் துப்பாக்கிகளையும் பார்த்துக்கொள்கின்றனர். குக்கிராமம் ஒன்றில் வந்து நிற்கின்றனர். அவ்வூரைச் சேர்ந்த ஒருவர் வழிகாட்ட அந்தக் குடிசையை வந்தடைகிறார்கள். சிறிதளவு வெளிச்சம்தானும் அங்கு இல்லை. வெளியில் நின்று "அம்மா..... அம்மா...." என அழைக்கின்றார்கள். சத்தம் வரவில்லை. ரோச்லைற் வெளிச்சத்தில் குடிசைத் தட்டியை விலக்கி உள்நுழைகின்றார்கள். அடுப்படியில் படுத்திருந்த பூனையொன்று எழும்பி, சோம்பல் முறித்து, சாம்பலை உதறிவிட்டு ஓடுகின்றது. குடிசை மூலையில் முனகியபடி சுருண்டு கிடக்கும் அம்மாவை காண்கின்றார்கள். இதயத்தில் எழுந்த வேதனையின் கரங்கள் தொண்டைக்குழியை எட்டிப் பிடிக்கின்றது. "அம்மா..... அம்மா....." என, குனிந்து கூப்பிட்டுப் பார்க்கின்றான். பேச்சில்லை. முனகலுடன் மூச்சுமட்டும் வெளிவருகின்றது. நெத்தியைத் தொட்டுப் பார்க்கின்றான். காய்ச்சல் அனலாய் கொதிக்கின்றது. தனது மருத்துவப் பையிலிருந்த உடல் வெப்பமானியை வைத்து காய்ச்சலை அளந்து பார்க்கின்றான். தனது நாக்கைக் கடிக்கின்றான். வாகனத்தை கிட்டக் கொண்டுவரச்சொல்லி அதன் வெளிச்சத்தை கொட்டிலின்மீது பாய்ச்சி அடிக்கச் சொல்லுகின்றான். அதன் உதவியில் தனது ஏனைய பணியினைத் தொடர்கின்றான். பரிசோதனைக்காக இரத்த மாதிரியையும் எடுத்துக் கொள்ளுகின்றான். காய்ச்சலைக் குறைப்பதற்கான ஊசி மருந்தையும் ஏற்றுகின்றான். திரவ ஊடகம் ஏற்றுவதற்கு வசதியாக உள்ளதா என முகட்டை அண்ணாந்து பார்க்கின்றான். மழை வெய்யிலுக்கு பாதுகாப்புக்காகப் போடப்பட்ட கொட்டில் கிழிசல்களுடைய நுளம்புவலை போன்று காட்சியளிக்கின்றது. உணவுமின்றி உதவியுமின்றி நோயால் மிதிபடும் அவ் அம்மாவின் நிலை இவனுக்கு கழிவிரக்கத்துடன் சிறிது கோபத்தையும் ஏற்படுத்துகின்றது. அருகிலிருந்த வீட்டுப் பெண்மணி ஒருவரை அழைத்து அம்மாவுக்குச் செய்யவேண்டிய பராமரிப்புகளையும் மருந்துகள் கொடுக்கவேண்டிய முறையையும் விளக்கிக் கூறுகின்றான். திரவ ஊடகம் சிறிது உள்நுழைந்ததாலும், காய்ச்சல் குறைந்ததாலும் அம்மா கண்விழித்துப் பார்க்கின்றா. அரைமணி நேரம் அங்கு நின்றிருப்பார்கள். "அம்மாவுக்கு பிள்ளைகள் இல்லையா?, உதவிக்கு ஒருத்தரும் இல்லையா?". இவனது கேள்விகளுக்கு அருகில் நின்ற பெண்மணிதான் பதில் கூறுகின்றா. "ஒரு மகன்தான் இருக்கு...." அவள் கூறி முடிப்பதற்குள் இவனிற்கு அம்மகனில் கோபம் வருகின்றது. 'பொறுப்பற்ற பிள்ளை' மனதில் எண்ணியதை வெளியில் கூறாமல் "ஆள் எங்க?" கேட்கின்றான். "பெடியன் இயக்கத்தில...." கேட்ட பதிலால் உள்ளே சங்கடப்படுகின்றான்.

இவனை கூட்டிவந்த மருத்துவப் போராளியை அழைத்துச் சொல்கின்றான், "நாளைக்கும் அம்மாவை வந்து பாருங்கோ, பிளட் றிசல்ட்ட பார்த்திட்டு மிச்ச மருந்தத் தாறன். எதுக்கும் மகன் எந்தப் பிரிவு என விசாரிச்சு ஒருக்கா வந்து பார்க்கச் சொல்லுங்கள்". அம்மாவின் அருகிலிருந்து தலையைத் தடவியவன் "நாங்களும் உங்கள் பிள்ளைகள்தானம்மா ஒன்றுக்கும் யோசிக்கவேண்டாம்". மென்மையாகக் கூறுகின்றான். எழுந்து வெளியில் வந்தவன் "நான் அடிக்கடி வந்து பார்க்கிறது சாத்தியமில்லை. முடிந்தளவுக்கு நீங்கள் வந்து பாருங்கள்" சொல்லியவன் குடிசையைவிட்டு வெளியில் வருகின்றான். வாசலில் நின்ற மற்றப் போராளியும் இவர்களுடன் இணைந்துகொள்ள முகாம் நோக்கிப் பயணிக்கின்றார்கள்.

சிலநாட்கள் கடந்து விட்டிருந்தது. மீண்டும் அம்மருத்துவப் போராளி இவனிடம் வருகின்றான் "அம்மா எப்படியிருக்கிறா?", "இப்ப நல்ல சுகம். ஆனால்...." என இழுக்கின்றான். என்ன என்பது மாதிரி

**தூயவன்**

புருவத்தை உயர்த்தி நெற்றியைச் சுருக்கிக் கேட்கின்றான். எதுவும் கூறாமல் சட்டைப் பையில் இருந்த கடிதத்தை எடுத்து நீட்டுகின்றான். "நேற்று நடந்த தாக்குதலில வீரச்சாவடைந்த கரும்புலி உங்களுக்கு எழுதியது". "எனக்குமா...?!" எனக் கேட்டபடியே நடுங்கும் கரங்களால் அதனை வாங்குகின்றான். "ஆரான்?". "அந்த அம்மாவின் மகன், அதுவும் அன்று எங்களுடன் வந்தவன், நேற்றுத்தான் எனக்கும் தெரியும்". புயலாய் எழுந்து இடியாய் இறங்கிய இவ்வசனங்களால் அவன் உறைந்துபோனான். விடுதலையடையும் தேசத்தில் தொடரப்படவேண்டிய பணிகள்பற்றி எண்ணத்தொடங்க சிறிது நேரம் எடுத்தது. ●

சூரியன் அடிவானுக்குக் கீழிறங்கி வந்துகொண்டிருந்தான். வெண்முகிற் கூட்டங்கள்போல நீள்வரிப் புலிச் சீருடை அணிந்த சிறப்பு அணிகள் அந்த மைதானத்தில் அணிவகுத்துக் கொண்டிருந்தன. இன்னும் சிறிது



நேரத்தில் எங்கள் சூரியன் அங்கே உதிக்க இருந்தான்.



# எதிரிக்கு சிம்மசொப்பனம்

**— தமிழழகன் —**

சிறப்பு உந்துகணை செலுத்தும் அணியின் புதிய பிரிவினரின் வெளிவருகைக்கான தினம் அன்றாகும். நூற்றுக்கு மேற்பட்ட ஆண்களும் பெண்களுமாக ஒன்றரை வருடத்திற்கும் மேலான செயற்திறன் படையப் பயிற்சிகளைப் பெற்றிருந்தனர். அவர்களின் போராட்ட வாழ்வில் அன்றைய தினம் அதி சிறப்பிற்குரியதாகும்.

தமிழீழ விடுதலைப்போராட்ட வரலாற்றில் காலத்திற்குக் காலம் முக்கியத்துவமான பாய்ச்சல்கள் நடந்தேறியிருக்கின்றன. களத்தில் எதிரி விடுக்கும் ஒவ்வொரு சவால்களையும் எதிர்கொண்டு முறியடித்து வெற்றிகொண்டே ஆகவேண்டிய தேவைகள்தான் இன்றைய மாபெரும் விடுதலை அமைப்பைக் கட்டி அமைத்தது. அவ்வாறு ஒரு காலத்தில் எதிரி விடுத்த பெரும் சவாலை முறியடிக்கவென உருவாக்கப்பட்டதே சிறப்பு உந்துகணை செலுத்தும் பிரிவு ஆகும்.

அது 'சூரியக் கதிரால்' நாம் யாழ்.குடாநாட்டிலிருந்து இடம்பெயரச் செய்யப்பட்ட காலம். அந்தப் போரில் எதிரி தனது கவசப் படையணியையும் பீரங்கிப் படையணியையும் பெருமெடுப்பில் ஈடுபடுத்தியிருந்தான். அதில் அவன் வெற்றியும் கண்டிருந்தான். இதன்மூலம் எதிரி ஈழப் போரரங்கில் முக்கியத்துவமான ஒரு சவாலை விடுத்திருந்தான். அதுவே இனிவரும் போரரங்குகளில் தமது கவசப் படைகளும் பீரங்கிப் படைகளும் போரின் தலைவிதியைத் தீர்மானிக்கும் வண்ணம் செயலாற்றும் என்பது.

சூரியக்கதிரின் பின் போரிடும் இரு தரப்பினருமே மாபெரும் போர்த் தயாரிப்புக்களில் ஈடுபட்டோம். அபாயகரமான யாழ்ப்பாண வெற்றியின் முன்னால் உள்ள அபாயத்தை நீக்கிவிடுவதற்கான திட்டமிடல்களில் எதிரியும், வன்னியை வலுவான ஒரு போராட்டத் தளமாக்குவதற்கான திட்டமிடல்களிலநாமுமாக தீவிரமாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தோம்.

வன்னிப் பெருநிலத்தைத் துண்டாடி எமது போராட்டத்தின் மரபுப் போராற்றலைச் சிதைத்து விடும் நோக்கில் ஒரு பாரிய படையெடுப்பிற்கான போர்த் தயாரிப்புக்களில் எதிரி ஈடுபட்டான். அதற்காக எதிரியினது கவசப் படையணிகளும் பீரங்கிப் படையணிகளும் பெருமளவிலான புனரமைப்பைப் பெற்றன. நவீன போரியல் யுக்திகளைக் கையாளும் பயிற்சித் திட்டங்களில் இப் படையணிகள் ஈடுபடுத் தப்பட்டன. மொத்தத்தில் இவை போரின் நம்பிக்கை நட்சத்திரங்கள் ஆக்கப்பட்டன.

அதுபோலவே இத்தகைய எதிரியை எதிர்கொண்டு வெற்றிவாகை சூடவல்ல படைய உட்கட்டமைப்புகளை உருவாக்குவதிலும் பலப்படுத்துவதிலும்



தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பும் ஈடுபட்டது. அதன் விளைவாகப் பிறப்பெடுத்தவையே லெப்.கேணல் விக்ரர் கவச எதிர்ப்புப் படையணியும் கேணல் கிட்டு பீரங்கிப் படையணியும் ஆகும்.

தமிழீழ விடுதலைப் போரரங்கில் பீரங்கிகளும், கவச எதிர்ப்பு ஆயுதங்களும் ஏற்கனவே நீண்ட காலமாக பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. ஆனால் அவை ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட தனித்துவமான கட்டமைப்பைக் கொண்ட படையணிகளாக இருந்திருக்கவில்லை. இப்போது இவை ஒரு வலுவான கட்டமைப்பைப் பெற்றிருந்தன. தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் அதிதீவிர கண்காணிப்பிற்குள் குறுகிய தொரு காலப்பகுதியில் இப்படையணிகள் உருவாக்கம் பெற்றன. உலகப் போரியலில் விடுதலைப்புலிகள் அறிமுகப்படுத்திய பல்வேறு போரியல் நுட்பங்களில் பலவற்றை இப்படையணிகளும் உள்ளடக்கியிருந்தன.

'ஜெயசிக்குறு' நடவடிக்கை எதிரியால் தொடக்கப்பட்டது. அப்போது இப்படையணிகள் எமது போராளிகளுக்கு நம்பிக்கை ஊட்டியும் எதிரியின் மனோபலத்தைச் சரித்தும் தம்மீதான எதிர்பார்ப்பை நிறைவேற்றத் தொடங்கின. எதிரியின் கவசங்களை உடைத்து நொருக்கி அவர்களை பின்னோக்கித் திருப்பும் எமது கவச எதிர்ப்பு அணிகள் எமது போராளிகளின் கவசங்களாகத் திகழ்ந்தன.

'ஜெயசிக்குறு'வின் தொடக்கத்திலிருந்து அதன் முடிவுவரையான காலப்பகுதியில் எமது கவச எதிர்ப்புப் படையணியால் பல பத்துக்கணக்கான 'ராங்கி'களும் இதர கவசவாகனங்களும் தகர்த்தெறியப்பட்டிருந்தன.

களத்தில் எதிரிக்கு உற்சாக மூட்டவும் எமது போராளிகளுக்கு பீதியூட்டவுமென பிரவேசிக்கும் ராங்கிகள் எமது வீரர்களால் தகர்க்கப்பட்டு களத்தின் நடுவே பற்றியெரியும் வேளைகளிலெல்லாம் எதிர்மறைவான விளைவுகளே ஏற்படுத்தப்பட்டன. ஒரு கட்டத்தில் சண்டைக் களத்திற்கு ராங்கிகளை எதிரி இறக்கமாட்டானா? என எமது போராளிகள் அங்கலாய்த்திருந்த நிலைகூட ஏற்பட்டது. அந்தப் பெரும் சமரின் இறுதிக் கட்டத்தில் தனது கவசப் படையணியைச் சேர்ந்த வீரர்களை முன்னணிக் காப்பரண்களில் கடமைக்கு அமர்த்தவேண்டிய துர்ப்பாக்கியம் எதிரிக்குக் கிட்டியது.

இவ்வாறு களத்தில் எங்கும் வெற்றிவாகை சூடிய ஒரு சிறப்புப் படைப்பிரிவை மேலும் விரிவாக்கும் நோக்கில் தற்போதைய சிறப்பு உந்துகணை செலுத்தும் படைப்பிரிவை உருவாக்கும் திட்டம் தலைவரால் திட்டப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் அனைத்துப் படையணிகளிலிருந்தும் தேர்வுசெய்யப்பட்டிருந்த வீரர்கள் சுமார் ஒன்றரை வருடப் பயிற்சிநெறியைப் பூர்த்தி செய்திருந்தார்கள். அவர்களது அணிவகுப்பை ஏற்றுக்கொண்டு, அவர்களுக்கான சான்றிதழ்களையும் அறிவுரைகளையும் வழங்குவதற்காக தேசியத் தலைவர் அவர்கள் வருகை தந்திருந்தார்.

போராளிகள் அனைவரும் உற்சாகம் உற்றிருந்தனர். அவர்கள் பெற்றிருந்த நீண்டதும் கடினமானதும் செயற்திறன் மிக்கதுமான பயிற்சிகள் மூலம் அவர்கள் அவ்வாறு தோற்றமளித்தார்கள். அவர்கள் மத்தியில் தேசியத் தலைவர் உரையாற்றினார். "தற்போது ஏற்பட்டு வரும் சூழ்நிலைகள் பற்றி நீங்கள் விளங்கிக் கொண்டிருப்பீர்கள்...." எனத் தொடங்கிய தலைவர், இந்த உந்துகணை செலுத்தியினதும் இதற்கான படையணியின் உருவாக்கம் பற்றியதுமான வரலாற்றைப் பற்றிக் கூறத்தொடங்கினார்.

"....இந்த இலங்கைத் தீவிற்கே முதன் முதலில் இவ்வுந்துகணை செலுத்தியை அறிமுகம் செய்தது நாங்கள்தான். அப்போது கொக்குளாயில் நாம் செய்த பதுங்கித் தாக்குதல் ஒன்றில் இதைப் பயன்படுத்தியிருந்தோம். நாம் பயன்படுத்திய இந்த ஆயுதம் என்னவாக இருக்கும் என ஆய்வு செய்வதற்காக ஒரு மாநாட்டையே கூட்டியிருந்தார்கள். இவ் விவகாரம் அன்று படையினரிடையே பரபரப்பாகப் பேசப்பட்டது. 'புலிகள் பயன்படுத்திய புதிய ஆயுதம் அடிக்கும்போதும் ஒரு பெரிய சத்தம் கேட்கிறது, வெடிக்கும் போதும் பெரிய சத்தம் கேட்கிறது' என்று அவர்கள் கதைத்துக்கொள்ளும் அளவிற்கு அது ஒரு புதினமான விடயமாக இருந்தது...." என்று அவர் கூறியபோது உந்துகணை செலுத்தி வைத்திருந்த போராளிகளிடையே பெருமை தோன்றியது.

இவ்வாறு, அறிமுகப்படுத்தப்பட்ட காலத்திலிருந்தே எதிரிகள் மத்தியில் பாரிய தாக்கத்தை இவ் உந்துகணை செலுத்தி ஏற்படுத்தியிருந்தது. "ஆயுதங்களிலும் விட முக்கியமானது அதைக் கையாள்பவர்களின் திறனே" என்ற தலைவர் அவர்களின் சிந்தனைக்கு இணங்க ஒரு அதி சிறப்புப் பயிற்சியைப் பெற்றுக்கொண்ட சிறப்பு அணியினரிடம் இன்று இவ்வுந்துகணை செலுத்திகள் சென்றடைந்திருக்கின்றன. அவை இனிவரும் காலங்களில் எம்மீது போர் தொடுக்கும் எதிரிகளுக்கு சிம்ம சொப்பனமாக அமையும் என்பதையே கடந்த 06.08.2004 அன்றைய நிகழ்வு உணர்த்தி நின்றது. ●



---

(01ம் பக்கத் தொடர்ச்சி)

தெம்பூட்டிச் சென்றுள்ளார்.

பேரினவாதிகளின் சமாதான விரோதச் செயற்பாடுகள் புலிகள் இயக்கத்திற்கு எதிரான நிலைப்பாட்டுடன் மட்டும் நின்றுவிடவில்லை. நோர்வே மீதும் - கண்காணிப்புகுழு மீதும் சிங்களப் பேரினவாதிகள் கருத்துத் தாக்குதல் தொடுத்துள்ளனர். நோர்வே அரசு பக்கசார்பாக செயற்படுகின்றது என்று சிங்கள அமைச்சரவைப் பேச்சாளர் குற்றம் சாட்டியுள்ளார். சிங்களப் பேரினவாதத்திற்கு ஆதரவாகச் செயற்படாத அனைவரையும் புலிகள் ஆதரவாளர்கள் என்றே சிங்களப் பேரினவாதிகள் முத்திரை குத்த விரும்புகின்றனர்.

ஆட்சி அதிகாரத்திலுள்ள அரசாங்கமே இவ்விதம் பேச்சு அனுசரணையாளர்களான நோர்வே அரசையும் - கண்காணிப்புக் குழுவையும் குற்றம்சாட்டி அவர்கள்மீது அபாண்டமாகப் பழி போடுவதை அரசியல் ரீதியில் சாதாரண விடயமாக எடுக்கமுடியாது. சமாதான முயற்சியில் நோர்வேயின் அனுசரணைப் பாத்திரத்தைச் சந்திரிகா அரசும் அகற்ற முயன்றுள்ளதோ என்ற நியாயமான சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

ஒட்டுமொத்தத்தில் இலங்கையின் சமாதான முயற்சி சிங்களப் பேரினவாதத்தின் இரும்புப்பிடிக்குள் சிக்குண்டுள்ளதென்பதே இன்றைய அரசியல் யதார்த்தமாகும்.

கடந்த மூன்றாண்டு காலமாக - சர்வதேசத்தின் பகீரத முயற்சியால் உருவான, சமாதானச் சூழல் - வழமை போலவே - இம்முறையும் பேரினவாதிகளால் நாசமாகும் அவலத்தையே எதிர்கொண்டுள்ளது என அஞ்சவேண்டியுள்ளது.

புலிகள் இயக்கம் ஒருதலைப் பட்சமாக சமாதான சூழலைப் பாதுகாக்க முடியாது. சிங்களப் பேரினவாதிகளின் போர் முழக்கத்திற்கு அணைபோட சர்வதேச சமூகம் தன் பொறுப்புணர்ந்து முன்வரவேண்டும் என்பதே இன்றைய அவர்களின் கடப்பாடாகும். ●

# கைக்கு எட்டும் வரை கால்கள் நடக்கும்.

நாளாந்தும் எம் தேசவாசலிலேறி
கடலும் சூரியதேவே!
விரியுடங்கா வேகனே!
வைகறைப் பொழுதில் உன் முன்னே வரிசைகட்டி
திமிர்ந்தெழுந்து நிற்கிறோம்.
உப்பும் வழியுரைக்கும் வெப்பேடனே!
உன் திருமுக ஒளிப்பில் பலம்கொண்ட சேனையாய்
இந்தோ அணியுகத்துள்ளோம்.
இசையா மழைநரும் ஆதவனே!
சோதனைகள் மைமர் சூழ்ந்த வேளையில்
ஒன்றாகக் கூடி உறுதியெடுக்கிறோம்.
ஏழு கதிரைகள் பூட்டிய தேரில் ஏறுக,
எம் பக்கமாய்.
ஒளிபரவும் இக்காலைப் பொழுதில்
கைகளை உயர்த்திச் சபதிருக்கிறோம்.
கதிரவனே!
வெளிச்சம் நல்கும் வேந்தே!
எம் வாயிலிருந்து வரும் வார்த்தைகளில் பொய்யில்லை.
எந்தப் புனைவுமில்லை.
எம் தலைவனைப் போல ஒளிரும் தகையுடைய
உண்மைகளால் நிறைந்தன எம் மொழிகள்.
பரிதித் தெய்வமே!
பாராளும் ஐயனே!
வழிகடந்த பயணத்திசையில்
நீ காண வெகுதூரம் கடந்துவந்தோம்.
சோர்விலாதிருந்தது நடைபயணம்.
எதிர்கொண்டு இடறிய தடைகள் தாண்டி
பயலை எதிர்த்து முன்னேறினோம்.
கருவேலம் பற்றையின் முட்கள் கீறவும்
வழியெங்கும் கருநாகங்கள் சீறவும்
இடையிடையே காட்டாறுகளைக் கடந்துமல்லவா
நடந்தது எம் பயணம்.
ஆயினும் எத்தனை கம்பீர நடையிருந்தது.
வியர்த்தொழுக விளங்கின மேனி.
உரத்துப் பாடியபடி
ஊர்மனைகளுக்குள் அடியபடி
புழுதிமூடிய நடந்தது பேரணி.
காட்டு வழியினிலும்,
கனவி வரம்பினிலும்,
அலையேற்றும் கடலோடியிலும்
எம் பயணமிருந்தது.
தலைவனே தலைப்பயணியாய்,
தளபதிகள் அருகனையாய்
வியாக்கிரசேனை விரைந்தது.
வழியெங்கும் மக்கள் வெள்ளம்
சமுத்திரச் சங்கமமாய் கலந்தது.
என்னே வீரிய அழகென வியந்தது உலகு.
நெடுகாலத்தின் பின்னே
தமிழனை மீண்டும் கணக்கிலெடுத்தது வரலாறு.
மேலிருந்தவாறு நீயும் பார்த்தாய்
அவிழும் நசிந்த இச்சினிக் குஞ்சுகளின்
தோளாந்தட்டி வாழ்த்துரைத்தாய்.
அஞ்சற்க என்றவன் அளித்த வார்த்தையில்
குஞ்சுகள் புதிய பலம் பெற்றன.
கூறுபட்டிருந்த தேசம் ஒன்றாய் குவிந்து
எல்லைகளை வகுத்துக் கொண்டது.
பேதமற்ற பெருமிதத்தில் புன்னகைத்தபடி
அடிமைத்தனங்கள் எங்கள் கையினாலது.
அச்சுறுத்த அடக்குமுறையாக புதறியது.
இனியும் போரிறது தொடருமானால்
தீய இரண்டாவது திண்ணம் என
முன்று கொடுக்கும் சக்தின் முன்னெச்சரிக்கை செய்தன.
அடுத்த முறையாகுக இருப்பது ஒற்றைவழியல்ல
பலவழிகளைத் திறப்பதில் அவர்கள் கில்லாடிகள்.
எதிர்த்தைப் போருவதிலும்



போருவதை எடுப்பதிலும்
கூச்சம் அவர்களுக்கில்லை.
குரல்வளையை நெரித்துக் கொல்வார்கள்.
முடியாது போனால்
முத்தமிடுவது போல நச்சுத்திரை வைப்பார்கள்
ஆதிக்கச் சக்திகள் பேதிகொடுத்ததும்
அடக்குமுறை அரசு அச்சுறுத்தலை மாற்றியது.
போராயுதத்தைக் கீழே போட்டுவிட்டு
பேச்சுவார்த்தையைக் கையிலெடுத்தது.
மீண்டுமொரு நாடகத்தின் அரங்கு திறந்தது.
சமாதானமென்பது நாடகத்தின் நாமம்.
நியாயமான தீர்வென்பது அரங்கில் பாடும் பாடல்.
தருணம் இதுவெனக் கணித்து
ஒடிவந்தது உலகம்.
வீதி செப்பனிட ஒருவன்,
வீடு கட்டித்தர இன்னொருவன்,
குளாய்க் கிணறு வெட்ட ஒருவன்,
குறிக்கக்கூட கட்ட மற்றொருவன் என
பச்சிற மேனியரால் நிறைந்தன எம் தெருக்கள்.
ஒப்பனையிட்ட கத்தாழைகளின் படையாப்பில்
ஊர்முகம் உருமாறிப் போகிறது.
தார்வீதியும், கரைத்தகரமும்
இதத்துரிய பிளாஸ்ரிக் பண்டமும்
எழும்புத் துண்டுகள் என்றறியாமல்
வீறிலம் விலைபாடுகிறது.
எளிதும் உலைவழுத்தியாய் உயிர்ளிகிறது
இன்றும் விடுதலை நெருப்பு.
பொறிக்கும் பெரிய கடவுளே!
கடற்கின்கான சூரியப் பெருமானே!
நேற்றுவரை எதிர்காலக் கனவு சுமந்து
நடந்தன இளநரம்பன்களும், நாதகளும்.
சிரித்தபடி போன சின்னப்பூக்கள்
விடுதலைக்கான நெருப்பில் வேந்தன.
திட்டமிட்டாக எம்தேசமெல்லாம்
கொட்டுண்டு கிடக்கின்றன உயிர்க்குவைகள்.
பகைமேயுறந்த களங்களில்
எதிர்கொண்டு மோதி
கையிருந்து தவறிப்போயினர்.
இத்தனைக்குப் பின்னரும்,
இத்தனை விலைகொடுப்புக்குப் பின்னரும்
முதுக வளைந்து மண்டியிடுமா எம் வம்சம்?
தருவதைத் தருக எடுத்துக் கொள்வோமென
சமாதானப் பல்லக்கிலேறச் சம்மதிப்புமா?
ஊனிலிருந்து கலைந்த நாட்களின் நினைவுகள்
இத்தனை கலபமாய் மனதிருந்து அழியுமா?
எம் முற்றத்திலும்,
தலைவாசலிலும்
ஒன்றாகக் கிடந்த உதிரக்கொடைகள்
எட்டாத் தொலைவினின்றாவியதே.
கண்டங்கள் எல்லாவற்றிலும் கரைபெறுக்கி
பிரிவென்னாளில் கண்ணீர் வடிக்கின்றனவே.
எப்படி இவையெல்லாம் மறந்து
சுலபமாய் சமரசப்பட முடியும்?
ஈழத் தமிழனுக்கு இரண்டு வழியில்லை
ஒற்றை வழியே உண்டு.
போராடிப் பெறுகின்ற தாயகமே அது.
சூரிய தேவே!
உன்முன் நின்று உறுதியெடுக்கிறோம்.
தன்னிலை மாறாத் தலைவனின் வழியில்
இனியும் எம் பயணம் தொடரும்
இலக்கு எம் கையில் எட்டும் வரை.



வியாசன்

**புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்**